பக்கங்கள்: இருபது

# உதயன்

Registered as a Newspaper

விலை ரூபா 15.00

www.uthayan.com

சுடர் 24 வள்ளுவர் ஆண்டு 2040 மாசி 10 ஞாயிற்றுக்கிழமை (22.02.2009) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர்:088

# மக்களை பயங்கரத்துக்குள் தள்ளாதீர்!

# இறுதி இரத்தக் களரியை நிறுத்துங்கள்!!

## இரு தரப்புக்களிடமும் ஐ.நா. அதிகாரி ஹோம்ஸ்



கொழும்பு, பெப்ரவரி 22

உங்களிடையேயான மோதல்களால் மக்களைப் பயங்கரத்துக்குள் தள்ளாதீர்! உடனடியாக "இறுதி இரத்தக் களரியை" நிறுத்துங்கள். அவ்வாறு செய்யாவிட்டால், அது இங்கு வாழும் மக்களையும் இந்த நாட்டையும் மிகப்பெரும் பயங்கரமானநிலைக்குத் தள்ளும்.

இவ்வாறு ஐக்கிய நாடுகள் சபையின் மனிதாபிமான விவகாரங்களுக்கான பிரதிச் செயலாளர் நாயகம், ஜோன் ஹோம்ஸ் அரசாங்கத்துக்கும் விடுதலைப்புலிகளுக்கும் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

மூன்று நாள் உத்தியோகபூர்வ விஜயத்தை மேற்கொண்டிருந்த ஹோம்ஸ் நேற்று இலங்கையை விட்டுப் புறப்படுவதற்கு முன்னர் மேற்கண்ட வேண்டுகோளை விடுத்துச் சென்றுள்ளார். (20 ஆம் பக்கம் பார்க்க)

## கப்பல் சேவை இன்று முதல் வழமைக்குத் திரும்புகின்றது

யாழ்ப்பாணம்,பெப்.22

காங்கேசன்துறைக்கும் திருகோணமலைக்கும் இடையிலான பயணிகள் கப்பல் சேவை இன்று முதல் வழமைக்குத் திரும்புவதாக யாழ். அரச அதிபர் கே. கணேஷ் தெரிவித்தார்

இன்று செல்லும் கப்பலில், மாகாண சபை ஏற்பாடு செய்துள்ள உள்ளூராட்சி ஊழியர்களுக்கான செயலமர்வில் கலந்து கொள்பவர்கள் செல்லமுடியும் என்றும்

(20 ஆம் பக்கம் பார்க்க)

## வவுனியா நலன்புரி நிலையங்களில் அகதிகள் அச்சத்துடனேயே வாழ்கின்றார்கள் - ஹோம்ஸ்

கொழும்பு, பெப்.22

வவுனியாவில் உள்ள நலன்புரி நிலையங்களில் தங்கியுள்ள அகதிகள் மிகுந்த அச்சத்துடனேயே வாழ்கின்றார்கள். அவர்கள் சுதந்திரமாக நடமாடத் தடை உள்ளது. முகாம்களை சுற்றிவர இராணுவத்தினரும் படை அதிகாரிகளும் நிற்பதால் என்னுடன் கதைப்பதற்கே அச்சமுற்றதை அவதானித்தேன்.

இப்படித் தெரிவித்திருக்கிறார் ஐ.நா. மனிதாபிமான விவகாரங்களுக்கான பிரதிச் செயலாளர் நாயகம் ஜோன் ஹோம்ஸ்.

அவர் வவுனியாவுக்கு விஜயம் செய்த பின்னர் மேலும் கூறியதாவது:-

போர்த் தமிழ் அகதிகளின் மீள்குடியமர்த்தல் மற்றும் (20 ஆம் பக்கம் பார்க்க)

## சிவராத்திரியன்று ஊரடங்கு நீக்கம்

யாழ்ப்பாணம், பெப்.22

சிவராத்திரி தினமான நாளை திங்கட்கிழமை இரவு ஊரடங்கு நீக்கப்படுவதாக யாழ்.இராணுவக் கட்டளைத் தளபதி தெரியப்படுத்தி உள்ளதாக யாழ்.அரச அதிபர் கே.கணேஷ் அறிவித்துள்ளார்.

இந்துமக்கள் சிவராத்திரி விரதத்தை அனுஷ்டிக்க வசதியாக இந்த ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாக மேலும் தெரிவிக்கப்பட்டது. (அ-1)

## சமாதானப் பேச்சு மூலமான தீர்வுக்கு வருமாறு அரசிடமும் புலிகளிடமும் கேட்கிறார் முகர்ஜி



மிரசுகிடாபாத், பெப்.22

இலங்கை அரசும் விடுதலைப் புலிகளும் சமாதானப் பேச்சு மூலமான தீர்வுக்கு முன்வர வேண்டும்.

இந்திய வெளிவிவகார அமைச்சர் பிரணாப் முகர்ஜி இருதரப்பினரிடமும் இந்த வேண்டுகோளை விடுத்துள்ளார்.

அரசியல் தீர்வு ஒன்றே இனப்பிரச்சினைக்கு தீர்வாக அமையும். இரு தரப்பினரும் மேசையில் அமர்ந்து பேசித் தீர்வைக்காண வேண்டும் என்று அவர் வற்புறுத்தியுள்ளார்.

சமாதானத் தீர்வு காணப்பட வேண்டும். இல்லையேல் (20 ஆம் பக்கம் பார்க்க)

## விடுதலைப்புலிகள் வெள்ளி இரவு நடத்தியவை தற்கொலைத்தாக்குதல்களே - விமானப்படைப் பேச்சாளர்

கொழும்பு, பெப்.22

கொழும்பில் வெள்ளிக்கிழமை இரவு புலிகளின் விமானங்கள் தற்கொலைத் தாக்குதல்களை மேற்கொண்டன என்பதை விமானப்படைப் பேச்சாளர் விங் கொமண்டர் ஜானக நாணயக்கார உறுதிப் படுத்தியுள்ளார் என்று ஏ.பி. செய்தி ஏஜென்சி நேற்றுத் தெரிவித்தது.

எனினும் அந்த விமானங்கள் குறிப்பிட்ட இலக்குகளை அடைவதற்கு முன்னரே, விமான எதிர்ப்பு கருவிகளால் படையினர்

(20 ஆம் பக்கம் பார்க்க)

## பாதுகாப்பு வலயப் பகுதிகள் மீதான ஷெல் தாக்குதல் வெள்ளி இரவு 44 பேர் கொலை! 170 பேர் காயம்!!

கொழும்பு, பெப்.22

மக்கள் பாதுகாப்பு வலயமாக அரசு பிரகடனம் செய்துள்ள முள்ளிவாய்க்கால், பொக்கணை, மாத்தளன் ஆகிய பகுதிகள் மீது நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை இரவு 9.45 மணியளவில் மேற்கொள்ளப்பட்ட ஷெல் தாக்குதலில் 44 பேர் கொல்லப்பட்டனர்; 170 பேர் காயமடைந்தனர்.

இணையத்தளங்கள் இத் தகவலை வெளியிட்டுள்ளன.

இது தொடர்பாக இணையத்தளங்கள் மேலும் (20 ஆம் பக்கம் பார்க்க)

வன்னியில் இருந்து கப்பல் மூலம் திருகோணமலைக்கு அழைத்துச் செல்லப்பட்ட காயமடைந்தவர்களின் நான்காவது தொகுதியினரின் விவரம் 04 ஆம் பக்கத்தில்

## மக்கள் வாழும் பகுதிகளிலேயே ஐ.நாவின் முகாமைத்துவத்துடன் வன்னியில் நலன்புரிநிலையங்களை அமைக்க கூட்டமைப்பு வலியுறுத்து

கொழும்பு,பெப்.22

சொந்த இடங்களில் இருந்து மக்களை இடம்பெயரச் செய்து அவர்களை நிரந்தர அகதிகளாக்கும் திட்டத்தையே அரசு முன்னெடுத்து வருகின்றது.

மக்களின் பிரதேசங்களை கைப்பற்றி அதிஉயர் பாதுகாப்பு வலயங்களாக பிரகடனம் செய்து இராணுவ முகாம்களை அமைத்து தமிழர் பிரதேசங்களை இராணுவ மயமாக்கும் திட்டத்தையே அரசு முன்னெடுத்துள்ளது.

எனவே, ஐநாவின் முகாமைத்துவம் மற்றும் மேற்பார்வையில் மக்கள் வாழும் பிரதேசங்களிலேயே பாதுகாப்பு வலயங்களை அமைக்க வேண்டும். அதன் மூலமே மக்களின் உயிரிழப்புக்களை தவிர்ப் பதுடன் மக்களுக்கு நம்பிக்கையான வாழ்க் கையை உறுதி செய்ய முடியும்: இதனையே தமிழ் மக்கள் சர்வதேசத்திடம் எதிர்பார்க் கின்றனர்.

(20 ஆம் பக்கம் பார்க்க)

Cosy Hotel & Restaurant 8 ஆம் ஆண்டை முன்னிட்டு ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமைகளிலும்
Food Festival
Fried Rice Day
CHICKEN BRIYANI
MUTTON BRIYANI
EGG BRIYANI
VEGE BRIYANI
FRIED RICE
Free Delivery Town Limit
கொசி உணவகம் Feel at home
No.15, Sirambiyady Lane, Jaffna. T.P.No: 021-2225899

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

## அட்சயா

பேசியல் - 10 விதமானவை (புதிய பரிமாணத்துடன்)
மேக் அப் - 7 விதமான சேலை உடுத்தும் முறையும், இந்து, கிறிஸ்தவ, சிங்கள, குஜராத், குப்தாஸ், மொடன், மடிசார் மணப்பெண் அலங்காரமும் (கொழும்பு ஸ்டைலில் செய்து காட்டப்படும்)
கெயார ஸ்டைல் - முற்றிறிலும் புதிய மொடேர்ண் கொண்டைகள், தலைமுடி அயன்பண்ணுதல், தலைமுடிசுருட்டுதல்
சாறி வேக் - 5 விதமானவை
ஐசிங் - 30 விதமான கேக் வடிவங்களும் புதிய வகையான ஐசிங் பூக்களும்

கைவேலை, பூவேலை, பெயிண்டிங்
மேற்படி பயிற்சி நெறிகள் ஆரம்பம்

மேலும் விசேட வைபவங்களிற்கு தேவையான றிச் கேக் (ஒன்று 25/= மட்டுமே) ஐசிங் இடப்பட்ட றிச்கேக் (35/= மட்டுமே) உ-ிங் கேக் - 4 தட்டு உடையது 9450/= மட்டுமே. மேலும் அனைத்து சிற்றுண்டி வகைகளுக்கான ஒடரும் ஏற்றுக்கொள்ளப்படும். மேக்அப், பிளவ செட்டிங், பேசியல் என அனைத்து சேவையினையும் பெறுபவர்களுக்கு கட்டணக் கழிவு வழங்கப்படும்.

அட்சயா
461, நாவலர் றோட், யாழ்ப்பாணம்.


## மரண அறிவித்தல்கள்

### முருகன் கந்தசாமி
(மேற்பார்வையாளர், உப்புக்கூட்டுத்தாபனம், ஆனையிறவு)



சுழிபுரம், திருவடி நீழல் பிறப்பிடமாகவும், குப்பிளான் ஞானவைரவர் கோயிலடியைப் வசிப்பிடமாகவும் கொண்ட முருகன் கந்தசாமி நேற்று (21.02.2009) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் சாந்திராணியின் அன்புக் கணவரும், சுதாஜினி (சுவிஸ்) தர்சினி (கனடா), பெயர்த்தினி, தயாபரன் (லண்டன்) ஆகியோரின் அன்புத் தந்தையும், முகுந்தன், ஜெயக்கிரி, தர்மரூபன், தனயங்கா ஆகியோரின் அன்பு மாமனாரும், காலஞ்சென்றவர்களான முருகன்-பொன்னி தம்பதிகளின் மகனும் காலஞ்சென்றவர்களான முத்து - செல்லம்மா தம்பதிகளின் மருமகனும், காலஞ்சென்றவர்களான வைரமுத்து, சின்னத்துரை மற்றும் செல்லையா ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (22.02.2009) ஞாயிற்றுக்கிழமை நண்பகல் 12 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் புன்னாலைக்கட்டுவன் விலங்கன் இந்து மயானத்தில் தகனஞ்செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்

ஞானவைரவர் கோயிலடி,
குப்பிளான்.

தகவல்: தயாபரன்
(மகன் - லண்டன்)

### குணரத்தினம் திருச்செல்வம்
*(சுழிபுரம் சித்தர் பரம்பரை வைத்தியர்)*



சுழிபுரத்தைப்பிறப்பிடமாகவும் பன்னாலை, அம்பனையை வசிப்பிடமாகவும் தற்போது சித்தர் வளவு, சுழிபுரத்தில் வசித்து வந்தவருமான குணரத்தினம் திருச்செல்வம் நேற்று முன்தினம் (20.02. 2009)வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வைத்தியர் குணரத்தினம் - முத்துப்பிள்ளை தம்பதியினரின் அன்பு இளைய மகனும் ஆசைப்பிள்ளையின் அன்புக் கணவரும் ஜெயராசா, விமலா தேவிஆகியோரின் அன்புத் தந்தையும் சகுந்தலா தேவியின் அன்பு மாமனாரும் காலஞ்சென்றவர்களான தெய்வானைப்பிள்ளை (வைத்தியர்), சிவக்கொழுந்து (வைத்தியர்), சங்கரப்பிள்ளை (வைத்தியர்), செல்லத்துரை (வைத்தியரும்- ஆசிரியரும்) ஆகியோரின் அன்புச் சகோதரனும் Dr.பூ.கைலாயநாதன், Dr. மனோரஞ்சிதம் ஆகியோரின் மாமனாரும் விதுர்யா, ஜதுசன், ஜதுர்யா ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (22.02.2009) ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 1 மணியளவில் அவரது இல்லதில் நடைபெற்று (சித்தர் வளவு சுழிபுரம்) பூதவுடல் தகனக்கிரியைக்காக ஊமைக்கேணி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

சித்தர் வளவு,
சுழிபுரம் மத்தி.

தகவல்: மனைவி,
செ.கிருபாரத்தினம்
(பெறாமகன் - ஆயுள்வேத வைத்தியர்)

### வல்லிபுரம் சின்னத்தம்பி மயில்வாகனம்
ஓய்வுபெற்ற அதிபர் (மயிலம்மான்) யாழ். அல்வாய் வடக்கு R.C.T.M.S

சின்னாலடி, அல்வாய் தெற்கு, அல்வாயைப் பிறப்பிடமாகவும் தம்பசிட்டியை வசிப்பிடமாகவும் கொண்ட வ.சி.மயில்வாகனம்(செல்லத்துரை) (20.02.2009) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சின்னத்தம்பி - தெய்வானை தம்பதியரின் கனிஷ்ட புத்திரனும் காலஞ்சென்ற சோனாவத்தை வேலுப்பிள்ளை பார்வதியின் அன்பு மருமகனும் பரமேஸ்வரியின் அன் புக் கணவரும் மகேந்திரராஜா (ஆசிரியர், யாழ். ஹாட்லிக் கல் லூரி), கணேந்திரராஜா (கொழும்பு), நந்தினி (ஆசிரியை, மன்னார் சென்.சேவியர் ஆண்கள் கல்லூரி), இரவீந்திரராசா (வவுனியா), சசிகலா (ஜேர்மனி), நாகேந்திரராசா, சுவேந்திரராசா, ஜெயகலா (ஆசிரியை,குடமியன் அ.த.க. பாடசாலை), சுபகலா ஆகியோரின் பாச மிகு தந்தையும் ஜெயந்தி, அருந்ததி(ஆசிரியை, கொழும்பு, விவேகானந்தா தேசிய பாடசாலை), கிப்சன் (மன்னார்), புஸ்பவதி (வவுனியா), பாஸ்கரன்(ஜேர்மனி), தேவரதி(ஆசிரியை, யாழ். வரணி வடக்கு சைவப்பிரகாச வித்தியாலயம்), தேவகுமார் ஆகியோரின் அன்பு மாமனும் காலஞ்சென்ற கந்தசாமி (மட்டக்களப்பு), காலஞ்சென்ற அதிபர் ஜே.எஸ். நல்லதம்பி, பர மேஸ்வரி (ஓய்வு பெற்ற அதிபர், ஹற்றன்) ஆகியோரின் பாசமிகு உடன்பிறப்பும் தங்கராசா (கொழும்பு), சரவணமுத்து (நீர்வேலி) ஆகியோரின் பாசமிகு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (22.02.2009)ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக சுப்பர்மடம் இந்துமயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை மாணவர்கள் மற்றும் உற்றார், உறவினர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

கதிரவேற்பிள்ளை வீதி,
புலோலி மேற்கு, தம்பசிட்டி.

தகவல்: ம.மகேந்திரராஜா,
மகன்(ராஜன் மாஸ்டர்).

## சமாதானம் வேண்டி ஏழாலையில் வழிபாடு

யாழ்ப்பாணம், பெப்.22

நாட்டில் சாந்தி சமாதானம் நிலவ வேண்டி விசேட வழிபாடு ஏழாலை ஆத்மஜோதி தியான மண்டபத்தில் நாளை திங்கட்கிழமை காலை 9 மணி முதல் ந.ப. 12 மணிவரை இடம்பெறவுள்ளது.

அறநெறிப் பாடசாலை ஆசிரியர்கள், மாணவ, மாணவிகளின் கூட்டுப் பிரார்த்தனை, பண்ணிசை, திருமுறைகள் என்பன இடம்பெறும்.(1)


## விற்பனைக்கு

J.I - XXXX என்னும் இலக்க முடைய 250 ELF, 40-XXXXisuzu லொறி என்பன உடன் விற்பனைக்குண்டு.

தொடர்பு: 0774156111

## வீடு விற்பனைக்கு

உரும்பிராய் மேற்கு, அம்மன் வீதியில் 2 ½ பரப்பு காணியில் 3 அறையுடன் கூடிய வீடு விற்பனைக்குள்ளது.

தொடர்பு: 021 4590322,
0771372751

## கோழிக்குஞ்சு விநியோகம்

BAHIRA புறொயிலர் குஞ்சுகள் 23.02.2009 விநியோகிக்கப்படும். பதிவுகளை மேற்கொள்ளவும்.

- ✱ராஜீவ் - நவாலி வீதி, ஆனைக்கோட்டை.
- ✱மதுரா - ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்
- ✱P. ரவி - சாவகச்சேரி
- ✱திருமகள் களஞ்சியம் - சிவலிங்கப் புளியடி
- ✱சிற்றிபாம் றேடர்ஸ் - கல்வியங்காடு


## மரண அறிவித்தல்கள்

### பொன்னுத்துரை துரைராசா (குமார்)

நுணாவிலை பிறப்பிடமாகவும், வவுனியாவை வசிப்பிடமாகவும் கொண்ட பொன்னுத்துரை துரைராசா 20.02. 2009அன்று இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற பொன்னுத்துரை மற்றும் தங்கமுத்து தம்பதிகளின் மகனும், காலஞ்சென்ற சின்னையா மற்றும் பூபதி தம்பதிகளின் மருமகனும், சந்திராவதியின் கணவரும், கௌசிகா,ரமணன்,ராதிகா(அமரர்) ஆகியோரின் தந்தையும், காலஞ்சென்றவர்களான செல்வராசா, தர்மராஜா மற்றும் பத்மாதேவி, வசந்தாதேவி, சுசிலாதேவி, ரவீந்திரராஜா, லீலாவதி, பாக்கியதேவி, நிர்மலாதேவி ஆகி யோரின் சகோதரனும், செந்தில்நாதன், சோதிநாதன், சிவபாலன், ஜெயவதி, சுஜாத்தா ஆகியோரின் மைத்துனரும் ஆவார்,

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று 22.02.2009 வவுனியா தவசிக்குளத்தில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தபாற்கந்தோர் வீதி,
சாவகச்சேரி.

தகவல்:
ம.பத்மாதேவி (சகோதரி)

### சங்கரலிங்கம் சங்கரப்பிள்ளை



தேவாலய வீதி,சங்கானையை வசிப்பிடமாகக்கொண்ட சங்கரலிங்கம் சங்கரப்பிள்ளை நேற்று (21.02. 2009) சனிக்கிழமை காலமானார்

அன்னார் மனோரஞ்சிதத்தின் அன்புக் கணவரும் சிவரதன், மதிவதனி ஆகியோரின் அன்புத் தகப்பனாரும் சுபன், மைதிலி ஆகியோரின் மாமனாரும் பால்ராம், லவண்யா, அபினா ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (22.02.2009) ஞாயிற்றுக்கிழமை பி.ப. 1 மணியளவில் அவரின் இல்லத்தில்நடைபெற்றுபூதவுடல்தகனக்கிரியைக்காக கரைச்சி மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.இந்த அறிவித்தலை அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தேவாலய வீதி,
சங்கானை.

தகவல்:
ச.மனோரஞ்சிதம்
(மனைவி)

## மரண அறிவித்தல்கள்

### நாகலிங்கம் சண்முகநாதன் (சின்னராசா)



சுதுமலை, மானிப்பாயைப் பிறப்பிடமாகவும் மானிப்பாய் பெற்றோல் செற்றடியை வசிப்பிடமாகவும் தற்போது இந்தியாவை வசிப்பிடமாகவும் கொண்டிருந்த நாகலிங்கம் சண்முகநாதன் (சின்னராசா) 20.02.2009 வெள்ளிக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நாகலிங்கம்-செல்லமுத்து தம்பதியினரின் புதல்வரும், விசாலாட்சி (சுதுமலை), காலஞ்சென்றவர்களான ஜெயவீரசிங்கம், ரத்தினம், நகுலேஸ்வரி, மகேஸ்வரி, இராசலட்சுமி ஆகியோரின் அன்புச் சகோதரனும் ராஜலட்சுமியின் அன்புக் கணவரும், மலராஜினி (இந்தியா), பத்மாஜினி (அமரர்), உமாகாந்தன் (அமரர்), கலாரஜினி (அமரர்) கலாமோகினி (இந்தியா), கமலினி (பிரான்ஸ்), சந்திரமோகன் (லண்டன்), கலைச்செல்வி (பிரான்ஸ்), கலைவாணி (பிரான்ஸ்), கௌரிகாந்தன் (லண்டன்) ஆகியோரின் பாசமிகு தந்தையும் குணசிங்கம் (இந்தியா), விஜயரட்ணம் (இந்தியா), ராஜ்குமார் (இந்தியா), சிவகுமார் (பிரான்ஸ்), தயாளினி (லண்டன்) ஆகியோரின் மாமனாரும் Dr.அகிலன் (MBBS, இந்தியா), அபிராமி (இந்தியா), அபிஷா (லண்டன்), அக்ஷரா (லண்டன்), அபிநயா (அமரர்), கௌதமன் (இந்தியா), அபிதா (இந்தியா), அரவிந்த் (பிரான்ஸ்) ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (22.02.2009) ஞாயிற்றுக்கிழமை அவரது இல்லத்தில் (இந்தியா) நடைபெறும்.

இந்த அறிவித்தலை அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

இந்தியா முகவரி:
இல. 09, மகாலட்சுமி வீதி,
வேலன்நகர், வளசரவாக்கம்
சென்னை 600087, தென் இந்தியா.
தொ.பே.00919840804010

தகவல்:
இ.திருச்செல்வம்
(கண்ணன்-மருமகன்),
சுதுமலை.

### செல்லையா தவமணி *(மீனாட்சி)*

காரைநகர், வேதரடைப்பைச் சேர்ந்த செல்லையா தவமணி (மீனாட்சி) 20.02.2009 வெள்ளிக்கிழமை காலை வத்தளையில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற செல்லையாவின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற கந்தையா - சுந்தரம் தம்பதியினரின் அன்பு மகளும் கோவளத்தைச் சேர்ந்த சின்னத்தம்பி - தெய்வானை தம்பதியினரின் அன்பு மருமகளும் காலஞ்சென்ற சரவணமுத்து (மலேசியா), சுப்பிரமணியம் (ஓய்வுபெற்ற பிரதம லிகிதர், P.W.D) ஆகியோரின் அன்புச் சகோதரியும் இந்திராதேவி, காலஞ்சென்றவர்களான புவனேஸ்வரி, இராஜேஸ்வரி, பரஞ்சோதி (செட்டி) மற்றும் லோகேஸ்வரி, சிவசோதி, ஞானசோதி, தனேஸ்வரி ஆகியோரின் அன்புத் தாயாரும் காலஞ் சென்ற மாணிக்கசிவம், நாகேந்திரம், கோபாலரட்ணம், தவமணிதேவி, பாலகிருஷ்ணன், காலஞ்சென்ற யோகேஸ்வரி, குமுதினி, தினேஷ் ஆகியோரின் அன்பு மாமியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (22.02.2009)ஞாயிறு மாலை நீர்கொழும்பு வீதி, வத்தளையில் உள்ள மகிந்த மலர்ச்சாலையில் நடைபெற்று பூதவுடல் பிறபகல் 2 மணிக்கு காவலப்பிட்டிய இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்

தகவல்:
இளையதம்பி நாகேந்திரம் (மருமகன்)

### திருமதி நடராசா தவமணி



வீரபத்திராயன், கரணவாய்தெற்கைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட திருமதி நடராசா தவமணி நேற்று (21.02. 2009) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற நடராசாவின் அன்பு மனைவியும் பராசக்தி, சிறிதரன், றஞ்சினி, கெங்காதரன் ஆகியோரின் அன்புத் தாயாரும் பொன்னம்பலம், ஜெயபாலசிங்கம், வசந்தராணி (ஆசிரியை, யா/பண்டத்தரிப்பு பெண்கள் உயர்தரபாடசாலை), வசந்தராணி (ஆசிரியை, வவுனியா) ஆகியோரின் மாமியாரும் சிவமதி, ஞானவேல் சிவரஞ்சினி, ஜெயக்குமார், சிவபாதம், எளினி, கிருசாளினி, கலாஜினி, கிரிசாந், அசோதா, ஜனனி, வேணுசா, பானுசா, ஜெனோசா, சிந்துஜா, உமாகாந், தனுஸ்காந் ஆகியோரின் பேர்த்தியும் தனுஷ்ராஜ், தர்மிகா ஆகியோரின் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (22.02.2009) ஞாயிறு காலை 9.00 மணியளவில் ஜெயபாலசிங்கம் (ஜெயம்) கிழவி தோட்டம், கரவெட்டி கிழக்கு , கரவெட்டி மருமகன் இல்லத்தில் நடைபெற்று தகனக் கிரியைக்காக பூதவுடல் சோனப்பு இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலைஅனை வரும் ஏற்றுக்கொள்ளவும்

ந.சிறிதரன் (சிறி-மகன்),
அம்பாள் பான்சி ஹவுஸ்
வழக்கம்பரை பண்ணாகம்.

த.ஜெயபாலசிங்கம் (ஜெயம்-மருமகன்)
கிழவி தோட்டம், கரவெட்டி கிழக்கு,
கரவெட்டி.

### திருமதி தங்கராசா செல்லம்மா

சக்களாவத்தை, நவிண்டில், கரணவாய் வடக்கு, கரவெட்டியைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாக வும்கொண்ட திருமதி தங்கராசா செல்லம்மா 21. 02.2009 சனிக்கிழமை இறைபதம் எய்திவிட்டார்.

அன்னார் அமரர் சின்னத்தம்பி தங்கராசா (இராசப்பு) அவர்களின் அன்பு மனைவியும் சரவணமுத்து சின்னப்பிள்ளை ஆகியோரின் மூத்த மகளும் திருமதி சின்னதுரை அன்னம் மாவின் சகோதரியும் இ.தாமோதரம்பிள்ளை, காலஞ்சென்ற கி.கந்தசாமியின் மாமியாரும் இராசமலர், விஜயலக்சுமி, காலஞ்சென்ற சிவசுப்பிரமணியம் ஆகியோரின் தாயாரும் தயாளன் (கனடா), தயாளினி, றஞ்சினி (சுவிஸ்), ஜெகன் (சுவிஸ்) ஆகியோரின் பேர்த்தியும் ஆரணன், கிஷோத்தன், பிரியதர்சினி, தாட்சாயினி, தரிசிகா ஆகியோரின் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (22.02.2009) ஞாயிற்றுக்கிழமை மு.ப. 10 மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் நவிண்டில் எல்லங்குளம் மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

நவிண்டில்,
கரணவாய் வடக்கு.

தகவல்:
இ.தாமோதரம்பிள்ளை
(துரை - மருமகன்).

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கொழும்பில் குதித்தனர் வான் கரும்புலிகள் சமகாலப் போரின் புதியதிசை நோக்கியதா...?

**பெப்ரவரி 20** முன்னிரவு 9.50 மணிவரை மின் வெளிச்ச வெள்ளத்தில் மிதந்து கொண்டிருந்தது கொழும்பு மாநகரம். அண்மைக்காலமாகப் படையினர் பெற்றுவரும் வெற்றிகளால், வழமையை விடவும் அதிக கலகலப்போடு இருந்த தலைநகரத்தின் மின் இணைப்புத் திடீரெனத் துண்டிக்கப்பட்டது. அதனைத் தொடர்ந்து இருளை ஊடறுத்துக் கொண்டு வானை நோக்கி சிவப்பு வர்ண 'லேசர்' ஒளிக்குண்டுகள் பாயத் தொடங்கின. அவற்றுக்குத் துணையாக, இருளாகிக் கிடந்த வான் பரப்பினை பகலாக்குவது போன்று, அதிஉயர் வலுக்கொண்ட வெளிச்சம் பாய்ச்சப்பட்டது. ஏறக்குறைய ஒலிம்பிக் கொண்டாட்



டத்தை ஒத்த வாணவேடிக்கை கொழும்பில் நிகழ்ந்து கொண்டிருந்தது. மக்களுக்கு முதலில் என்ன நடக்கின்றது என்பதே புரியவில்லை. புலிகள் வசமிருந்த ஏனைய பகுதிகளையும் படையினர் வழித்துத் துடைத்து விட்டனரோ? அதனைத்தான் இப்படி ஆரவாரமாகக் கொண்டாடுகின்றனரோ? எனவும் சிலர் எண்ணினர். எனினும் மின்சாரத் துண்டிப்பும் இருளடைந்துபோன நகரமும் வானில் பெரிதாகிக் கொண்டே வந்த வானூர்திகளின் இரைச்சலும் மீண்டுமொரு தடவை கொழும்பு நகரைக் குறிவைத்து வான்புலிகள் வந்திருக்கிறார்கள் என்பதை மிகத் தெளிவாகவே உணர்த்தத் தொடங்கின.

வட்டமிட்ட விமானங்களைக் குறிவைத்து, அரசின் விமான எதிர்ப்புப் பொறிமுறை முழுவீச்சோடு இயக்கப்பட்டது. கொழும்பு வான்வெளியில் பார்க்கும் இடமெங்கும் நீக்கமறக் குண்டுகள் பாய்ந்தபடியே இருந்தன. இவற்றையெல்லாம் சுழித்துக்கொண்டு, புலிகளின் விமானமொன்று தன் இலக்கை நோக்கி-கோழிக்குஞ்சை தூக்கவரும் பருந்துபோல-குத்தியபடி விரைந்தது. கீழ்நோக்கி விரைந்த விமானம் குண்டுகளை வீசுவதற்குப் பதிலாக கொம்பனித்தெருவில் அமைந்திருந்த இறைவரித்திணைக்களக் கட்டடத்தின் மீது 'சடாரென' மோதியது. தீப்பிளம்பு எழும்ப,



வெடியோசையில் கொழும்புநகர் ஒருகணம் அதிர்ந்து, அடங்கியது. இதற்குள் மற்றைய விமானம் கட்டுநாயக்க வான்படைத் தளத்தினை நெருங்கிக் கொண்டிருக்கும் போது, படையினரால் சுட்டு வீழ்த்தப் பட்டதாகவும், புலிகளின் விமானத்தைச் செலுத்தி வந்த விமானியின் சடலம் கைப்பற் றப்பட்டிருப்பதாகவும் புலிகளின் தாக்குதல்கள் வெற்றிகரமாக முறியடிக்கப்பட்டதாகவும், படையினரால் அறிவிக்கப்பட்டது.

அதேவேளை, விமானப்படைத் தலைமையகம் மீதும், கட்டுநாயக்க விமானத் தளம் மீதும் வெற்றிகரமாக வான் கரும்புலிகள் தாக்குதலை நிகழ்த்தியதாக விடுதலைப்புலிகள் அறிவித்துள்ளனர். இத்தாக்குதலில் வான்கரும்புலிகளான கேணல் ரூபன், லெப்.கேணல் சிரித்திரன் ஆகியோர் உயிரிழந்திருப்பதாகவும் புலிகளால் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

### புலிகளின் விமானத்தாக்குதல் சொல்லும் செய்தி என்ன?

இவ்வாறு இருதரப்பினரும் வான் தாக்குதலில் தாமே வெற்றி பெற்றுள்ளதாக அறிவித்துள்ளநிலையில், இத்தாக்குதல் மூலம் உணர்த்தப்பட்டுள்ள சில விடயங்களை நோக்க வேண்டியது பொருத்தமானதாகும்.

'மனிதாபிமான நடவடிக்கை' மூலம் வன்னிப்போரில் புலிகள் வசமிருந்த பெரும்பாலான பகுதிகள் படையினரின் கட்டுப் பாட்டின்கீழ் கொண்டுவரப் பட்டுள்ளன. இப்போது வெறும் 100 சதுர கிலோ மீற்றர் பகுதிக் குள்ளே புலிகள் முடக்கப்பட்டு விட்டனர். புலி களின் 7 விமான ஓடுதளங்களையும் படையினர் கைப் பற்றி விட்டதால், இனிமேல் வான் தாக்குதல்களில் புலிகள் ஈடு படவே முடியாது-என்று கற்பூரத்தை அணைத்துச் சத்தியம் செய்யாத குறையாக அரசுத்தரப்பு அண்மையில் அறிவித்திருந்தது.

'தமது ஓடு பாதைகளை எல்லாம் இழந்து விட்ட நிலையில், உருத்தெரியாத வகையில் தமது விமானங்களை உதிரிப்பாகங்களாகக் கழற்றி, எங்கேயோ புலிகள் புதைத்து வைத்துள்ளனர்' எனவும் படையினர் கூறியிருந்தனர்.

இவ்வாறான நிலையிலேயே படையினரின் அறிக்கைகளை புஸ்வாணமாக்கி விட்டு புலிகளின் விமானங்கள் கொழும் புவரை சென்று தாக்குதலை நடத்தியுள்ளன. புலிகளிடம் எஞ்சியிருந்த இரண்டு விமானங்களையும் சுட்டு வீழ்த்தி, அவர்களின் விமானப்படைக்கு ஆப்பு வைத்து விட்டதாக அதிகாரத்தரப்பினர் அறிவித்திருந்தனர். ஆனால் வன்னியில் முடக்கப்பட்ட நிலையில் இருப்பதாகக் கூறப்பட்ட புலிகள், படையினரின் பாதுகாப்புப் பொறி முறைகளை யெல்லாம் கடந்து, கொழும்பு மாநகரின் கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த இடத்தில் விமானத் தாக்குதலை மேற்கொள்ளும் அளவுக்கு இன்னமும் வல்லமை படைத்தவர்களாக இருக்கிறார்கள் என்ற செய்தி சொல்லாமலே எவருக்கும் புரியும்.

### மண்டையைக் குடையும் பெரிய கேள்வி

அதேவேளை, படையினரின் 'புலிகளின் எல்லா விமான ஓடுபாதைகளையும் பிடித்து விட்டோம்' என்ற கூற்றுக்கும், புலிகளின் விமானத்தாக்குதல் ஆப்பு வைக்கப்பட்டு விட்டது. செயற்றிறன்மிக்க விமான ஓடுதளங்கள் இன்னமும் புலிகளிடம் இருக்கவே செய்கின்றன. அத்தோடு படையினரின் தாக்குதல் களுக்கு அஞ்சி,தமது விமானங்களை ஒவ்வொரு பாகமாகப் பிரித்து ஒளித்து வைக்காமல் அவற்றையும் இயங்கு நிலையிலேயே வைத்திருக்கிறார்கள் என்பதுவும் தெளிவுபடுத்தப்பட்டிருக்கின்றது.

அதனால் புலிகளிடம் இன்னும் எத்தனை ஓடு பாதைகளும், விமானங் களும் இருக்கின்றன? என்பதுதான் படையினரின் மண்டையைக் குடைகின்ற கேள்வியாக இப்போது இருக்கின்றது.

புலிகளின் இருவிமானங்களும், தற்கொலைத் தாக்குதலை நிகழ்த்தவே வன்னியிலிருந்து பறந்து வந்திருக்கின்றன என்பதை படைத்தரப்பு வெளியிட்டுள்ள அறிக்கைகளே புலப்படுத்துகின்றன. விமானத்தாக்குதல்களை வான்புலிகள் மேற்கொள்ளும்போது, ஒரு விமானத்தில் இரண்டு விமானிகள் இருப்பதே வழமையானதாகும். ஆனால் இம்முறை ஒவ்வொரு விமானத்திலும் ஒவ்வொரு விமானியே இருந்துள்ளார். இதைவிட கட்டுநாயக்காவில் மீட்கப்பட்ட புலிகளின் விமானியின் சடலத்தில் கரும்புலிகள் அணியும் சீருடையை விமானி அணிந்திருந்ததும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. அத்துடன் இறைவரித்திணைக்களக் கட்டடத்துடன் மோதிய விமானம் உருத்தெரியாது சிதறியதுடன், விமானியின் சடலமும் மீட்கப்படவில்லை. படையினர் இரு விமானங்களையும் சுட்டுவீழ்த்தி இருந்தால், கட்டுநாயக்காவில் மீட்கப் பட்டதைப்போல கொம்பனித் தெருவில்

**வளவன்**

விமானியின் சடலத்தை மீட்க முடியாமல் போனது ஏன்? என்ற கேள்வியும் இயல்பாகவே எழுகின்றது. தன்னுடன் இணைத்திருந்த சக்திவாய்ந்த குண்டை வெடிக்கச் செய்ததால்தான் அந்த விமானியின் உடலை உருப்படியாக மீட்கமுடியவில்லை என்ற ஊகமும் உலவவே செய்கின்றது.

## புலிகளின் இரு விமானங்களையும் வீழ்த்திவிட்டோம் - படையினர்

## வெற்றிகரமாக நிகழ்ந்த வான்கரும்புலித் தாக்குதல் - விடுதலைப் புலிகள்

### பிரபாகரன் குறித்த ஊகங்களுக்கு முற்றுப்புள்ளி

விடுதலைப்புலிகள் நடத்தியது வான்வெளிக் கரும்புலித்தாக்குதல்தான் என்பதற்கு ஆதாரமாக, தாக்குதலை நடத்திய இருகரும்புலிகளும் புலிகளின் தலைவர் பிரபாகரனுடன் இணைந்து நிற்கின்ற புகைப்படங்களை விடுதலைப்புலிகள் தாக்குதல் நடைபெற்ற சிலமணி நேரத்துக்குள்ளேயே வெளியிட்டுள்ளனர். இந்தப் புகைப்படம் புலிகளின் தலைவர் பற்றிய பலவிதமான ஊகங்களுக்கும் முற்றுப் புள்ளியை வைத்திருக்கின்றது.

''விரக்தியின் விளிம்பில் பிரபாகரன் நிற்கின்றார். சில வேளைகளில் அவர் நாட்டை விட்டு தப்பியோடியிருக்க வேண்டும். ஆனால் இனிமேல் அவர் தப்பியோட முடியாதளவுக்கு புலிகளின்பகுதி சுற்றி வளைக்கப்பட்டு இருக்கின்றது. எனவே அவர் தற்கொலை செய்து கொள்வதைத் தவிர வேறு வழியில்லை'' என்று படைத்தரப்பு தெரிவித்திருந்தது. கூடவே-

'பிரபாகரன் காயமடைந்து ஆபத்தான கட்டத்தில் இருக்கிறார்'

'பிரபாகரனிடமிருந்து புலிகளின் தலைமைப் பொறுப்பை அவரது மகன் சார்ள்சும், கடற்புலித்தளபதி சூசையும் கையேற்றுள்ளனர்'

'புலிகளுக்குக் கட்டளையிட முடியாத அளவுக்குப் புலிகள் மத்தியில் பிரபாகரன் செல்வாக்கை இழந்துவிட்டார்'என்பன போன்ற ஊகங்களும் வெளியிடப்பட்டன. ஆனால் வன்னி யுத்தம் ஆரம்பிக்கப்பட முன்னர் எத்தகைய செல்வாக்கும், உடல் நலமும் கொண்டிருந்தாரோ, அதேயளவு தன்மையை இப்போதும் புலிகளின் தலைவர் கொண்டே இருக்கிறார் என்பதும் புலிகளின் தலைமைத்துவம் இன்னமும் அவரின் கைகளில்தான் உள்ளது என்பதையும் வான்கரும் புலிகளுடன், புலிகளின் தலைவர் இணைந்து நிற்கும் புகைப்படங்கள் சான்று பகர்கின்றன. அத்துடன் இப்புகைப்படங்கள் மிக அண்மையில்தான் எடுக்கப்பட்டிருக்க வேண்டும் என்பதனை ஜனாதிபதியின் சகோதரரும், பாதுகாப்பு அமைச்சின் செயலாளருமான கோத்தபாய ராஜபக்ஷ வெளிநாட்டு இலத்திரனியல் ஊடகமொன்றுக்கு வழங்கிய பேட்டியில் சாடைமாடையாகக் கூறியுள்ளார்.

விரக்தியின் விளிம்பில்தான் புலிகள் இத்தாக்குதலை மேற்கொண்டிருக்க வேண்டும். புலிகள் தமது விமானங்களைப் படையினர் கைப்பற்ற முன்னர், இத்தகைய வழிகளில் தாமே அழித்துவிடும் செயலாகவே இதனைக்கருதமுடியும் என்றும் அரசுத்தரப்பு கூறியிருக்கின்றது.

ஆனால் விரக்தியின் விளிம்பில் இருப்பவர்கள் வன்னியில் தமக்கு மிக அண்மையில் குழுமியுள்ள இராணுவத்தினர்மீது வான்கரும்புலித் தாக்குதலை நடத்தாமல், ஏறக்குறைய 200 கிலோ மீற்றர் தூரம் பறந்து வந்து கொழும்பில் தாக்குதல் நடத்த அவசியமென்ன? என்ற வினாவை ஆய்வாளர்கள் எழுப்பியுள்ளனர்.

### புலிகளின் விமானம் நெருங்கிய பின்னரே......

வழமைபோல இம்முறையும் தலைநகரைப் புலிகளின் விமானங்கள் நெருங்கிய பின்னர்தான், அதுபற்றிய எச்சரிக்கை அவசர அவசரமாக விடுக்கப் பட்டிருக்கின்றது. அதுவும் புலிகளின் விமானங்கள் வந்து கொண்டிருக்கின்றன - என்ற தொழில்நுட்பத் தகவலை இந்தியா தான் தெரிவித்திருக்கின்றது. புலிகளின் எல்லா ஓடுபாதைகளையும் கைப்பற்றி விட்டதால், இனிமேல் புலிகளின் விமானங்கள் வரமுடியாது என்ற மெத்தனத்தாலா, அல்லது படையினரின் கண்களில் மண்ணைத் தூவுகின்ற புலிகளின் நுட்பத்தாலா இவ்வாறு புலிகளின் விமானங்கள் நெருங்குவதைப் படையினர் உணர முடியாதவர்களாய் இருந்திருக்கிறார்கள் என்பதும் பாதுகாப்பு விடயங்கள் சார்ந்த பலருக்குப் புரியாத புதிராகவே இருக்கின்றதாம்!

வான் கரும்புலிகளின் தாக்குதலுக்குள்ளான இறைவரித்திணைக்களம் இலங்கையின் பொருளாதாரத்தை தீர்மானிக்கும் மையங்களில் ஒன்றாகும். ''இனிவரும் காலங்களில் சிறிலங்காவின் பொருளாதார நிலைகள் தாக்கப்படும்'' எனப் புலிகள் ஏற்கனவே எச்சரிக்கை விடுத்திருந்தனர். எனவே பொருளாதார இலக்கான இறைவரித் திணைக்களத்தின்மீது வான்புலித்தாக்குதல் நிகழ்த்தப் பட்டிருக்கலாம். அல்லது இறைவரித் திணைக்களக் கட்டடத்திற்கு மிக நெருக்கமாக உள்ள விமானப்படைத் தலைமையகம், ட்ரான்ஸ் ஏசியா ஹோட்டல் என்பதும் இலக்காக இருந்து குறிதவறி இறைவரித் திணைக்களக் கட்டடத்துடன் வான் கரும்புலி மோதியிருக்கலாம் என்று பலவிதமான ஊகங்கள் கிளம்பியுள்ளன. எனினும் தாக்குதல் நிகழ்ந்த இடம் மிகவும் கேந்திரமுக்கியத்துவம் வாய்ந்த இடமென்பதில் மாற்றுக் கருத்துக்கு இடமில்லை.



ஆயினும் விடுதலைப்புலிகள் வெளியிட்டுள்ள அறிக்கையின்படி கொம்பனித்தெருவில் உள்ள விமானப் படைத் தலைமையகமும், கட்டுநாயக்க விமானத்தளமுமே அவர்களின் முக்கிய இலக்காக இருந்திருக்க வேண்டும். வன்னியில் அப்பாவிப் பொதுமக்கள்மீது குண்டுகளை வீசி, அவர்களை உயிரிழக்க வைக்கும் விமானங்கள் இவ்விரு தளங்களிலும் இருந்தே புறப்படுவதாகப் புலிகள் தெரிவித்திருக்கின்றனர்.

புலிகளிடம் இருந்த மூன்று விமானங்களில் ஒன்றை ஏற்கனவே சுட்டு வீழ்த்தி இருப்பதாகவும் எஞ்சியிருந்த இரண்டும் இப்போது அழிக்கப்பட்டதால் வான்புலிகள் என்ற அமைப்பே அழிந்து விட்டது என்கிற தோரணையில் இத்தாக்குதலை வியாக்கியானப்படுத்துகின்றது இராணுவத்தரப்பு. ஆயினும் வான்கரும்புலித் தாக்குதலுக்காகத் தம்மிடம் எஞ்சியுள்ள இரண்டு விமானங்களையும் புலிகள் காவு கொடுத்திருப் பார்களா என்பது புதிராக இருக்கிறது. புலிகளின் வசம் இன்னும் பல விமானங் கள்இருக்கின்றனவோ அதனால்தான் இவ்வாறு துணிந்து தமது



விமானங்களைக் கரும்புலித் தாக்குதலுக்குப் பயன்படுத்தத் தொடங்கியுள்ளனரோ என்ற சந்தேகத்தையும் அர்த்தமற்றது எனக்கொள்ள இயலாது.

ஈழப்போரில் வான்கரும்புலிகள் என்ற புதிய அத்தியாயத்தைப் புலிகள் தொடக்கியிருக்கிறார்கள். ஆனால் வான் கரும்புலிகளின் தொடக்கமே அவர்களின் முற்றுப்புள்ளியாக அமைந்துவிட்டது எனப்படைத்தரப்புக் கூறுகிறது. உண்மையில் வெள்ளிக்கிழமை இரவு நடைபெற்ற வான்கரும்புலித் தாக்குதல் முற்றுப்புள்ளியா, 'காற்புள்ளியா என்பதைக் காலம்தான் சொல்ல வேண்டும்.

*****

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருமலைக்கு நான்காம் கட்டமாக அழைத்துச் செல்லப்பட்ட காயமடைந்த மற்றும் நோயாளர் 396 பேரின் விவரம்

முல்லைத்தீவில் இருந்து சர்வதேச செஞ்சிலுவைச் குழுவினரால் கப்பல் மூலம் அழைத்துவரப்பட்டு திருகோணமலை பொது வைத்தியசாலையில் நேற்று முன் தினம் வெள்ளிக்கிழமை அனுமதிக்கப்பட்டுள்ள வன்னிப் பொதுமக்களின் பெயர் விவரம் வருமாறு:-

ஆர்.ராதன் (வயது 2)-கருயாக்கன்னை, எம்.உதயச்சந்திரா (வயது 42)-கொழும்பு, வி.உமா(வயது 16)-கொழும்பு, கே.சிவபாலன்(வயது 60)-புதுக்குடியிருப்பு, ஆர்.ராஜன் (வயது 25)-மல்லாவி, ஆர்.திலக்ஷி (வயது 1.5)-மல்லாவி, ஆர்.மலர்விழி(வயது 19)- திருகோணமலை, எம்.தியாகராஜன் (வயது 64)-புதூர், கே.வத்தியம்மா, வை.இமிலியான் பிள்ளை(வயது 53)-மன்னார், ஐ.எலிசபெத் (வயது 50)-மன்னார், பி.சசிதரன் (வயது 31)-புதுக்குடியிருப்பு, ரி.பேரின்பநாதன் (வயது 58)-புதுக்குடியிருப்பு, பி.சுதர்சன் (வயது 5)-மல்லாவி, பி.ஜனனி (வயது 4)-மல் லாவி, பி.சுசிலாதேவி(வயது 30)-மல்லாவி, பி.ரேணுகா(வயது 3)-மல்லாவி,

ரி.பரமலிங்கம்(வயது 30)-இரம்பைக்குளம், வி.நிகதன்(வயது 11)-ஜெயந்திநகர், வி.வினிதா(வயது26)-ஜெயந்திநகர், எஸ்.ஸ்ரீவதனி(வயது 36)-புதுக்குடியிருப்பு, எஸ்.ஜதீசன்(வயது 15)-புதுக்குடியிருப்பு, எஸ்.தமிழ்க்குமரன்(வயது 10)-மாதளன், ஜெ.ஜெயலக்சுமி(வயது 56)-மாதளன், எஸ்.அன்புக்குமரன்(வயது 6)-மாதளன், எம்.சண்முகராஜா(வயது 47)-அக்கராயன் குளம், உமாசங்கர், ஜெ.திவியன்(வயது 7), ஜெ.திலக்ஷன்(வயது 2), ஜெ.புஸ்பலதா (வயது 36)-மல்லாவி, ஜெ.திலக்ஷிகா(வயது 5)-மல்லாவி, கே.பூலோகநாயகி(வயது 67)-முள்ளியவளை, எஸ்.டி.ஐராங்கனி (வயது 32)-வங்காளை, எல்.சந்திராதேவி( வயது 43)-சம்பூர், எல்.பிரவீன் (வயது6)-சம்பூர், எஸ்.ராஜவதனி(வயது 29)-கிளிநொச்சி, எஸ்.அருங்கீரன்(வயது 7 மாதம்)-கிளிநொச்சி, வி.மதுஷன்(வயது 5)-கிளிநொச்சி, வி.விதுஷன்(வயது 7)-கிளிநொச்சி, வி.யதுஷன்(வயது 4)-கிளிநொச்சி,

வி.ஜெயரூபா(வயது 25)-மாதளன், ரி.அருள்சோதிநாதன்(வயது 45)- யாழ்ப்பாணம், தி.தருஷன்(வயது 4)-திருகோணமலை, ரி.வினுஷன்(வயது 3)-திருகோணமலை, ரி.தாரணி(வயது 30)-திருகோணமலை, பி.நடராஜா(வயது 53)-கிளிநொச்சி, பி.தர்மராஜா(வயது 29)-மஸ்கெலியா, கே.பிரதீபன்(வயது 33)-புதூர், கே.சரஸ்வதி (வயது 66)-கிளிநொச்சி, ஐ.சின்னத்துரை (வயது 60)-கொம்பாவில், எஸ்.சத்தியபாமா (வயது 28)-நெடுங்கேணி, எஸ்.ஐங்கனி (வயது 3)-நெடுங்கேணி, என்.கார்த்திகேசு (வயது 67)-இரணைப்பாலை, ஏ.நடேசகுமார் (வயது 40)புதுக்குடியிருப்பு, ரி.இராஜேஸ்வரன் (வயது 75)-பாயக்குளம், ரி.பாகவன்(வயது 9 மாதம்)-திருகோணமலை, ரி.தனிநாயகம் (வயது 73)-கொழும்பு, என்.தயாபாலன் (வயது 50)-நெடுங்கேணி, ரி.யோக நாதன் (வயது 76)-புதுக்குடியிருப்பு, எஸ்.மனோன்மணி(வயது 71)-கிளிநொச்சி,

பி.பிருந்தா(வயது 27)-புதூர், பி.கதிர்ச்செழியன் (வயது 1)-புதூர், என்.துவாராஜன் (வயது 1.5)-புதுக்குடியிருப்பு, என்.டினோஜா (வயது 8)-புதுக்குடியிருப்பு, என்.வசந்தநாயகி(வயது 31)-புதுக்குடியிருப்பு, எஸ்.யசோதரன்(வயது 31)-முத்தையன்குட்டி, கே.காங்கேசன்மூர்த்தி(வயது 61)-முல்லைத்தீவு,

ஜெ.பானுஜா(வயது6)-கிளிநொச்சி, ஜெ.புஸ்பஜீவா(வயது 30)-கிளிநொச்சி, ஜெ.பூமிகா(வயது5)-கிளிநொச்சி, ஜெ.பவித்திரன்(வயது 9)-கிளிநொச்சி, எஸ்.ஜெயரூபன்(வயது 35)-யாழ்ப்பாணம், என்.செல்லையா(வயது 60)-யாழ்ப்பாணம், எம்.விமலகுரு(வயது 56-இரணிப்பளை, சின்னையா(வயது83)-கிளிநொச்சி, என்.நடேசமூர்த்தி(வயது 42)-முழங்காவில், எஸ்.முத்துலிங்கம்(வயது 78)-முல்லைத்தீவு, ஆர்.பூரணம்(வயது 56)-கிளிநொச்சி, சிவஞானநாதன்(வயது 65)-இரணப்பளை, எஸ்.கந்தசாமி(வயது 63)-சாவகச்சேரி,

எஸ்.பூபதி(வயது 63)-கிளிநொச்சி, சர்வேஸ்வரன்(வயது 26)-முல்லைத்தீவு, ஜெயமலர்(வயது25)முல்லைத்தீவு, எஸ்.தனுஜன்(வயது2)-முல்லைத்தீவு, சரஸ்வதி (வயது 51)-மாங்குளம், கே.தங்கசொரூபி(வயது 55)-சாவகச்சேரி, பி.வசந்தமலர் (வயது 31)-இராமநாதபுரம், பி.நிவேதா (வயது 6)-இராமநாதபுரம், பி.ஜிதுஷன் (வயது 5)-இராமநாதபுரம், வை.தர்மசீலன் (வயது 16)-தர்மபுரம், வை.விக்னேஸ்வரி (வயது 33)-தர்மபுரம், ஆர்.யோகேஸ்வரி (வயது 50)-மாங்குளம், எ.பெனான்டோ (வயது 54)-கிளிநொச்சி, எ.பாக்கியம்(வயது 67)-கிளிநொச்சி, எஸ்.கனகாம்பிகை(வயது 63)-முத்தையன்கட்டு, ரி.செல்வரஞ்சிதம் (வயது 60)-தாழையடி, எஸ்.சின்னம்மா (வயது 68)-உடையார்கட்டு, எஸ்.சிவராணி (வயது 50)-உடையார்கட்டு, வி.இராசமலர் (வயது 55)-மல்லாவி, எஸ்.சண்முகம்(வயது 54)-உருத்திரபுரம்,

ஆர்.பொன்னுத்துரை(வயது 70)-யாழ்ப்பாணம், பி.கனகமணி(வயது 62)-முள்ளிவளை, வி.சிவகுரு(வயது 57)-நெடுங்கேணி, வி.சிந்துஜன்(வயது 1.5)-மல்லாவி, ஆர்.சிவஞானம்(வயது 59)-மல்லாவி, வி.மிருதுளா (வயது 44)- இரணைப்பாலை, பி.அபிஷங்கா (வயது 9)-இரணைப்பாலை, எம்.சின்னத்தம்பி (வயது 72)-முத்தையன்கட்டு, பி.பிச்சைமுத்து (வயது 69)-முழங்காவில், சின்னராஜா(வயது 36)-ஆனந்தபுரம், எஸ்.விஜயதர்சினி(வயது 27)-ஆனந்தபுரம், கே.சசிக்குமார்(வயது 34)-முல்லைத்தீவு,

பி.கடம்பஜனனி(வயது 36)- இரணைப்பாலை, பி.அபினயா (வயது-03 )-இரணைப்பாலை, பி.காந்திமதி(வயது 69)-வவுனிக்குளம், சங்கரசா (வயது 39)- யாழ்ப்பாணம், செ.ந்துஜன் (வயது 17)-விஸ்வமடு, எஸ்.தயானந்தினி (வயது 31)-ஆனந்தபுரம், தமிழரசி (வயது 9 மாதம்) - ஆனந்தபுரம், தனுஷானந் தன்(வயது 9)-ஆனந்தபுரம்,

கே.அசிந்திரா-(வயது 1.5)-விஸ்வமடு, கே.தர்சினி(வயது 30)-விஸ்வமடு, கே.ஆதித்தியா(வயது 4)-விஸ்வமடு, பி.மதுஜன்னை(வயது 35)-வவுனிக்குளம், ரி.விமலாதேவி (வயது 61)-கிளிநொச்சி, சிவபாக்கியம்(வயது 84)-கிளிநொச்சி, கமலசிங்கம்(வயது 56)-யாழ்ப்பாணம், சூரியகுமார்(வயது 32)-கிளிநொச்சி, கே.விமலா(வயது 24)-விஸ்வமடு, எம்.நிரஞ்சனி(வயது 31)-மிருசுவில், எஸ்.அனுஷன்( வயது 1)-மிருசுவில், எஸ்.தினோஷன்-கிளிநொச்சி, சந்திரவதனி(வயது 34)-கிளிநொச்சி, எ.பிரகாஷ்(வயது 14)-உடையார்கட்டு, எ.வாசுகி(வய்து 30)-மூங்கிலாறு, எ.சனுஜா(வயது 2)-மூங்கிலாறு, எ.பிரதீபன்(வயது 7)-மூங்கிலாறு, ஜெயபாலன் (வயது30)-முழங்காவில், எஸ்.சசிக்குமார் (வயது 37), எஸ்.சனோஜ்(வயது 5),

கணபதிப்பிள்ளை(வயது 58)- முள்ளியான், புஸ்பலதா(வயது 38)-யாழ்ப் பாணம், சதீஸ்(வயது 7 மாதம்)-கோண்டாவில், எஸ்.அபிநிலா-கோண்டாவில், சதீஸ்- கோண்டாவில், சதீஸ்கொட்வின்-யாழ்ப்பாணம், தனுஷன்-ஆனந்தபுரம், எம்.கௌரிநாதன் (வயது 26)-வவுனியா, சிவராணி(வயது 29)-கிளிநொச்சி, குகப்பிரியா-கிளிநொச்சி, குபேந்தன்(வயது 6)-கிளிநொச்சி, குகப்பிரியன்(வயது 9)-கிளிநொச்சி, லூர்த்தம்மா (வயது 55), குணபாலசிங்கம்(வயது 34)-வட்டக்கச்சி, செல்வராணி(வயது 51)-முல்லைத்தீவு, தர்சினி(வயது 30)-கனகபுரம், எஸ்.சயிந்தன்(வயது 2)-கிளிநொச்சி, ஸ்ரீவித்தியா(வயது 30)-புதுக்குடியிருப்பு, உதயகுமார்(வயது 41)-கிளிநொச்சி, கணபதிப்பிள்ளை(வயது 52)-விஸ்வமடு,

கனகபிள்ளை(வயது 57)-மருதங்கேணி, யோகேஸ்வரி(வயது 56)-தாழையடி, கே.சதாசிவம், தர்மரட்ணம்(வயது 87)-கிளிநொச்சி, விநாயகரன்(வயது 21)-கிளிநொச்சி, தினுஷன்(வயது 15)-முல்லைத்தீவு, ஆர்.நஷந்தநாயகி (வயது 57) -முல்லைத்தீவு, ராசரத்தினம் (வயது 58) - முல்லைத்தீவு, யூ.சஜீவன் (வயது 4)- தேவிபுரம், யூ.கஜீவன் (வயது 6) - தேவிபுரம், யூ.ராகினி (வயது 28) - தேவிபுரம், ரு.பூமிகா (வயது 18) - தேவிபுரம், தவராசா உதயகுமார் (வயது 26) - கிளிநொச்சி, மேரிறீத்தா (வயது 55) - மாதளன், ஆர்.சுப்பிரமணியம் (வயது 77) - கிளிநொச்சி, எவ்.யோஜ் (வயது 63) - கிளிநொச்சி, எம்.ஜெய மலர் (வயது 59) - கிளிநொச்சி, ஜே.அன்னமலர் (வயது 52) - புதுக்குடியிருப்பு, ஏ.அற்புதமலர் (வயது 30) - இரணப்பாலை, ரி.யதுர்ஷன் (வயது 7) - கொம்பாவில், ரி.வனிதா (வயது 27) - கொம்பாவில், ரி.அர்சிகா (வயது 3) - கொம்பாவில்), எஸ்.சிவகாமி (வயது 3) - முத்தையன் கட்டு, எம்.பொன்னம் பலநாதன் (வயது 83) -கிளிநொச்சி, எஸ்.நல்லையா (வயது 49) - மாதளம், கே.கருணேஸ்வரன் (வயது 41) - தேவிபுரம், எஸ்.வடிவாம்பலி (வயது 63) - கிளிநொச்சி, நிரோஜன் (வயது 7மாதம்) - மாத ளன், பிறின்கி (வயது 29) - மாதளன், ஆர்.சுந்தரி (வயது 47) - நடுகன்னி,

எ.வசந்தி (வயது 33)- நாச்சிக்குடா, எ.அனோஜா (வயது 3) - நாச்சிக்குடா, என்.பெரியசாமி [illegible] சிவதர்சினி [illegible] பவித்திரன் (வயது 1) மாதளன், எஸ்.டொசிசா (வயது 4) மாதளன், ராஜரத்தினம் (வயது 31), எம்.தயானந்தன் (வயது 34) - திருகோணமலை, சிவநாதன் (வயது 9) - யாழ்ப்பாணம், எம்.ராமன் (வயது 26) - முள்ளியவளை, ஐ.நீறஜா (வயது 21) - முள்ளியவளை, எம்.தங்கமணி (வயது 56) - முள்ளியவளை, எஸ்.கதிவேல் (வயது 80)-பரந்தன், சாந்தசறோஜினி (வயது 49) - முள்ளியவளை, என்.பரமேஸ்வரன் (வயது 59) - விசுவமடு, எஸ்.விபுலா (வயது 8) முல்லைத்தீவு, எஸ்.மகாலட்சுமி (வயது 82) - மணியங்குளம், கே.பிரியா (வயது 13) - மாதளன், கே.பரமலோஜினி (வயது 38) - மாதளன், கே.சுப்பிரமணியம் (வயது 64) - மாங்குளம், எம்.சீதாதேவி (வயது 66) - யாழ்ப்பாணம், ஏ.கதறீனா (வயது 66) - ஆண்டான்குளம், எம்.சக்திவேல் (வயது 71) - பாண்டியன்குளம், கே.நாகமுத்து (வயது 73) - பரந்தன், பி.செல்லக்காண்டி (வயது 67) - பொக்கனை, கே.சுரேஸ் (வயது 33) - கிளிநொச்சி, பி.நிதர்ஷன் (வயது 26) - முள்ளியவளை, ஆர்.கவிதா (வயது 35) - வற்றாப்பளை, ஆர்.மதுசுதன் (வயது 4) - வற்றாப்பளை, ரி.கார்த்திகா (வயது 2) - வற்றாப்பளை, எஸ்.பாலசுந்தரம் (வயது 53) - கிளிநொச்சி, சி.கோவிந்தபிள்ளை (வயது 70) - வட்டக்கச்சி, ரி.கீர்த்திகா (வயது 12) - பூநகரி, தமிழ்நேசன் (வயது 42) - கிளிநொச்சி, என்.நாதகுமார் (வயது 17) - கிளிநொச்சி, எஸ்.கிருபாயினி (வயது 31) - இரணைப்பாலை, எஸ்.லக்ஷனா (வயது 2.5) - இரணைப்பாலை, பி.ராமன் (வயது 70) - முத்தையன்கட்டு, எஸ்.விஸ்வரூபி (வயது 18) - பள்ளமோட்டை, எம்.மதிவாணி (வயது 26) - கிளிநொச்சி, லிகிர்தன் (வயது 40 நாள்) - கிளிநொச்சி, யூ.விச்சன் (வயது 4) - புதுக் குடியிருப்பு, யு.நிஷாந்தினி (வயது 24) - புதுக்குடியிருப்பு, ஐ.புவனலோஜன் (வயது 29) - யாழ்ப்பாணம், ஐ.கீர்த்திகா (வயது 3) - புதுக்குடியிருப்பு, ஐ.கோகிலா (வயது 26) -புதுக்குடியிருப்பு, தர்சிகன் (வயது 4.5) - புதுக்குடியிருப்பு, கணேஸ்வரி (வயது 29) - கொக்குத்தொடுவாய், பி.நாகலிங்கம் (வயது 72) - வட்டக்கச்சி, ஆர்.பிரியா (வயது 10) - புதுக்குடியிருப்பு, ஆர்.றீஸ்வரி (வயது 35) - புதுக்குடியிருப்பு,

ஆர்.குமரன் (வயது 11) - புதுக்குடியிருப்பு, ரி.சுப்பிரமணியம் (வயது 48) - முள்ளியவளை, எஸ்.மனோரஞ்சிதம் (வயது 46) - பள்ளமோட்டை, எம்.சறோஜினி (வயது 55) - முள்ளிக்குளம், கே.சீதேவிப்பிள்ளை (வயது 60) - வட்டக்கச்சி, ஜே. றாகல் (வயது 6) - கிளிநொச்சி, சாந்தி (வயது 37) - கிளிநொச்சி, ஆர்.தனுஷன் (வயது 1.5) - கிளிநொச்சி, ஆர்.தனுஷன் (வயது 10) - கிளிநொச்சி, ஆர்.அபிஷா (வயது 13), எஸ்.ரவிராசன் (வயது 38) - கிளிநொச்சி, எஸ்.கௌரி (வயது 33) - கிளிநொச்சி, எஸ்.வசந்தாதேவி (வயது 50) - கிளிநொச்சி, எஸ்.அனோஜா (வயது 1.5) - கிளிநொச்சி, பி.புஷ்பலதா (வயது 14) - திருகோணமலை, என்.நாகலாகாண்டீபன் (வயது 23) - மல்லாவி, எம்.தனலக்ஷ்மி (வயது 53) - புதுக்குடியிருப்பு, சிவமயம் (வயது 70) - கிளிநொச்சி, சிந்துஜன் (வயது 9) கொடிகாமம், சிரஞ்சீவி (வயது 7) கொடிகாமம், எஸ்.ராங்குமார் (வயது 40), வற்றாப்பளை, எம்.சிவகரன் (வயது 38),

கொடிகாமம், சிவசெந்தூரன் (வயது 5) - கொடிகாமம், ஆர்.கமலேஸ்வரி (வயது 58) -கிளிநொச்சி, எம்.விக்னேஸ்வரி (வயது 28) - முறுகண்டி, எஸ்.கமலாதேவி (வயது 65) - கிளிநொச்சி, கனகதுரைசிங்கம் - நீர்வேலி, ஐ.நாகதர்சினி (வயது 26) - கிளிநொச்சி, கே.தர்சன் (வயது 7) - நீர்வேலி, ரி.விஜயகுமார் (வயது 33) - வவுனிக்குளம், வி.விதுர்சிகா (வயது 3) - வவுனிக்குளம், விநாயகமூர்த்தி (வயது 63) - மல்லாவி, வி.சுகிர்தா (வயது 30) -வவுனிக்குளம், ரி.சுபாசினி (வயது 35), எஸ்.சிவாஜினிதேவி (வயது 35) - விசுவமடு, எஸ்.சிவச்செல்வன் (வயது 3) - விசுவமடு, எஸ்.தனபாலசிங்கம் (வயது 62), தேவிபுரம், தங்கமுத்து (வயது 67) - இரணைப்பாலை, கொறிசா, ஐ.ரவீந்திரா (வயது 43) - கரியக்கேணி, சந்திரசேகரம் (வயது 31) - யாழ்ப்பாணம், கேதீஸ்வரன் (வயது 57) - ஸ்கந்தபுரம், கே.ஜெயானந்தன் (வயது 60) - இரணைப்பாலை, நாகேஸ்வரி (வயது 56) - இரணைப்பாலை, யதுர்ஷனா (வயது 5) - இரணைப்பாலை, ஜெயந்தன் (வயது 5) - கிளிநொச்சி,

கிருஷ்ணபிள்ளை (வயது 62) - கிளிநொச்சி, துசித்திரா (வயது 12) - கிளி நொச்சி, தொம்ஷன் (வயது 3) - கிளிநொச்சி, எம்.அன்ரனி (வயது 50) - முள்ளியவளை, நவரட்ணராஜா (வயது 50) - முல்லைத்தீவு, புஸ்பவதி (வய்து 47) - கிளிநொச்சி, துஷ்யந்தன் (வயது 6) - கிளிநொச்சி, லில்லி அக்னஸ் (வயது 62) - புதுக்குடியிருப்பு, மதுசாந்தி (வயது 13) - புதுக்குடியிருப்பு, இசாகீதன் (வயது 8 மாதம்) - கிளிநொச்சி, எம்.நதீஸ்கலா (வயது 17) - கிளிநொச்சி, எம்.சுஜீவன் (வயது 14) - கிளிநொச்சி, வசந்தராணி (வயது 43) - கிளிநொச்சி, வி.தயாபரன் (வயது 31) - கிளிநொச்சி, ஸிஸ்.சின்னத்துரை (வயது 36) - நெடுங்கேணி, குமாரசாமி (வயது 58) - நெடுங்கேணி, ராசேந்திரன் (வயது 31) - யாழ்ப்பாணம், என்.சமோதா (வயது 27) - முல்லைத்தீவு, ரி.குமாரதேவி (வயது 42) - கிளிநொச்சி, கௌசிகன் (வயது 13) - முல்லைத்தீவு, எவரெஸ்ரா (வயது 43) - முல்லைத்தீவு,

அருள்சேகரம் (வயது 29) - முல்லைத்தீவு, பேதுருப்பிள்ளை (வயது 51) - முல்லைத்தீவு, கதிரமலை (வயது 46) - வெள்ளாங்குளம், ஜெயந்தினி (வயது 31) - முல்லைத்தீவு, சசிகரன் (வயது 20) - ஆனந்தபுரம், தவதர்சன் (வயது 16) - முல்லைத்தீவு, ராசய்யா (வயது 63) - மருதங்கேணி, அசோகமலா (வயது 30) - ஒமந்தை, அன்ன லட்சுமி (வயது 53) - பரந்தன், இந்திகா (வயது 13) - வெள்ளான்குளம், சுயாதா (வயது 27) - பரந்தன், சிவபாக்கியம் (வயது 66) - புங்குடுதீவு, விதுசன் (வயது 9) - செம்பியன் பற்று), தயானி (வயது 13) - செம்பியன் பற்று, ஜெயலக்சுமி (வயது 41) - செம்பியன் பற்று, பிறதீக் (வயது 15) - முல்லைத்தீவு, தேவராஜசிங்கம் (வயது 52) - ஒமந்தை,

உதயகுமாரி (வயது 46) - ஒமந்தை, சிந்துஜன் (வயது 10) ஒமந்தை, புஷ்பலதா (வயது 59) - முல்லைத்தீவு, செல்வராணி (வயது 49) - வட்டுக்கோட்டை யாழ்ப் பாணம், செந்தில்வேல் (வயது 32 - முல்லைத்தீவு), பிரியங்கா (வயது 16) - செம்பியன்பற்று, வல்லிப்பிள்ளை (வயது 69) - முள்ளிய வளை, விஜயகுமாரி (வயது 46) - புதுக்குடியிருப்பு, வள்ளியம்மா (வயது 36) - ஒசில் திருகோணமலை, லோகவர்சனி (வயது 2.மாதம்) - ஒசில் திருகோணமலை, வன்னிய சூரியன் (வயது 6) - செம்பியன்பற்று, இராச பாலன் (வயது 59) - இலச்சி, நாகேஸ்வரி (வயது 51),

அரவிந்தன் (வயது 31) - முல்லைத்தீவு, ஏ.ரதனியா (வயது 29) - முல்லைத்தீவு, ஏ.அனுஷன் (வயது 8) - முல்லைத்தீவு, இராசமணி (வயது 60) - அராலி, மங்களேஸ்வரி (வயது 60)- சுன்னாகம், அனுஷியா (வயது 15) - இலச்சி, அனுஷாந்த் (வயது 7) - சின்னவராயன்குளம், அர்ச்சனா (வயது 9) - சின்னவராயன்குளம், மனுராஜா (வயது 14) - செம்பியன்பற்று, செல்லம்மா (வயது 65) - பொன்னாலை, ஸ்ரீகாந்தி (வயது 30) - வல்லிபுரம், ரி.கஜீவன் (வயது 11) - சுன்னாகம், விஜயலட்சுமி (வயது 45) - முல்லைத்தீவு, ரஜனி (வயது 32) - சின்ன வராயன்குளம், சுரேஸ்குமார் (வயது 22) - தாளையடி, தபோ தினி (வயது 4) - முள்ளியவளை, ரஜனி (வயது 36) - முல்லைத்தீவு, சங்கீதன் (வயது 8) - முல்லைத்தீவு, கார்த்திகேஸ்வரி (வயது 40) - இரணைப்பாலை, வீஜிகரன் (வயது 23) - மல்லாவி, தினேஸ்கரன் (வியது 5) - மல்லாவி, சரோஜினிதேவி (வயது 61) - முள்ளியங்காடு, கிரிஷாந்த் (வயது 11) - ஆனந்தபுரம், விதுஷா (வயது 6) - இயக்கச்சி, நவரட்ணம் (வயது 35) - இயக்கச்சி, என்.திலுஜன் (வயது 9) - இயக்கச்சி, புவனா (வயது 5மாதம்)- தெல்லிப்பழை, சசிகரன் (வயது 12) - கிளிநொச்சி, கிருஷ்ணகுமாரி (வயது 10) - கிளிநொச்சி,

சுஜாஜா (வயது 23) - முழங்காவில், உமாசங்கர் (வயது 5) - கிளிநொச்சி, புவனேஸ் வரி (வயது 48) - இயக்கச்சி, திவ்யா (வயது2) - இயக்கச்சி, யோகநாதன் (வயது 49) - வவுனியா, பிரதீபா (வயது 4) - மடு, வளர்மதி (வயது 28) - மடு, அழகர் (வயது 53) - கிளி நொச்சி, எஸ்.சிறிஸ்கந்தராஜா (வயது 41) - இணுவில், விமலாதேவி (வயது 57) - முள்ளியவளை, பொன்னம்மா (வயது 33) - இயக்கச்சி, சாகித்தியா (7 மாதம்) - மாங்குளம், நாகேஸ்வரி (வயது 60) - மாங்குளம், தவம் (வயது 50) - புதுக்குடியிருப்பு, பாலசிங்கம் (வயது 52) - மாங்குளம், ஐங்கரன் (வயது 24)- புதுக்குடியிருப்பு, பாமினி (வயது 27) - மாங் குளம், ஆனந்த நீதன் (வயது 28) - மடு, செல்வநாயகம் (வயது 52) - யாழ்ப்பாணம், தவனேஸ்வரி (வயது 14) - புதுக்குடியிப்பு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

UCSC

# UNIVERSITY ADMISSIONS FOR BACHELOR OF INFORMATION & COMMUNICATION TECHNOLOGY (BICT) DEGREE FOR THE ACADEMIC YEAR 2008/2009

COMMON APTITUDE TEST FOR THE SELECTION OF CANDIDATES FOR THE BACHELOR OF INFORMATION AND COMMUNICATION TECHNOLOGY DEGREE PROGRAMME AT THE UNIVERSITY OF COLOMBO SCHOOL OF COMPUTING (UCSC), THE VAVUNIYA CAMPUS OF THE UNIVERSITY OF JAFFNA AND THE RAJARATA UNIVERSITY OF SRI LANKA.

The University Grants Commission (UGC) has decided that a **Common Aptitude Test** be held for admission of students for the study programme leading to the Bachelor Information and Communication Technology (BICT). Accordingly, those who sit and pass the test will be considered for admission to the University of Colombo School of Computing (UCSC) or the Vavuniya Campus of the University of Jaffna or the Rajarata University of Sri Lanka. The minimum requirements for University Admissions are specified under section 3.2 of the Hand Book on **"Admission to the Undergraduate courses of the Universities in Sri Lanka Academic year 2008/2009"** issued by the University Grants Commission.

Applicants who submit their applications to the University Grants Commission to be considered for University Admission for the academic year 2008/2009 are required **in addition,** to apply to sit and pass the Aptitude Test mentioned herein, if they wish to be considered for admission to the above course. The test will be held at 05 centres (Colombo, Kandy, Mihintale, Vavuniya and Jaffna) of which the preferred centre can be indicated in the application form.

**Please note that the Aptitude Test will be held in English only.**

## ELIGIBILITY FOR THE APTITUDE TEST

Candidates should have fulfilled the additional requirements listed in section 8.4.6 of the above UGC Hand Book 2008/2009 (Page 32) in order to be considered for this programme.

## PROCEDURE FOR APPLICATIONS

1. Candidates are required to prepare their own application form on A4 size paper <u>in English</u> in accordance with the format given below

**OR**

Download the specimen application form from the UCSC website http://www.ucsc.cmb.ac.lk. **Hand written applications are not accepted** under any circumstances.

2. The Aptitude Test fee of Rs. 350/- can be paid to any branch of the People's Bank by using the People's Bank normal **cash paying-in-slip** drawn in favour of University Colombo School of Computing **People's** Bank Account No. 086100121190316 (Thimbirigasyaya Branch). Please note that the applicants' copy of the cash-paying-in slip has to be sent along with the application form, whilst retaining a photocopy for applicants' record. **Cheques/Money Orders will not be accepted.**

3. **Certified copies** of the **G.C.E. Advanced Level Certificate, G.C.E. Ordinary Level Certificate** and the **National Identity Card (or Postal Identity Card)** should be sent along with the duly filled application form. (Certificates should be certified by the School Principal or a Justice of Peace). The Official Stamp of the certifying officer should be placed on such certified copies. **Original certificates should not be sent.**

4. Candidates are required to send a **Self- Addressed Stamped (Rs. 40/- stamps) Envelope of 9"x 12"** size along with the application form. This envelope will be used to post the admission card for the Aptitude Test to candidates by registered post.

**Notes:**

(i) If any difference exists in the name indicated in the application and the certificates, an affidavit should be submitted to confirm that they relate to one and the same person.

(ii) The Admission Cards would be issued to candidates who have satisfied the necessary admission requirements for the Aptitude Test.

(iii) Applications will be rejected if:

(a) Candidate does **not possess the minimum admission requirements for the Aptitude Test;**

(b) Application is **not accompanied by a bank cash paying-in-slip and duly certified copies of the G.C.E. A/L and G.C.E. O/L certificates, and the NIC/Postal ID;**

(c) **Application is incomplete; and**

(d) **Application is not received by the closing date.**

## SUBMISSION OF APPLICATIONS

Applications can be sent **only under Registered Cover** to reach the Senior Assistant Registrar/Examinations & Registrations, UCSC, No. 35 Reid Avenue, Colombo 7 **on or before 13th March, 2009.**

Please indicate on the top left hand corner of the envelope the title "BICT – Aptitude Test 2008/2009."

## DATE OF APTITUDE TEST

Sunday, 5th April 2009

Senior Assistant Registrar
University of Colombo School of Computing
20th February 2009

## SPECIMAN APPLICATION FORM

**UNIVERSITY ADMISSION ACADEMIC YEAR 2008 / 2009. APTITUDE TEST FOR THE SELECTION OF CANDIDTES FOR BACHELOR OF INFORMATION AND COMMUNICATION TECHNOLOGY DEGREE PROGRAMME**

For office use only

1. Surname with Initials in block letters

(leave one blank cage between surname and initials and between initials)

2. Full Name in block letters

(leave one blank cage between names)

3. Address in block letters

(leave one cage between different segments of the address)

4. Sex

Male ☐

Female ☐

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(Continued on Page 16)





# தமிழக வாக்களிப்பை தீர்மானிக்கப்போகும் ஈழத் தமிழர் விவகாரம்

ராஜீவ்காந்தி கொலையை அடுத்து தமிழ்நாட்டில் ஏற்பட்டிருந்த ஈழத்தமிழர் எதிர்ப்புணர்வு தற்போது தலைகீழாக மாறியுள்ளது.

கல்லூரி மாணவர், சட்டத்தரணிகள், மருத்துவ மாணவர்கள், அரசியல் கட்சிகள், தமிழ் உணர்வு இயக்கங்கள் என பல மட்டங்களில் ஏற்படுத்தப்பட்டு வரும் போராட்ட நகர்வுகள் அ.தி.மு.க., காங்கிரஸ் போன்ற கட்சிகளை வாயடைக்க வைத்துள்ளன. இந்தச் சந்தர்ப்பத்தில் ராஜீவ் கொலை என்ற விஷயத்தை எழுப்பினாலும் பலனேதும் கிட்டாது என்பதை காங்கிரஸ் கட்சி உணர்ந்திருக்கிறது. இதனால்தான் ஆரம்பத்தில் தமிழ் ஆதரவு போராட்டங்களை புலிப் போராட்டம் என எள்ளிநகையாடி வந்த தமிழகக் காங்கிரஸார் இன்று மௌனிகளாகிவிட்டனர். புலி ஆதரவாளரைக் கைதுசெய் என்று வெற்றுக்கூச்சலிட்டு வந்த காங்கிஸார்



சுப்பிரமணியசுவாமி


இன்று தேர்தல் நிலைவரத்தால் வாயை மூடும் நிலைமை ஏற்பட்டுள்ளது.

இதில் மற்றொருவரது நிலைமையும் மிகவும் பரிதாபகரமானது. அவர் தான் ஜெயலலிதா. சில மாதங்களுக்கு முன்பு தான் கருணாநிதியும் தி.மு.கவும் புலி ஆதரவாளர் என அபாயச்சங்கு ஊதி வந்த அம்மாவும் இன்று அசாதாரணமான அமைதியை வெளிப்படுத்துகிறார். தேர்தல் என்ற ஒன்று வருவது தான் இதற்குக் காரணம். குறிப்பாக அ.தி.மு.க. அணியிலுள்ள ம.தி.மு.க., கம்யூனிஸ்ட் கட்சிகள் தீவிர ஈழ அனுதாபக் கட்சிகள். இந்தக் கட்சிகளின் வாக்குகளை அ.தி.மு.க. வேட்பாளர்கள் பெற வேண்டுமானால் இவ்வாறு ஈழத்தமிழர் போராட்டத்தை எதிர்க்காமல் இருப்பதை தவிர வேறு வழியில்லை. அம்மா மனதார ஈழத்தமிழர் ஆதரவுப் போராட்டங்களை வெறுத்தாலும் தேர்தல் வெற்றியை முன்னிட்டு மௌனமாக உள்ளார். இது சில மாதங்களுக்கு முன்னர் இருந்த அவரது நிலைப்பாட்டுக்கு முற்றிலும் மாறானதாகும். அதாவது, அப்போதும் அவரது அணியில் ம.தி.மு.க இருக்கவே செய்தது. ஈழத் தமிழ் ஆதரவு போராட்டமும் நடத்தியது. ஆனால், ம.தி.மு.க. பற்றி ஏதும் கூறாமல் புலிகளை தி.மு.க. ஆதரிப்பதாக ஜெயலலிதா சாடி வந்தார். இன்று அவ்வாறு கூட தி.மு.கவை சாடுவது கிடையாது. காரணம் ஈழத்தமிழர். ம.தி.மு.க. மற்றும் கம்யூனிஸ்ட் கட்சி வாக்குகளை ஜெயலலிதா இழக்க நேரிடும். அந்தளவுக்கு ஈழத்தமிழர் ஆதரவு நிலைப்பாடு தமிழகம் முழுவதும் வியாபித்திருப்பது அம்மாவுக்கும் காங்கிரஸ் கட்சிக்கும் எரிச்சல் தரும் விஷயம் என்பதில் சந்தேகமில்லை. ஆனாலும், சகித்தே ஆகவேண்டிய நிர்ப்பந்தம் உண்டாகியுள்ளது. குறிப்பாக அ.தி.மு.கவுக்கு ஆதரவு அதிகமுள்ள தமிழ்நாட்டின் தெற்கு மாவட்டங்களில் தான் ஈழத்தமிழர் ஆதரவு நிலைப்பாடு அதிகரித்துள்ளது. இது அ.தி.மு.கவுக்கு முக்கிய பிரச்சினையாகும். அ.தி.மு.கவின் கோட்டையான தெற்கு மாவட்டங்களில் ஈழத்தமிழர் ஆதரவுப்போராட்டங்களை எதிர்த்தால் அ.தி.மு.க. நிச்சயம் வாக்குகளை இழக்கும். இராமநாதபுரம், தூத்துக்குடி போன்ற கரையோர மாவட்டங்களில் இலங்கை அரசுக்கு எதிரான உணர்வு உச்சக்கட்டத்தில் உள்ளது. இதற்கு மற்றொரு காரணம், இம்மாவட்ட மீனவர்கள் இலங்கைப் படையினரால் கடலில் நையப்புடைக் கப்படுவது ஆகும். தமிழகத்தில் இலங்கைப் போருக்கு எதிரான போராட்டம் நடப்பது குறித்து அறிந்துள்ள இலங்கை கடற்படை தமிழக மீனவர் மீது ஆத்திரத்தைக் கொட்டுவதால் தமிழகத்தில் ஈழத்தமிழர் ஆதரவு மேலும் அதிகரிப்பதே உண்மையாகும். இதனால் தூத்துக்குடி, ராமநாதபுரம், கன்னியாகுமரி போன்ற

**- எஸ்.சுரேந்திரஜித்-**

மாவட்டங்களில் ஈழ ஆதரவு வேட்பாளர் வெற்றி பெறும் வாய்ப்பு அதிகமுள்ளது.

இந்த ஈழ ஆதரவு அலையை எதிர்த்து நீச்சல் போட்டு அ.தி.மு.க. வேட்பாளர்கள் வெல்ல முடியாது. எனவேதான் ஜெயலலிதா மௌனம் காக்க முடிவு செய்துள்ளார் என கூறப்படுகிறது. எனினும், கொள்கை ரீதியாக ஜெயலலிதா அப்படி அல்ல. பிராமண மேலாதிக்கவாதி அவரது மனச்சாட்சி நிச்சயமாக ஈழத்தமிழர்களை ஆதரிக்க அவரை அனுமதிக்காது. அதுமாத்திரமன்றி அவரை தூண்டிவிட மற்றைய பிராமணப்பேய்களான சுப்ரமணியசுவாமி, துக்ளக் சோ, ஹிந்து பத்திரிகையின் ராம், தினமலர் பத்திரிகையின் ஆசிரியர் போன்றோர் எவ்வளவு முயன்றும் ஜெயலலிதா தனது நோக்கத்தில் குறியாக உள்ளார். அதாவது, தேர்தலில் வெல்ல வேண்டும். கருணாநிதியின் ஆட்சியை தகர்க்க வேண்டும். இந்த ஒரு நோக்கத்துக்காக எந்த விலை கொடுக்கவும் ஜெயலலிதா தயார். பிராமணவாதத்தை விட்டுக் கொடுக்கவும் அவர் முன்வந்துள்ளமை தெளிவு. துக்ளக் சோவுக்கும் இந்து



சோ

பத்திரிகை ராமுக்கும் சுப்ரமணியசுவாமிக்கும் தமிழக முதல்வராக வரவோ, இந்திய பிரதமராக வரவோ எக்காலத்திலும் வாய்ப்பு கிடையாது. ஆனால், அவர்களை ஒத்த பிராமணரான அம்மாவின் நிலைமை அதுவல்ல. அவருக்கு வாய்ப்புகள் பிரகாசமாக உள்ளன. துக்ளக் சோவின் கொள்கைக்காக அதை ஏன் கெடுத்துக்கொள்ள வேண்டும்? சுப்ரமணியசுவாமிக்கு ஆயிரம் வாக்குகள் கூட தேர்தலில் கிடைக்காது. அவரை நம்பி ஈழத்தமிழர் போராட்டத்தை எதிர்த்தால் மண்குதிரையை நம்பி நட்டாற்றில் இறங்கிய கதையாகவே முடியும். தமிழகத்தில் இன்று எழுந்துள்ள இந்த அலை கொழுத்த பிராமணர்களின் தலையில் விழுந்த பலமான அடியாகும்.

குறிப்பாக துக்ளக் சோ என்ற கொலைகாரப் பாதகர் யார்யாருக்கெல்லாம் பந்தம் பிடிக்கின்றார் என்பதைப் பார்க்கும் எவருக்கும் வயிறுபற்றி எரியும். சமீபத்தில் பி.ஜே.பியின் பிரசாரத்துக்காக சென்னை வந்த குஜராத் முதல்வர் மோடியை ஓடோடிச்சென்று துக்ளக் சோ சந்தித்துள்ளார். தங்களுக்கென்று தனியான அரசியல்முகவரி இல்லாத சோ போன்றவர்கள் கொலைகாரர்களின் நிழலில் தஞ்சம் புகுவது ஆச்சரியமல்ல. முஸ்லிம் அப்பாவிகளை குஜராத்தில் கொன்ற இந்துக்கறை இன்னும் மோடியின் கையில் காயவில்லை. அத்தகைய மோடியோடு நட்புப் பாராட்ட பி.ஜே.பியின் தோழமைக் கட்சிகள் கூட விரும்பவில்லை. ஆனால், சோவுக்கு இந்த வெட்கம் கூட கிடையாது. ஊன்றிப் பார்த்தால் சோ போன்றவர்கள் உலகம் முழுதும் சிறுபான்மையினரின் இர்த்தத்தைச் சிந்த உந்துதல் அளிப்பவர்கள் என்பது தெளிவாகும். இலங்கையில் தமிழர்கள், குஜராத்தில் முஸ்லிம்கள், கொசோவாவில் அல்பேனியர்கள், சூடான் டார்பூரில் சிறுபான்மைகள் என ஒடுக்கப்படும் மக்களை இன்னும் நசுக்கவும் இரத்தம் குடிக்கவும் பெரும்பான்மை வெறியர்களுக்கு பின்புலமாக இருப்பவர்கள் இப்படியானவர்களே.

சோவின் அளவுக்கு வெளிப்படையாக இல்லாவிடினும், நாசூக்காக சிறுபான்மையின ஒடுக்கலுக்கு துணைபுரியும் மற்றும் இரு பிராமண ஊதுகுழல்கள் ஹிந்து மற்றும் தினமலர் பத்திரிகைகளாகும். உலகம் முழுவதிலும் அபயக்குரல் எழுப்பும் சிறுபான்மையினங்களுக்கு இவர்கள் சொல்லும் செய்தி என்ன? 'அழிந்துபோய்விடுங்கள்' என்பதா என்றே கேட்கத் தோன்றுகிறது. இவர்களது உபதேசத்தை செவிமடுக்க ஜெய லலிதாவும் மறுத்துவிட்டமையானது இவர்களது வங்குரோத்து நிலையையே காட்டுகிறது. எதிர்வரும் தமிழகத் தேர்தலில் வெற்றிபெற ஈழத்தமிழர் ஆதரவுக் கோஷம் பெரிதும் உதவும் என்பதை பல கட்சிகளும் உணர்ந்துள்ளன. சமீபத்தில் டெல்லியில் நடந்த ஈழஆதரவு மாநாட்டில் அத்வானி பேசியது இந்தச் செய்தியை உணர்த்தியது. அதாவது, தமிழகத்தில் கூட்டணி வைக்க தோழமைக் கட்சிகளின்றி தடுமாறும் பி.ஜே.பி. முக்கியமான ஆயுதத்தை கையில் எடுத்துக்கொண்டுள்ளது. அதுதான் ஈழத்தமிழர் விவகாரமாகும்.

பற்றி எரியும் ஈழஆதரவு நெருப்பில் குளிர்காய காங்கிரஸ், பி.ஜே.பி., அ.தி.மு.க. என சகலரும் தயாராவது தெளிவான விஷயம். அந்த வகையில் ம.தி.மு.க., பா.ம.க., கம்யூனிஸ்ட், விடுதலைச் சிறுத்தைகள் போன்ற உண்மையான ஈழ அனுதாபிகள் தமது வாக்குகளை இந்தப் பிராமணர்களுக்கு சம்பாதித்துக்கொடுக்கவேண்டிய நிர்ப்பந்தத்தில் உள்ளனர். தேர்தல் முடியும் வரை காங்கிரஸும் ஜெயலலிதாவும் மௌனமாக இருந்து வாக்குகளை வென்றதும் சுயரூபம் காட்டுவர் என்பது தெளிவு. இன்றைய தமிழகத்தின் பரிதாபநிலை இதுதான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெக்கங் கெட்டவர்கள்

சிறுகதை

'யேம்ஸ்கடைக்குக்' கிட்ட வருகையில் பூவரச மரத்தடியில் நண்பர்கள் நிற்பதை, யேசுதாசன் கண்டான்.

மெல்லிதாய்ச் சிரித்தபடி அவர்களருகில் சைக்கிளை நிற்பாட்டுகையில் ''எப்பயடாப்பா வந்தனீ?'' என அல்போன்ஸ் கேட்டான்.

''ராத்திரித்தான் .....'' என்று முடிக்க முன்னாலேயே, யோண்பின்ரன் குறுக்கிட்டான்.

''மாஸ்ரர்; இங்கயெல்லோ பெரிய விஷயமெல்லாம் நடக்குது.........''

கொடுப்பிற்குள் சிரித்தபடி, அவன். எப்பவுமே, அவன் இப்பிடித்தான். ஏதோ ஒன்றை, மேலும் சொல்லத் தயங்கியவனாய்.....

''டேய், சொல்றா..... பெரிய வெக்கம்'' எமிலியூஸ் யோண்பின்ரனைக் கேலியாய் வற்புறுத்தியபடி. கிறீஸ்துராசா உதட்டிற்குள் சிரிப்பு எழ, பின்னால் கைகட்டியவனாய் காலினால் மண் ணைச் சீத்தியபடி நின்றான். தள்ளி, 'வலை பொத் தியபடி' மண்ணில் இருந்த குலசிங்கமும் எழும்பி வந்தான்.

யேசுதாசனிற்கு ஒரே சஸ்பென்ஸ்; என்னவென்று விளங்காததில் ஒரே குழப்பமாய்.

''என்ன விஷயம்...... நேர சொல்லுங்களன்''- அறியும் ஆவலோடு கிறீஸ்துராசாவிடம் கேட்டான்.

''உமக்குக் கலியாணங்கேக்கினம்; அதான்.''

கிறீஸ்துராசா சொல்லியதைக் கேட்டதில் யேசுதாசனிற்கு ஒருவித, நூதன உணர்ச்சி பரவியது. கூச்சச் சிரிப்பும் முகத்தில் பரவுகையில் விடுப்பறியும் முனைப்பும் எழும்ப ''அப்பிடியா..... அப்ப சொல்லுங்களன்; நாங்களும் அறியத் தானே வேணும்'' என யோண்பின்ரனைப் பார்த்தபடி.

''கடையிக்குள்ள கதைக்கலா''மென எமிலியூஸ் சொல்ல யேம்ஸ்கடையின் உள்பக்கத்தில் போய், வாங்கில் அமர்ந்தார்கள்.

எமிலியூசே 'ரீக்கும்' ஓடர் பண்ணினான்.

யோண்பின்ரன் தயக்கத்தை விட்டவனாய் விஷயத்துக்கு வந்தான்.

''உங்கட மாமா செல்வநாயகம் உம்மட்டக் கதைக்கச் சொன்னோர்...... காசு இருபதினாயிரம்; பெட்டைக்கு நகை, செபஸ்தியார் கோயிலடி வீடு தருவினமாம்.... உம்மட விருப்பத்தக் கேக்கச் சொன்னோர்.....''

''நல்லதுதானே..... இப்ப எல்லாமாய் எழுபதினாயிரத்துக்குக் கிட்டவரும். நல்ல இடம்; சொந்தத்துக்குள்ள....''

எமிலியூசும் சேர்ந்து வற்புறுத்திய படி. 'காசு பணங்களோடேயே இவங்கள், திருப்தி அடைவாங்கள்...... பண உடைமையிலேயே உறவுகளைக் கட்டுகிற இந்த முதலாளித்துவ அமைப் பில்....., அதனுடைய போக்கில் எடுபட்டுச் செல்லுகிறவங்கள்........ இவங்கள்.'

பணத்தை, பணக்காரரைப் பெரிதாய் என்றுமே யேசுதாசன் நினைத்திருக்கவில்லை. மாறாய், வெறுப்பும் வஞ்சினமுந்தான் அவன் மனதுள், பெருகி வளர்ந்தபடி இருந்தன. தன்னுடைய கல்யாணத்தின்மூலம் 'சம்மாட்டி' யென்றோ, 'குத்தகைக்காரனென்றோ' இருந்த ஊர்ப் பிரமுகர் குடும்பத்திலொன்றோடு கலந்துவிடும் சந்தர்ப்பத்தைப் பார்த்தும், அவன் காத்திருக்கவில்லை.

அவனுடைய எண்ணங்கள், தேடல்கள் எல்லாம் வேறானவையாய் இருந்தன. தன்னுடைய ஆளுமையினைத் திருப்திப்படுத்தியபடி......, பரஸ்பர புரிந்துகொள்ளல்களோடும் கூடிய ஒரு உள்ளத்திற்கான தேடல்....., அவ்வாறான தேடலிற் சந்தித்துக் கொண்ட அவள்......

அவனுள் நினைவுமின்னல்கள் அடுக்கடுக்காய் வெட்டிப் பாய்ந்தன.

பேராதனையில் ஒரு வருஷமாய் அவளுடன் அறிமுகங்கொண்டு பழகியபோதும் , இரண்டு மூன்று மாதமாய் எழும்பத் தொடங்கிய ஆசை..... 'சங்கமித்தா ஹோலில்' வட்டமேசைக்கு முன்னால் இருந்து கதைக்கையில் இரண்டொரு மாதமாய், நாக்கைக் கடித்து வெட்கத்தில் தலை சாய்த்த அவளின் கதைகள்..... நாணம் நிறைந்த முகத்தின் பின்னணியில் அந்தக் கண்களின் பிரகாசம்.....'

'எவ்வளவு பரவசம் கொடுத்தபடி.....!'

'வக்கேசனிற்கு' வீட்டுக்கு வரச் சொல்ல அவனும் போனபொழுது அவளது குடும்ப நிலைமை இன்னும், நன்கு விளங்கியது. சின்ன வீடு; வயதுபோன தந்தை, ஒரே அண்ணனில் தங்கிய குடும்பம்.

அங்கு எதிர்பார்ப்பதற்கு ஒன்றுமில்லை; அவர்களிடமிருந்து அவனுந்தான் ஒன்றையும் எதிர்பார்த்திருக்கவில்லையே....!

தடையாய் முன் கிடந்த சாதி, மதம் இரண்டையும் தாண்டவும் மனத்துள் வைரம் பாய்ந்து வந்தது.

'மலர்.....! நீர் உறுதிப்படுத்தினால் நானும் உறுதிப்படுத்துவேன்.....'

''இதில என்ன யோசிக்கக் கிடக்கு. சொந்தத்துக்குள்ள...... ஓமெண்டு சொல்லுமன்....''

யோண்பின்ரன் அவனது மௌனத்தைக் குலைத்தான்.

''நான் என்னண்டு சொல்லுறது..... அவையள, வீட்ட கேக்கச் சொல்லுங்க...'' யேசுதாசன் தட்டிக் கழித்தான். அவர்களும் இரண்டு மூன்று கதைகளின் பின்னால் மௌனமாகிப் போனார்கள்.

அவர்கள் போனபிறகு, கிறீஸ்துராசாவுடன் தனிய 'கடற்கரைக்குப்' போகையில் பகிடியாய்க் கிறீஸ்துராசா கேட்டான்.

''நல்ல காசு........!, சொந்தக்காறப் பெட்ட...... அப்ப கட்டுமன்''.

யேசுதாசனிற்குச் சிறிய ஆத்திரம்; அலட்சியச் சிரிப்புத் தோன்ற 'கிறீஸ்துராசா......'' எனத் தொடங்கிக் கதைத்தான்.

''......சொந்தக்காரர்...... எப்பேர்ப்பட்ட சொந்தம். பத்துப் பன்ரெண்டு வருஷமா இவங்க எங்களோட கதைக்கிறயில்ல......; காசுச் செருக்கு. சம்பந்தமெல்லாம் தங்களப்போல காசுக்காறரோட தான்... இப்ப காற்சட்ட போட்ட கவண்மேன்ற் மாப்பிள்ள வேணுமாம்; அதான்...... எங்கட்ட ஓடி வாறாங்க. இப்பயும் நாங்களில்ல..... லோங்சும், வேலையுந்தான் அவங்களுக்குப் பெரிசு.... சொந்தமெண்டாலென்ன , புறத்தியிக்குள்ள எண்டாலென்ன, நல்ல மனுசரத்தானே நாங்க கண்டுபிடிச்சுப் பழகவேணும். ''

(14 பக்கம் பார்க்க...)



யாழ்ப்பாணம் குருநகரில் 1946 ஆம் ஆண்டில் பிறந்தவர் அ.யேசுராசா.

அஞ்சலதிபர், தந்தியாளர் சேவையில் பணி புரிந்து ஓய்வுபெற்றவர்.

1968 ஆம் ஆண்டு முதல் சிறுகதைகளும் கவிதைகளும் எழுதிவரும் இவர், இலக்கியம், நாடகம், திரைப்படம் பற்றிய விமர்சனக் கட்டுரைகள் பலவற்றையும் எழுதியுள்ளார். புதுக்கவிதை எழுதுபவர்களில் முன்னிலை வகிப்பவர்.

1975 ஆம் ஆண்டிலிருந்து வெளிவந்த 'அலை' சஞ்சிகையின் நிர்வாக ஆசிரியராகவும், பின்னர் ஆசிரியராகவும், 'திசை' வார வெளியீட்டின் துணை ஆசிரியராகவும் பணியாற்றியவர். 'கவிதை', 'தெரிதல்' ஆகிய இதழ்களின் ஆசிரியருமாவார். 'அலை' வெளியீடுமூலம் ஈழத்தின் தரமான இலக்கிய நூல்களை வெளிக்கொணர்வதில் முன் நின்று செயற்படும் ஒரு பதிப்பாசிரியராக தன்னை இனங்காட்டியுள்ளார்.

இவரது ''தொலைவும் இருப்பும் ஏனைய கதைகளும்'' சிறுகதைத் தொகுதி 1974 ஆம் ஆண்டில் வெளிவந்தது.

இவரது அறியப்படாதவர்கள் நினைவாக, பனிமழை (கவிதைகள்), தூவானம், பதிவுகள் (பத்திகள்) குறிப்பேட்டிலிருந்து (கட்டுரைகள்) என்பனவும் நூலுருப் பெற்றுள்ளன.

இவரது ''வெக்கங்கெட்டவர்கள்'' சிறுகதை இவ்வார இலக்கியப்பொழிலை அலங்கரிக்கிறது.



# கவிதை என்பது அதன் ஒரு சொல்லைத் தொட்டால் கடைசிவரை நினைவுக்கு வருவதற்கு வழிசெய்துவிடும்

கவிதை புனைவது ஒரு கலை. பூவைக் கட்டுவதும் ஒரு கலை. சொற்களைக் கட்டுவதும் பூக்களைக் கட்டுவதும் ஒன்று போன்றதே. கட்டப்பெற்ற பூக்களுக்குச் சரம் என்று பெயர்; கட்டப்பெற்ற சொற்களுக்குக் 'கவிதை' என்று பெயர்.

உரைநடையில் உள்ள சொற்கள் உதிரிப் பூ போன்றவை. கவிதையில் உள்ள சொற்கள் சரம் போன்றவை.

உதிரிப் பூக்களில் ஒன்றைத் தொட்டு எடுத்தால் அதுமட்டுமே வரும். அடுத்த பூ வராது. கட்டப்பெற்ற பூக்களில் ஒன்றைத் தொட்டெடுத்தால், அதைத் தொடர்ந்து ஆயிரம் பூக்களும் வரும். உரை நடைச்சொற்களில் ஒன்றை நினைத்தால் அது மட்டுமே நினைவுக்கு வரும். கவிதையில் உள்ள ஒரு சொல்லைத் தொட்டால் கவிதையின் கடைசிச் சொல்வரை நினைவுக்கு வந்துவிடும்.

நேற்றுப் படித்த நாளிதழ்களிலுள்ள உரை நடை இன்று நினைவிலிராது. நாற்பதாண்டுகளுக்கு முன்னே படித்த ஒரு கவிதை நமது நினைவில் இருக்கும்.

தமிழ்ப் புலவர்களில் பலர் உளநூற் புலவர்கள். அவர்கள் கண்ட கனவே கவிதை. அது சொற்களைக் குறைப்பதற்காகவும், நினைவுக்குக் கொண்டு வருவதற்காகவும் தோன்றியது.

உரைநடையில் நாற்பது வரிகளில் வரும் சொற்கள், கவிதையில் நாலு வரிகளில் அடங்கிவிடும். உரைநடையில் நூறு சொற்களை ஓலையில் எழுதி வைப்பதை விட அவற்றைப் பத்துச் சொற்களில் கவிதையாக்கி ஓலையில் எழுதி வைப்பது நல்லதெனக் கண்டனர். அதில் ஓலையும் குறைவு; வேலையும் குறைவு. மேலும் மனப்பாடம் பண்ண உரைநடையை விடக் கவிதை எளிது.

பழந்தமிழ் மக்கள் வீரத்தை - காதலை- கொடையைப் பொன்னேபோல் போற்றினர். ஒழுக்கத்தை - பண்பாட்டை உயிரேபோல் போற்றினர்.

இவைபற்றி அவர்கள் ஆராய்ந்து கண்ட உயர்ந்த கருத்துச் செல்வங்களைத் தமக்குப் பின்வரும் தலைமுறையினருக்கு வழங்க எண்ணினர். அதற்காக அவர்கள் கண்டுபிடித்து அமைத்த சிறந்த பாதுகாப்புக் கருவூலங்களே கவிதைகள்.

பூக்களைக் கட்டுவதற்கு நார் அமைதல் போலச் சொற்களைக் கட்டுவதற்குச் சந்தி அமைகிறது. சந்தி என்பது ஒரு சொல்லோடு மற்றொரு சொல்லை ஒட்டுகின்ற பசையாகும். அங்கு - இருக்கும் என்பவற்றை அங்கிருக்கும் என ஒன்றாக்கும்; சங்கு - ஊது ... என ஒன்றாக்கும்; பங்கு - ஆளி என்பவற்றைப் பங்காளி என ஒன்றாக்கும். இச் சந்தியினால் கவிதைக்கு இரண்டுவித நன்மைகள் ஏற்படுகின்றன. ஒன்று முதல் சொல்லின் இறுதி எழுத்தையும் வரும் சொல்லின் முதல் எழுத்தையும் சேர்த்து ஒரு சொல்லாக ஒட்டுவது. மற்றொன்று இச்சொற்களின் பொருள் கெடாமலும், ஓசை கெடாமலும் அவற்றிலுள்ள ஒவ்வோர் எழுத்தைக் குறைத்து விடுவது. மேலே உள்ளவற்றில் எட்டு எழுத்து ஏழானதையும், ஆறெழுத்து ஐந்தானதையும், ஐந்தெழுத்து நான்கானதையும் கண்டு இவ்வுண்மையை உணரலாம்.

நினைவாற்றலுக்குக் கவிதைகள் துணை செய்கின்றன என்பதை மேலே கண்டோம். கவிதைக்குத் துணை செய்வன அதிலுள்ள எதுகையும் மோனையுமே ஆகும். எதுகையும் மோனையுமின்றிக் கவிதை அமையாது. அமைந்தாலும், அது நினைவில் அமையாது.

எடுத்துக்காட்டாக, ஒரு கவிதையிலுள்ள முதல் சொல்லைத் தொடுங்கள். அதுவும் பூவாகவே இருக்கட்டும். மல்லிகையைத்தான் எடுத்துக் கொள்வோமே.

'மல்லிகையே வெண்சங்கா வண்டுத வான்கரும்பு
வில்லி கணைதெரிந்து மெய்காப்ப- முல்லைமலர்
மென்மாலை தோளசைய மெல்ல நடந்ததே
புன்மாலை அந்திப் பொழுது.''

பல ஆண்டுகளுக்கு முன்பு படித்த புகழேந்தியின் இந்த வெண்பா மல்லிகையைத் தொட்டதும் பொழுதில்தான் வந்து நின்றது. இடையில் எங்கும் தடைபடாமல் ஆற்றொழுக்காகச் சொற்கள் பின்னிப் பின்னி நடந்து, 'பொழுதில்' வந்து நின்றதற்குக் கவிதையிலுள்ள எதுகையும் மோனையுமே துணைசெய்தன. மல்லிகை-வண்டு, வில்லி-மெய், மென்-மெல்ல, புன்-பொழுது என்பன மோனைகள்; மல்லிகை-வில்லி, மென் மாலை-புன்மாலை என்பன எதுகைகள். இத்தகைய எதுகையும் மோனையும் சந்தியும் பிற மொழிகளுக்கு இல்லை. ஆங்கிலத்தில் எதுகை கடைசி எழுத்தாக மட்டுமே அமையும்.

''தன் கணவன் கொலையுண்டான் எனக் கேள்விப்பட்டுக் கலங்கி, தெருவிலுள்ள புழுதியெல்லாம் தன் மேனியில் பட,உடல் பதை பதைத்து, மன்னன் அரண்மனை நோக்கி ஓடினாள். அவளது கூந்தல் அவிழ்ந் தலைந்தது. மற்றொரு சிலம்பையும் கையோடு கொண்டு போனாள். கண்களிலிருந்து நீர் பெருகி வழிந்து கொண்டிருந்தது. அவளது கணவன் அவளை விட்டுப்போய் விட்டதுபோல அவளது உடம்பை விட்டு அவளது ஆவியும் குடிபோனது போன்று தோன்றியது. இவற்றைப் பாண்டிய மன்னன் அரசிருக்கையில் இருந்து கண்டான். கண்ட உடனேயே அவளது தோற்றத்திலிருந்து தனது ஆட்சியில் ஏதோ தவறு நேர்ந்துவிட்டது எனக் கலங்கி விட்டான். 'தேரா மன்னா!' என அவள் அழைத்து உண்மையை விளக்கியதை அவன் தன் காதுகளில் கேட்டான். கேட்ட அளவிலேயே உயிரையும் விட்டுவிட்டான்'' என்பது சிலப்பதிகாரத்திலுள்ள ஓர் அரசவைக்காட்சி.

மேலே உள்ள காட்சியை விளக்கி எழுதப்பெற்ற சொற்றொடர்களின் எழுத்துக்களை எண்ணிப் பாருங்கள். 320 எழுத்துக்கள். இவற்றை 74 எழுத்துக்களாகச் சுருக்கிப் பொருள்கெடாமல் கட்டப்பெற்ற கவிதையே இது:

மெய்யிற் பொடியும் விரித்த கருங்குழலும்
கையிற் தனிச்சிலம்பும் கண்ணீரும் வையைக்கோன்
கண்டளவே தோற்றான் அக்காரிகைதன் சொற்செவியில்
உண்டளவே தோற்றான் உயிர்.

சரி, இதிலுள்ள சிறப்புத்தான் என்ன?

விளக்க முயன்ற காட்சியை - 320 எழுத்துக்களில் உரை நடையில் அமைந்த காட்சியமைப்பு, இவ் வெண்பாவில் 74 எழுத்துக்களாகக் குறைந்தும் அதன் பொருளோ சுவையோ எந்த விதத்திலும் குறைவுபடவில்லை.

கவிதையாக அமைக்கப்பெற்றதால் நினைவாற்றலுக்குள் அடங்குகிறது. ஆனால் நீண்ட உரைநடை இலேசில் நினைவில் அடங்காது.

எதுகை, மோனை, பொருள் நயம், கருத்து நயம் என்பன கவிதையின் சிறப்புக்கு வளம் சேர்ப்பனவாக அமைந்துள்ளன. அந்த வகையில் ஏழு வகை நயங்களை இவ்வெண்பாவிற் காணலாம். பிறமொழிக் கவிதைகளில் இவற்றுள் இரண்டொன்றை மட்டுமே காணலாம். சிலவற்றில் மூன்றும் காணலாம். இந்த ஏழையும் காணவேண்டுமானால், தமிழ்க் கவிதைகளில்தான் காண முடியும்.

என்னே தமிழ் மொழியின் கவிதைச் சிறப்பு! பழந்தமிழ்ப் பெருமக்கள் சொற்களைக் குறைத்து எழுத் துச் சுருக்கமாகக் கவிதைகளாகக் கட்டிவைக்க மட்டும் கற்றுக்கொண்டிருந்தாரில்லை; கட்டப்பட்ட கவிதைகளை விரிக்கவும் கற்றிருந்தனர். ஓலைச் சுவடியின் கட்டை அவிழ்த்து விரிப்பது மட்டும் அல்ல விரிவு; அதிலுள்ள கவிதையின் பொருளை விரிப்பதும் விரிவாகும். அவ்வாறு செய்வது விரிவுரை; செய் பவர் விரிவுரையாளர். என்னே தமிழ் மக்கள் கண்ட கவிதை!

- கி.ஆ.பெ.விசுவநாதம்

## தமிழ்க் கவிதையின் சிறப்பு சுருங்கச் சொல்லி விளங்க வைப்பதே

## விட்டு - விட்டு - வெட்டும் (மின்சார வெட்டு)

காலையில் ஓர் இடத்தில் வெட்டு
கடும்பகல் பிறிதோர் வெட்டு
மாலையில் ஊர்கள் எங்கும்
மற்றுமோர் நீண்ட வெட்டு
சாலையில் இருள் சூழ்ந்து கொள்ள
சரிவரத் தொடரும் வெட்டு
தாலியைக் கழுத்தில் கட்ட
சகுனமாய் வருமோர் வெட்டு
இலையினில் கைவைத்து உண்ண
இடையிலோர் சிறிய வெட்டு
அலைந்திடும் திருடர்க்கெல்லாம்
அபயமாம் இந்த வெட்டு
நிலையாக விளக்கை நாளும்
நிதானமாய் கொளுத்தா விட்டால்
தலையதும் சுவரில் மோதிப் பின்னே
சறுக்கியே விழும் முதியோர் தம்
நலிந்த நல் இடுப் பொடிந்து
நடையிழந்து கிடக்கின்றாரே!
நாலைந்து மாதம் போனால்
நலமாகும் மின்சாரம் என்று
தலைவனாம் மின்சார சபையார்
சாற்றினார் பற்பலமாதம் முன்பு
நிலையிலே மாற்றங் காணோம்
நீள் இருள் விலகக் காணோம்
விலைமதிப்பற்ற கல்வி தன்னை
வீண் இருள் போக்கா வண்ணம்
நலம் பெற மின்சாரத்தை
நாட்டுக்கு நல்க வாரீர்!

-விகடகவி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உங்களுக்கும் பரிசில்கள்

### விடை தெரியுமா? - 04

1. யமுனா ஏரி யாழ்ப்பாணத்தில் எங்கே அமைந்துள்ளது?
2. கிளைகள் கொண்ட பனைமரம் எப்பிரதேசத்தில் காணப்படுகின்றது?
3. வழிப்போக்கர்கள் தங்கி, இளைப்பாறும் நோக்கத்துடன் தமது வீட்டு வாசல்களில் எமது முன்னோர் கட்டிய அமைப்பின் பெயர் என்ன?
4. தற்போது உலகின் முதல்நிலை டென்னிஸ் வீரர் (ஆண்) யார்?
5. அமெரிக்க வெளியுறவுச் செயலாளரின் பெயர் என்ன?

**விடை தெரியுமா?**

தெரிந்தால் 25.02.2009 இற்கு சரியான விடைகள் அனுப்பும் 6 மாணவர்களுக்கு பரிசுகள் வழங்கப்படும்.

முதல் மூவருக்கும் முறையே ரூபா 150, ரூபா 125 மற்றும் 100 வீதமும் ஏனைய மூவருக்கும் தலா ரூபா 75 வீதமும் பரிசுகள் நூல்களாக வழங்கப்படும்.

### விடை தெரியுமா? - 02
சரியான விடைகள்

(1) தும்பளை, பருத்தித்துறை.
(2) இலங்கை வீரர் முத்தையா முரளிதரன்.
(3) ஜே.சே.ரெவலிங். (4) ஷேக் ஹசீனா.
(5) 2009 நவம்பர் 24 தொடக்கம் 26 வரை.

### பரிசுபெறுவோர்

01. சி.நிரோஜன், தரம் - 4 B, கரவெட்டி மாணிக்கவாசகர் வித்தி.
02. நா.மனோஜா, தரம் - 7B, பருத்தித்துறை மெ.பெ.உயர்தரப் பாட.
03. சி.கஜன்சிகா, தரம் - 6 B, வேம்படி மகளிர் உயர்தரப் பாட.
04. சூ.பிரியதக்ஷி, தரம் - 5 A, தம்பசிட்டி மெ.மி.த.க.பாடசாலை.
05. ஏ.கபிர்த்தன், யாழ்.மத்திய கல்லூரி.
06. ர.லக்கிஷ்னா, தரம் - 6 E, வேம்படி மகளிர் உயர்தரப் பாட.






அந்தச்சாவி மாயமாளிகையின் கதவில் இருந்த துவாரத்தில் மிகச்சரியாகப் பொருந்தியது. அதன்பிறகு சாவியைப் பிடித்து சற்றுத் திருப்பினான் இந்திரவர்மன். 'கிறீச்' என்ற ஓசையுடன் கதவு திறந்துகொண்டது. உடனேயே மாளிகையினுள் புகுந்துகொண்ட இளவரசர்கள் மீண்டும் முன்னர் இருந்ததைப் போலவே கதவைப் பூட்டிக் கொண்டனர்.

பூனைபோல சந்தடியற்று மெல்ல மெல்ல உள்ளே நடந்தனர். கண்ணாடி போன்ற பளிங்குத் தரையும், சுகந்த மணமும் அவர்கள் இருவரையும் பிரமிக்க வைத்தன. அலறல் கேட்டுக் கொண்டிருக்கும் பகுதி எதுவென அவர்கள் இருவராலும் அறிய முடிவில்லை. ஏனெனில் அந்த மாளிகையில் சுவர்களிலெல்லாம்அலறல் எதிரொலித்துக் கொண்டிருந்தது. இதனால் இளவரசர்கள் இருவரும் குழப்பம் அடைந்தார்கள் எனினும் தமது முயற்சியைக் கைவிட மனமில்லாதவர்களால் மாளிகையினுள் இருந்த எல்லா அறைகளையும் ஆராயத் தொடங்கினர். பல அறைகளில் கழுத்து அறுக்கப்பட்ட நிலையில் பல எலும்புக்கூடுகள் இருந்தன. எனினும் அவை எல்லாம் அழகான தங்கப் பேழைகளில் பத்திரப்படுத்தப்பட்டிருந்தன. கடைசியாக இன்னும் மூன்று அறைகள் மிஞ்சியிருந்தன. நடுங்கும் கரத்துடன் அதில் ஒரு அறையைத் திறந்தான் இந்திரவர்மன்.(தொடரும்)






## பொது அறிவு

1. ஆரோக்கியமான மனிதனின் இதயத்துடிப்பு நிமிடத்துக்கு எத்தனை?
   72 முறை ⟵
2. இலங்கையை சுற்றியுள்ள சமுத்திரம் எது?
   இந்து சமுத்திரம் ⟵
3. கணவனை இழந்தவளை எப்படி அழைப்பர்?
   விதவை ⟵
4. மனைவியை இழந்தவனை எப்படி அழைப்பர்
   தபுதாரன் ⟵
5. இலங்கையின் தலைநகரம் எது?
   ஸ்ரீஜெயவர்த்தனபுரம் ⟵
6. மிகப்பெரிய கோள் எது?
   வியாழன் ⟵
7. மிகச்சிறிய கோள் எது?
   புதன் ⟵
8. உலகின் மிகப்பெரிய கண்டம் எது?
   ஆசியாக்கண்டம் ⟵
9. பௌத்தர்களின் புனித நூல் எது?
   திரிபீடகம் ⟵
10. உலகின் மிகப்பெரிய சமுத்திரம் எது?
   பசுபிக் சமுத்திரம் ⟵





வி.வித்தியாசாகர்
தரம்- 6C
யாழ்.சென்ஜோன்ஸ் கல்லூரி

## நீங்களும் எழுதலாம்

(தரம் 9 - இற்கு உட்பட்ட மாணவர்கள் மாத்திரம்)

மாணவர்களே!

'சிறுவர் கதிரில்' உங்களின் கதைகள், கட்டுரைகள், கவிதைகள், விடுகதைகள், பொன்மொழிகள், பொது அறிவு விடயங்கள், ஓவியங்கள் போன்ற ஆக்கங்கள் பிரசுரமாக வேண்டுமா? அப்படியானால் கீழுள்ள படிவத்தை பூர்த்தி செய்து, உங்கள் ஆக்கங்களோடு இணைத்து அனுப்பி வையுங்கள். தரமானவை பிரசுரமாகும். அனுப்ப வேண்டிய முகவரி:-

'சிறுவர் கதிர்', உதயன்
361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

மாணவர் பெயர் :-.................................
தரம் :-.................................
பாடசாலை :-.................................

இத்தோடு இணைக்கப்பட்டுள்ள ஆக்கம், குறித்த மாணவரின் சுய ஆக்கமென சிபார்சு செய்கின்றேன்.

.................... ....................
திகதி வகுப்பாசிரியர் கையொப்பம்

## ஆண்டு நிறைவு விழாக்கள்

| | | |
|---|---|---|
| 1 ஆம் ஆண்டு விழா | - | காகிதவிழா |
| 2 ஆம் ஆண்டு விழா | - | பருத்தி விழா |
| 3 ஆம் ஆண்டு விழா | - | கோல்விழா |
| 4 ஆம் ஆண்டு விழா | - | பூ விழா |
| 5 ஆம் ஆண்டு விழா | - | மரவிழா |
| 6 ஆம் ஆண்டு விழா | - | கற்கண்டு விழா |
| 7 ஆம் ஆண்டு விழா | - | கம்பளிவிழா |
| 8 ஆம் ஆண்டு விழா | - | வெண்கலவிழா |
| 9 ஆம் ஆண்டு விழா | - | மண்கலவிழா |
| 10 ஆம் ஆண்டு விழா | - | தகர விழா |
| 11 ஆம் ஆண்டு விழா | - | எஃகுவிழா |
| 12 ஆம் ஆண்டு விழா | - | லினன் விழா |
| 13 ஆம் ஆண்டு விழா | - | பின்னல் விழா |
| 14 ஆம் ஆண்டு விழா | - | தந்த விழா |
| 15 ஆம் ஆண்டு விழா | - | படிக்க விழா |
| 20 ஆம் ஆண்டு விழா | - | பீங்கான் விழா |
| 25 ஆம் ஆண்டு விழா | - | வெள்ளி விழா |
| 30 ஆம் ஆண்டு விழா | - | முத்து விழா |
| 40 ஆம் ஆண்டு விழா | - | மாணிக்க விழா |
| 45 ஆம் ஆண்டு விழா | - | நீலக்கல் விழா |
| 50 ஆம் ஆண்டு விழா | - | பொன்விழா |
| 55 ஆம் ஆண்டு விழா | - | மரகத விழா |
| 60 ஆம் ஆண்டு விழா | - | மணி/வைர விழா |
| 75 ஆம் ஆண்டு விழா | - | பவள விழா |
| 80 ஆம் ஆண்டு விழா | - | அமுத விழா |
| 100ஆம் ஆண்டு விழா | - | நூற்றாண்டு விழா |

பா.பாரதி. தரம் 7 A, யா/உடுப்பிட்டி மகளிர் கல்லூரி.

## அறிவியல் கருவிகள்

1. வளிமண்டலத்தில் உள்ள ஈரப்பதனை அளவிடும் கருவி எது?
   ⟶ ஈரமானி
2. மழைவீழ்ச்சியை அளவிடும் கருவி எது?
   மழைமானி
3. ஒளிப்படமம் எடுப்பதற்கு ஒளியை அளவிடும் கருவி எது?
   ⟶ ஒளிமானி
4. மின்சாரத்தை அளவிட உதவும் கருவி எது?
   ⟶ கல்வனோமானி
5. காந்த இயக்கத்தை அளவிட உதவும் கருவி எது?
   ⟶ காந்தமானி

பாலசிங்கம் சிந்துஜா,
தரம்-9
யா/ நெடுந்தீவு/ சைவப்பிரகாச வித்தியாலயம்

## ஆசிரியர்



பெற்றதாய் போல கவனிப்பார்
உற்ற நண்பன் போல யாசிப்பார்
கல்வியுடன் ஒழுக்கத்தையும்
அன்புடன் பண்பையும்
அறிவுடன் பரிவையும் தரும்
அவர் பாத்திரும் ஆசானே.

..., தரம்-8, யா/புனித மரியாள் ம.வி

## மாணவர் தூரிகை



தரம் -6 D,
யாழ்.மத்திய கல்லூரி.



தரம் - 6 A,



சி.நிக்சன்,
தரம் - 9,
யா/கைதடி குருசாமி வித்தி.



தரம் - 7A,



தரம் - 2 D,
யா/கொ.இந்து ஆரம்பப் பாட.




தரம் - 9 E,



யா/கொக்குவில் இந்து ஆரம்பப் பாடசாலை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வரலாற்றுச் சம்பவங்களை இரை மீட்க ஆவணத் தொகுப்புக்கள் அத்தியாவசியம்

## அதனைச் செயலாக்குவதில் ஆர்வம் கொண்ட கணேஸ்

வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரியில் இடம்பெற்ற ஒளிவிழாவும், சுனாமிக் கண்காட்சியும் நிகழ்வின்போது, சுனாமி பற்றிய பத்திரிகை நறுக்குகள், மிக அழகாகக் கண்காட்சியில் வைக்கப்பட்டிருந்தன. இந்த சுனாமித் தொகுப்பை, தொகுத்தவரான, சங்கானை நூலகத்தில் கடமையாற்றி, ஓய்வுபெற்ற உதவி நூலக உதவியாளர் மாணிக்கம் கணேஸ் அவர்களுடன் அவரது சுனாமித்தொகுப்பு குறித்து உரையாடும் சந்தர்ப்பம் கிடைத்தது.

**கேள்வி: முதலில் உங்களைப் பற்றி நீங்கள் சுருக்கமாகச் சொல்லுங்கள்?**

பதில்: எனது சொந்த இடம், சங்கானை. வலிகாமம் மேற்குப் பிரதேச சபையின்கீழ் இயங்கும், சங்கானை பொதுநூலகத்தில், நூலக உதவியாளராக சுமார் 30 வருட காலம் சேவையாற்றி, 1997 இல் ஓய்வு பெற்றேன். தற்போது எனது வயது 63.

**கே: சுனாமி பற்றிய தொகுப்பைச் செய்ய வேண்டும் என்ற எண்ணம் உங்கள் மனதில் எழக் காரணம் என்ன?**

ப: உதவி நூலகராக சேவை செய்யும் காலத்தில் நூலகம் சார்ந்த கருத்தரங்குகளில் பங்குபற்றுவேன். யாழ். மாநகர

**செவ்வி: மு.சந்திரகுமார்**

சபையில் நடைபெற்ற ஓர் கருத்தரங்கில், அமரர் பேராசிரியர் கைலாசபதி அவர்கள் பத்திரிகைகளில் வருகின்ற பயன்மிக்க விடயங்களைஎடுத்து, சேகரித்து தொகுப்பாக்கங்களாகச் செய்து, மக்களுக்கு, மாணவர்களுக்கு, மற்றும் அறிவுலகத்தை விரும்புகிறவர்களுக்கு ஆய்வு மேற்கொள்பவர்களுக்கு உதவ முடியும் எனக்கூறினார்.

இவர் கூறிய அறிவுரை எனது மனதில் ஆழப்பதிந்துவிட்டது. நூலக உதவியாளராகக் கடமையாற்றியமையும் இம்முயற்சியில் எனக்குக் கைகொடுத்துதவியது. அக்காலப் பகுதியில் பத்திரிகைகளில் வெளிவந்த பயன்தரு விடயங்களைத் தொகுத்து 54 தொகுப்புகள் செய்து முடித்திருந்தேன்.

யாழ்.இந்துக் கல்லூரியில் நடை பெற்ற உள்ளூராட்சி வார நிகழ்வில், அன்றைய உள்ளூராட்சி உதவி ஆணையாளராக இருந்த டிவகலாலா அவர்களினால் 1995 இல் சிறந்த நூலக உதவியாளருக்கான விருது எனக்கு வழங்கப்பட்டது.

**கே: 54 தொகுப்புகள் தொகுத்ததாகக் கூறினீர்கள். அவை இப்போது தங்கள் வசம் உள்ளதா?**

ப: இல்லை. இடப்பெயர்வின்போது அழிந்தும் தவறியும் விட்டன. சத்தியசாயி பாபா பற்றிய தொகுப்பு மட்டும் தற்போது கைவசம் உள்ளது.

**கே: இவ்வாறு தங்கள் கைவசம் இல்லாத அத்தொகுப்புகளை மீண்டும் தொகுத்து எடுக்க முடியுமா?**

ப: முடியாது. ஒருபோதும் முடியாது. அது மிகச்சிரமமான காரியம். இருந்தும் அண்மைக் காலத்தில் ஏற்பட்ட சுனாமி அனர்த்தத்தைத் தொகுக்க திட சங்கற்பம் கொண்டேன்.

**கே: சுனாமி தொகுப்பை மேற்கொள்ளக் காரணம் என்ன? அல்லது நோக்கம் என்ன?**

ப: எனக்கு நெருக்கமான பலதரப்பினரின் விருப்பத்திற்கும் அவர்களின் தூண்டுதலுக்கும் உட்பட்டு, இத்தொகுப்பை மேற்கொண்டேன். இருந்தும் உடனடியாக இத்தொகுப்பை செய்ய முடியவில்லை. முதலில் இதன் நிமித்தம் சுனாமி தொடர்பான பத்திரிகை நறுக்குகளை சேகரிக்கத் தொடங்கினேன்.

எமது எதிர்காலச் சந்ததியினரும், இப் படி ஒரு நிகழ்வு இங்கு இடம்பெற்றதா? என்பதை அறியக்கூடியதாயிருக்கும் என்பதால் இதனைத் தொகுத்தேன்.

**கே: சுமார் எத்தனை நறுக்குகள் வரை தொகுத்துள்ளீர்கள்?**

ப: 680 'பிறிஸ்ரல்' மட்டையில் 4500 நறுக்குகள் வரை உள்ளன.

**கே: இந்தப் பத்திரிகை நறுக்குத் துண்டுகளை எவ்வாறு, எங்கிருந்து, பெற்றீர்கள்?**

ப: இவ்வாறான பத்திரிகை நறுக்கு



களைச் சேகரிப்பதற்குப் பலரை அணுகிய போது, பத்திரிகைகள் கிடைக்கவில்லை. நூலகங்களுக்குப் போனால் பத்திரிகைகள் எல்லாம் விற்று விட்டோம் என்று தட்டிக் கழித்தனர். இந்நிலையில் மானிப்பாய் பிரதேச சபையின் மாதகல் உப அலுவலகப் பொறுப்பதிகாரி எஸ்.கிருபாகரன் அவர்களது உதவியால் தேவையான பத்திரிகைகளைப் பெற்றுக்கொள்ளமுடிந்தது.

அத்துடன் எனது நண்பர் சிவஞானம் என்பவரும் சுனாமி சம்பந்தமான பத்திரிகை நறுக்குகளைத் தந்துதவினார். மேலும், எனது வேறுபல நண்பர்கள், மூலமும் இவற்றைப் பெறக் கூடியதாக இருந்தது. மற்றும் 'சண்டேரைம்ஸ்' ஆங்கிலப் பத்திரிகையிலும், கிடைக்கப்பெற்ற சிங்களப் பத்திரிகைகளிலும் இவற்றைப் பெற்றேன்.

**கே: சுனாமி தொகுப்பை மேற்கொள்ளும்போது, உணர்வு பூர்வமாக நீங்கள் எப்படி இருந்தீர்கள்?**

ப: இக் காட்சிகள் என்னை உடல், மனதளவில், வெகுவாகப் பாதித்தன. நானே என்னையறியாமலேயே ஒருவித உடல் அழற்சிக்குட்பட்டதாகத் தோன்றியது. என்னைப் பரிசோதித்த வைத்தியரிடம், சுனாமி தொகுப்பு பற்றிய விடயத்தைக் கூறினேன். இக்காட்சிகள் தான் உமது உடம்பைப் பாதித்துள்ளதாக கூறி, சற்று ஓய்வு எடுக்கும்படி கூறினார்.

**கே: வேறு இடங்களில் கண்காட்சிப் படுத்தும் எண்ணம் உண்டா?**

ப: இருக்கிறது. ஆனால் எனது நிதி நிலைமை, உடல் நிலை அதற்குத் தடையாய் உள்ளன.

**கே: பொருளாதார ரீதியில் மிகவும் கஷ்டப்படுவதாக கூறினீர்கள். அப்படியானால், இதற்கான நிதியை எப்படிப் பெற்றீர்கள்?**

ப: இது எனது சொந்தச் செலவில் செய்யப்பட்டதாகும். ஏதோ வருங்காலச் சந்ததியினருக்கு வரலாற்று ஆவணமாக இருக்க என்னால் முடிந்ததைச் செய்ய வேண்டும் என்ற நோக்குடன் கஷ்டத்தின் மத்தியிலும் இதனைச் செய்துள்ளேன்.

**கே:இதுதான் உங்களின் முதற் கண்காட்சி நிகழ்வா?**

ப: இல்லை. முதலாவதாக தேசிய வாசிப்பு மாதத்தை முன்னிட்டு ஆனைக்கோட்டை பொதுநூலகத்தில் கண்காட்சிப்படுத்தினேன்.

**கே: இது விடயமாக தங்களின் பொது அபிப்பிராயத்தைக் கூறுவீர்களா?**

ப: இது ஒரு வரலாற்றுப் பொக்கிஷம். இவற்றைப் பார்த்த கல்வியியலாளர்கள், நலன்விரும்பிகள், இக்கண்காட்சியை மாணவர்கள், பொது மக்கள் பார்வையிடுவதற்கு ஏற்ற ஒழுங்குகள் செய்வதாகக் கூறினர். மேலும், பல பாடசாலைகள் தத்தமது பாடசாலைகளிலும் இவ்வாறான கண்காட்சியை நடத்துவதற்குத் தொடர்பு கொண்டுள்ளனர்.

**கே: இறுதியாக இவ்விடயம் குறித்து தாங்கள் கூற விரும்புவது என்ன?**

ப: எனது நிதிநிலைக் கஷ்டம் இவ்வாறான தொகுப்புக்களை ஆர்வத்துடன் செய்வதற்குத் தடையாகவுள்ளது. அரச சார் பற்ற நிறுவனங்கள் உதவிசெய்தால் இத் தொகுப்புக்கள் ஒவ்வொன்றையும் 'லெமனே ஷன்' செய்து பல வருடங்களுக்கு பாதுகாப்பாக வைத்திருக்கலாம். ***

---

# இராமநாதனைக் குதிரைவண்டியில் இருத்தி தாமே இழுத்துச் சென்ற சிங்களத் தலைவர்கள்

## இன்று மறைக்கப்பட்டுவிட்ட அன்றைய சம்பவங்கள்

**1916 பெப்ரவரி 17**

இந்தவாரம் நான் கூறப்போகும் விடயம் பலருக்குத் தெரிந்த ஒன்று. இளம் தலைமுறையினருக்காக இச்சம்பவம் நினைவு கூரப்படுகின்றது.

1915 ஆம் ஆண்டு பிரித்தானியரின் ஆட்சிக்காலத்தில் இலங்கையில் சிங்களவர்களுக்கும் முஸ்லிம்களுக்கும் இடையே கலவரமொன்று இடம்பெற்றது. இக்கலவரத்தின்போது பிரிட்டிஷ் அரசு முஸ்லிம்களுக்குச் சார்பாகவே நடந்து கொண்டது. சிறுபான்மையினரைப் பாதுகாக்க வேண்டும் என்ற பிரிட்டனின் ஜனநாயக மரபுக்கிணங்கவே பிரிட்டிஷ் ஆட்சியாளர்கள் முஸ்லிம்களுக்குச் சார்பாக நடந்து கொண்டனர். பிற்காலத்தில் இலங்கையின் முதல் பிரதமராகப் பதவி வகித்தவரான டி.எஸ்.சேனநாயக்க உட்பட பல சிங்களத் தலைவர்கள் கைதுசெய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டனர்.

இராமநாதன் அப்போது சட்டசபை உறுப்பினராக இருந்தார். சட்டசபையில் பிரிட்டிஷ் ஆளுநரின் செயற்பாட்டைக் கண்டித்து உரையாற்றிய இராமநாதன் கப்பலேறி லண்டனுக்குச் சென்று இலங்கையிலிருந்த பிரிட்டிஷ் ஆட்சியாளர்களின் பாரபட்சமான நடவடிக்கை பற்றி எடுத்துக் கூறினார்.

இலங்கை சட்டசபையில் தான் ஆற்றிய உரைகளை 300 பக்க நூலாக பதிப்பித்து எடுத்துச்சென்று பிரிட்டிஷ் எம்.பிக்களுக்கு விநியோகித்ததுடன் 'வெஸ்ற் மினிஸ்ரர்' பாராளுமன்றத்திலும் உரையாற்றினார். பிரிட்டிஷ் பத்திரிகைகள் இலங்கையில் பிரிட்டிஷ் ஆட்சியாளர்கள் செய்த அடாத செயல்களை முன்பக்கச் செய்தியாகப் பிரசுரித்தன. இலங்கையிலிருந்த பிரிட்டிஷ் ஆளுநரும் பிரிகேடியர் ஜெனரலும் இங்கிலாந்துக்கு அழைக்கப்பட்டனர். நாடு திரும்பிய இராமநாதனை வரவேற்பதற்காகச் சிங்களவரனைவரும் கொழும்புத் துறைமுகத்தில் திரண்டனர். பெப்ரவரி 16 ஆம் திகதி நாடு திரும்பிய இராமநாதனுக்கு அளிக்கப்பட்ட வரவேற்பு பற்றி "The Ceylonese" என்ற பத்திரிகை 21.02.1916 அன்று வெளியிட்ட செய்தியைப் பார்ப்போம்.


**இராமநாதனை வரவேற்கத் திரண்ட கூட்டம்**

இராமநாதனை வரவேற்பதற்காக முப்பது இளைஞர்களைக் கொண்ட குழு ஒன்று நியமிக்கப் பட்டிருந்தது. இவர்கள் அனைவரும் வெள்ளை ஆடையும் ரோஜா நிற சால்வையும் அணிந்திருந்தனர். காலை 8 மணிக்குத்தான் கப்பல் கரைக்கு வருவதாக இருந்தது. எனினும் பொழுது புலர்வதற்கு முன்னரே மக்கள் கூட்டம் திரண்டுவிட்டது. நேரம் செல்லச் செல்ல மக்கள் கூட்டம் கூட்டமாக வந்து கொண்டிருந்தனர். இராமநாதனை ஏற்றிச் செல்வதற்காக மலர்களால் அலங்கரிக்கப்பட்ட ஊர்தியொன்று தயாராயிருந்தது.

நண்பகலுக்குச் சற்று முன்பாக கப்பல் இறங்குதுறையில் ஒதுங்கியது. பரபரப்பு அதிகமானது. இந்தச் சமயத்தில் பொலிஸார் ஓர் உத்தரவைப் பிறப்பித்தனர். சுங்க அதிகாரியின் அனுமதியின்றி யாரும் துறைமுகத்தினுள் நுழைய முடியாது எனக் கூறினார். வரவேற்புக் குழுவினருக்கு துறைமுகத்தினுள் செல்ல அனுமதி வழங்கப் பட்டது.

ஏ.ஈ.குணசிங்க, ஈ.டபிள்யூ பெரேரா, ஜெயதிலக, ஜெயந்தி, சேர் ஜோன். கொத்தலாவல ஆகியோர் உள்ளே சென்றனர். இராமநாதன் துறைமுகத்தில் கால் பதித்ததும் இலங்கைப் பிரதிநிதி நீடூழி வாழ்க என்ற ஒலி அதிரவைத்தது.

இளைய இலங்கை, இலங்கையின் மூத்த குடிமகனை வரவேற்கிறது (Young



அன்று, சேர்.பொன் இராமநாதனை சிங்களத் தலைவர்கள் குதிரை வண்டியில் இருத்தி, அவ் வண்டியைத் தாமே இழுத்துச் சென்ற காட்சி. படத்தில் மீசையுடன் காணப்படுபவர் இலங்கையின் முதலாவது பிரதமர் டீ.எஸ்.சேனநாயக்கா ஆவார்.

Lanka welcomes the grand oldman of Ceylon) போன்ற பதாகைகள் மக்கள் கைகளில் காணப்பட்டன. இராமநாதனை வரவேற்பதற்காக சில முதியவர்கள் வந்திருந்தனர். இளைஞர்கள் சிலர் இந்த முதியவர்களைத் தோளில் சுமந்திருந்தனர். பாடசாலை மாணவர்கள் கொடிகளுடன் முன்னே செல்ல பின்னால் உள்ளூர் கலைஞர்கள் நடனமாடியவாறும் பாடல்களைீ இசைத்தவாறும் சென்றனர்.

**இன்றும் நினைவில் கொள்ள... அன்றைய ஞாபகம்... இங்கே!**

**குதிரைகளை அவிழ்த்துவிட்டுத் தாமே வண்டியை இழுத்தனர்**

ஊர்வலம் புறப்பட ஆயத்தமானது, இராமநாதனை வரவேற்க வந்த வரவேற்புக்குழுவினர் ஊர்தியில் பூட்டப்பட்டிருந்த குதிரைகளை அவிழ்த்துவிட்டு தாமே வடம் பிடித்து இழுத்துச் சென்றனர்.

ஊர்வலம் பொரளையிலுள்ள இராமநாதனின் வீட்டை அடையும் வரை இந்த முப்பது பேருமே ஊர்தியை இழுத்துச் சென்றனர். ஊர்வலம் 1/4 மைல் தூரம் சென்றதும், இருபது நிமிடங்கள் போக்குவரத்து தடைப்பட்டது. அளவுக்கு அதிகமான பொலிஸார் கடமையில் ஈடுபடுத்தப்பட்டிருந்தனர்.

ஊர்வலம் இராமநாதனின் இல்லத்தை அடைந்ததும் கற்பனை செய்துகூடப் பார்க்க முடியாத மக்கள் கூட்டம் வீட்டு வளவை நிறைத்திருந்தது. வந்த மக்களனைவரும் இராமநாதனின் முகத்தை ஒருதடவையாவது பார்த்துவிட வேண்டும் என்ற ஆவலுடன் காணப்பட்டனர். இராமநாதன் ஊர்தியில் இருந்து இறங்கியதும் கண்டியிலிருந் தும், இரத்தினபுரியிலிருந்தும் வரவழைக்கப்பட்ட இசை, நாட்டியக்கலைஞர்கள் மக்களையும் இராமநாதனையும் மகிழ்வித்தனர். சிறிது நேரத்தில் இராமநாதன் உரையாற்றத் தொடங்கினார். பத்திரிகையாளர்களால் இராமநாதனின் உரையைச் செவிமடுக்கவோ இராமநாதனை நெருங்கவோ முடியாதளவுக்கு மக்களின் ஆரவாரம் காணப்பட்டது. வரவேற்புக்குழு அங்கத்தவர் ஒருவர் இராமநாதனின் உரையைச் சிங்களத்தில் மொழி பெயர்த்துக் கொண்டிருந்தார். மக்கள் மிகவும் உன்னிப்பாக இராம நாதனின் உரையைச் செவிமடுத்துக் கொண்டிருந்தனர். மாலையில் வாணவேடிக்கைகளும் இடம்பெற்றன.

சட்டசபையில் இராமநாதன் ஆற்றிய உரையைப் பாராட்டி சிங்களவர்கள், தேசபிதா எனப்போற்றும் அநகாரிக தர்மபால எழுதிய கடிதத்திலிருந்து சிலவரிகள் இவை. 'நீங்கள் இலங்கையை விட்டு நீங்கும் நாள், அந்தநாள் தொடக்கம் ஏழைச் சிங்களவர்களைக் காப்பாற்ற எவருமேயில்லை. வழிநடத்துவதற்கோ எவருமேயில்லை'.

அநகாரிக தர்மபாலவின் கூற்றில் . சிங்களவர் என்ற இடத்தில் தமிழர்கள் என மாற்ற வேண்டியநிலை இன்று. *


- தாண்டவன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விளையாட்டு அரங்குகளில்



# அரசியல் வேண்டாம்!




அரசியலில் குதிக்கும் எண்ணம் தனக்கு இல்லை என இந்திய அணியின் முன்னாள் தலைவர் சௌரவ் கங்குலி கூறியுள்ளார். பெங்கால் - அஸ்ஸாம் அணிகளுக்கிடையிலான ரஞ்சிக் கோப்பை ஒருநாள் போட்டி கல்கத்தாவின் ஈடன் கார்டன் மைதானத்தில் அண்மையில் நடந்தது.

போட்டிக்குப் பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய கங்குலி, அரசியலில் களமிறங்கத் தாம் திட்டமிட்டுள்ளதாக வெளியான செய்திகளில் உண்மையில்லை. மேலும் தாம் அரசியலுக்குச் சிறப்பான தேர்வும் அல்ல என்றார்.

சமாஜ்வாடி கட்சியில் இருந்து அழைப்பு வந்தால் அக்கட்சியில் சேருவீர்களா என்ற கேள்விக்கு நான் அரசியல் கட்சியில் இணைய விரும்பினால், எனது சொந்த மாநிலத்தை (மேற்குவங்கம்) சேர்ந்த கட்சியில் தான் சேருவேன் என்றும் பதிலளித்தார்.

கங்குலியின் மனைவியும், ஒடிஸி நடனக் கலைஞருமான டோனா, சமீபத்தில் அல்ஹாபாத் சென்றிருந்தபோது, உத்தரப்பிரதேசத்தில் இருந்து மக்களவைத் தேர்தலுக்குப் போட்டியிடக் கங்குலிக்கு அழைப்புகள் வருவதாகக் கூறியிருந்தது குறிப்பிடத்தக்கது.



# இசின்பயீவா உலக சாதனை

உக்ரைனின் டோநெட்ஸ்க் நகரில் நடந்த சர்வதேச உள்ளரங்க கோலூன்றிப் பாய்தல் போட்டியில் ரஷ்ய வீராங்கனை இசின்பயீவா 5.0 மீற்றர் உயரம் தாண்டிப் புதிய உலக சாதனை படைத்துள்ளார். இப் போட்டியில் முதல் முயற்சியில் 4.97 மீற்றர் தாண்டி தனது முன்னைய சாதனையை பயீவா முறியடித்தார். தொடர்ந்து மீண்டும் முயன்று, 2 ஆவது முயற்சியில் 5.0 மீற்றர் உயரம் தாண்டி இசின்பயீவா உலக சாதனை படைத்துள்ளார். இச் சாதனையைப் பீஜிங் ஒலிம்பிக் போட்டிகளின் போது அவர் நிகழ்த்தியது நினைவில் கொள்ளத்தக்கது.

# 1983 உலகக் கிண்ண வெற்றிதான் எனது கிரிக்கெட் ஈடுபாட்டுக்குக் காரணம் -சச்சின்



**1983** ஆம் ஆண்டில் இந்திய அணி உலகக்கிண்ணத்தைவென்றது தான் தனது கிரிக்கட் ஈடுபாட்டுக்கு காரணமாக அமைந்தது என்று டெண்டுல்கார் கூறியுள்ளார்.

1983ஆம் ஆண்டில் உலகக்கிண்ணத்தை வென்ற கபில் தேவ் தலைமையிலான இந்திய கிரிக்கட் அணியில் இடம் பிடித்திருந்த வெங்சர்க்கார், சந்தீப்பட்டீல் உட்பட 5 வீரர்களுக்கு மும்பையில் உள்ள எம்.ஐ.ஜி. கிரிக்கட் கழகத்தின் சார்பில் பாராட்டு விழா நடந்தது.

விழாவில் இந்திய கிரிக்கட் அணியின் நட்சதிர வீரர் டெண்டுல்கார் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டு பேசுகையில் கூறியதாவது,1983 ஆம் ஆண்டு உலகக்கிண்ண வெற்றிக்குப் பின்தான் கிரிக்கட் ஆட்டத்தில் விளையாடும் ஆர்வத்தைப் பெற்றேன். அந்த வெற்றி இல்லாமல் இருந்ாதல் எனது செயற்பாடு வேறு விதமாக அமைந்திருக்கக் கூடும்.

அந்த வெற்று குறித்து எனக்கு இனிமையான இனிமையான நினைவுகள் உள்ளன. அப்போது எனக்குப் பத்து வயதுதான். அணியில் 11 வீரர்கள் இடம்பிடித்து இருப்பார்கள் என்ற விவரம் கூட எனக்கு அந்த நேரத்தில் தெரியாது. இருப்பினும் அது ஒரு அருமையான அனுபவமாக இருந்தது. அந்த வெற்றியை நான் எனது பெற்றோர் அனுமதியுடன் அன்று (ஜூன் 25) இரவில் கொண்டாடினேன். அந்த வீரர்கள், இளம் வீரர்கள் கிரிக்கெட் ஆட்டத்திற்கு வர உந்துதலாக இருந்தனர்.

எம்.ஐ.ஜி.மைதானத்தில் நான் பல மாலைப் பொழுதுகளைக் கழித்திருக்கிறேன். அப்போது சாதாரணமாக இருந்த அரங்கு தற்போது நவீன வசதிகளுடன் விளங்குகிறது. எனது மகன் அர்ஜூன் தற்போது இங்குதான் பயிற்சி எடுத்துவருகின்றான் - இவ்வாறு டெண்டுல்கர் கூறினான்.



# நடாலை வீழ்த்தினார் முர்ரே!

ரோட்டர்டாமில் நடைபெற்ற உள்ளரங்க சர்வதேச ரென்னிஸ் ஒற்றையர் இறுதிப் போட்டியில் பிரிட்டன் வீரர் அன்டி முர்ரே, உலகத் தரவரிசையில் முதலிடத்தில் உள்ள ஸ்பெயினைச் சேர்ந்த ரஃபேல் நடாலை அதிர்ச்சித் தோல்வியுறச் செய்து சம்பியன் பட்டம் வென்றார்.

வலது முழங்காலில் காயம் ஏற்பட்டதால் சரியாக விளையாட முடியாத நடாலை 6 - 3, 4 - 6, 6 - 0 என்ற செட்களில் போராடி வீழ்த்தினார் அன்டி முர்ரே. காயம் காரணமாக நடாலின் ஆட்டத்தில் சக்தி இல்லாமல் இருந்தது. ஆனாலும் அவர் இறுதி வரை விட வில்லை. கடைசியில் முர்ரே வென்றார். கடந்த மாதம் நடைபெற்ற கட்டார் ஓபன் ரென்னிஸ் சாம்பியன் பட்டத்தையும் முர்ரே வென்றார் என்பது குறிப்பிடத்தக்கது.

# 2011 கிரிக்கெட் உலகக்கிண்ணம்: பாகிஸ்தானுக்குப் பதிலாக மாற்று இடங்கள்?



பாதுகாப்புக் குறித்து பாகிஸ்தானில் கடுமையான குழப்பம் நீடித்து வருவதால் எதிர்வரும் உலகக் கிண்ணப் போட்டிக்கு மாற்று இடத்தைப் பரிசீலனை செய்யுமாறு அமைப்புக் குழுவைக் கேட்டுக் கொண்டுள்ளார் சர்வதேச கிரிக்கெட் சபையின் முதன்மைச் செயல் அதிகாரி ஹாரூன் லோர்கட். அடுத்த உலகக் கிண்ணப் போட்டி 2011 ஆம் ஆண்டு பெப்ரவரி 19 ஆம் திகதி முதல் இந்தியா, பாகிஸ்தான்,இலங்கை, பங்களாதேஷ் ஆகிய 4 நாடுகளில் நடைபெற உள்ளது. பாகிஸ்தானில் 2 இடங்கள் உட்பட மொத்தம் 15 இடங்களில் போட்டிகள் நடைபெறவுள்ளன.

இந்நிலையில் போட்டியை நடத்தும் 4 கிரிக்கெட் சபைகளைச் சேர்ந்த உறுப்பினர்கள் பங்கேற்ற ஆலோசனைக் கூட்டம் டில்லியில் நடைபெற்றது. இந்தக் கூட்டத்துக்குப் பின்னர் செய்தியாளர்களிடம் லோர்கட் கூறியதாவது: பாகிஸ்தானில் நிலவும் பாதுகாப்பு குறித்து ஐ.சி.சி.தொடர்ந்து கண்காணித்து வருகிறது. ஐ.சி.சியின் ஊழல் எதிர்ப்பு மற்றும் பாதுகாப்புக் குழுவுக்குக் கூடுதல் ஒத்துழைப்பு வழங்க அந்நாடு உறுதி அளித்துள்ளது என்றார். 2011 ஆம் ஆண்டு உலகக் கிண்ணக் கிரிக்கெட்டின் இறுதிப் போட்டி டெல்லியில் நடைபெறுகிறது. இதனை ஐ.சி.சி.உறுதிப்படுத்தியது. இறுதிப் போட்டி டெல்லியில் புதிய அரங்கத்தில் நடைபெறும். இந்தியாவில் மொத்தம் 8 இடங்களில் 22 ஆட்டங்கள் நடக்கின்றன.பாகிஸ்தானில் ஒரு அரையிறுதி உட்பட 16 ஆட்டங்களும் இலங்கையில் ஒரு அரையிறுதி உட்பட 9 ஆட்டங்களும் (2 மைதானம்), பங்களாதேஷில் 6 ஆட்டங்களும் (ஒரு மைதானம்) நடைபெறும். தொடக்க விழாவைப் பெப்ரவரி 19 ஆம் திகதி பங்களாதேஷில் கோலாகலமாக நடத்தத் திட்டமிட்டுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திரைவிமர்சனம்



# சிவா மனசில சக்தி


SMS

'விகடன்' குழுமத்தின் தயாரிப்பில், புதுமுக இயக்குநர் ராஜேஷின் இயக்கத்தில் 'சிவா மனசில சக்தி' என்ற திரைப்படம் வெளிவந்துள்ளது. இத் திரைப்படத்தில் ஜீவா, அனுசுயா, ஊர்வசி, சந்தானம், சத்யன், மகாநதி சங்கர், ரேகா, ஷகீலா போன்றோர் நடித்துள்ளனர்.

விரசமில்லாத, விறுவிறுப்பான காதல்கதை. தம்மையுமறியாமல் - தாமிருவரும் காதலிக்கிறோம் என்பது கூடத் தெரியாமல் - மோதிக்கொள்கின்ற இரு காதலர்களைப் பற்றியே 'சிவா மனசில சக்தி' படம் பேசி நிற்கின்றது. இத்திரைப் படத்தில் வில்லனே இல்லை. நல்லவர்களை மட்டுமே கொண்டுள்ள இம் மண்ணில், சூழ்நிலைதான் மனிதர்களை நல்லவர்களாகவும், தீயவர்களாகவும் பார்க்க வைக்கின்றது என்பதை வித்தியாசமான காதலோடு, கலகலப்பாகச் சொல்கிறது 'சிவா மனசில சக்தி'. ஒரு சராசரி இளைஞனாக வருகின்ற ஜீவாவின் நடிப்புக்கு ஈடுகொடுத்திருக்கிறார் புதுமுக நாயகி அனுசுயா. வழமையான தனது இரட்டை அர்த்த நகைச்சுவைகளை ஓரளவு தவிர்த்திருக்கிறார் சந்தானம்.

இயக்குநர் ராஜேஷ், முதற்படம் என்ற பதற்றமில்லாமல், வெகு இயல்பாகவே படத்தை நகர்த்தியிருக்கிறார். யுவன் சங்கர்ராஜாவின் இசை சொல்லிக்கொள்ளும் படியாக இல்லை.

இந்த வருடத்தில் காதலர் தினச் சிறப்பம்சம் 'சிவா மனசில சக்தி' தான்!★



# தெலுங்கிலும் மீனா

ஒரு காலத்தில் தமிழின் முன்னணி நாயகியாக வலம் வந்தவர் கண்ணழகி மீனா. காலம் கரைந்தோட, புதிய நடிகைகளின் பிரவேசத்தால் தமிழில் மீனாவுக்கான வாய்ப்புக்கள் வற்றிப்போகத் தொடங்கின. அத்தி பூத்தாற்போல எப்போதாவது மட்டுமே தமிழ்ப்படங்களில் மீனாவைக் காண முடிகின்றது என்றாலும் பிழைப்பதற்கான வழிமுறைகளை நன்றாகவே அறிந்து வைத்திருக்கும் மீனா, தெலுங்குப் படவுலகில் நுழைந்து, தன் நடிப்புத் திறமையால் அங்கு முன்னணி நடிகையாகத் தன்னை நிலைநிறுத்தி விட்டார். தற்போது ஒரே சமயத்தில் மூன்று தெலுங்குப் படங்களில் நாயகியாக நடித்து வருகிறார் மீனா.★





# ஆகாஷ் ஜெய்

கிட்டத்தட்ட 10 படங்கள் வரை நடித்தும் வெற்றிக்கனியை எட்டிப் பிடிக்க முடியாத நடிகராக விளங்குபவர் நடிகர் ஜெய் ஆகாஷ். இந்த இலட்சணத்தில் சொந்தமாகத் தானே ஒரு படத்தை இயக்கி, நடித்து வருகின்றார். தன்னுடைய படங்கள் வரிசையாக மண் கௌவியதற்கு, தன்னுடைய பெயரும் ஒரு காரணம் என நினைத்த ஜெய் ஆகாஷ், இப் போது தனது பெயரை மாற்றிய மைத்துள்ளார். அதாவது இது வரை ஜெய் ஆகாஷாக இருந்த வர் இனிமேல் 'ஆகாஷ் ஜெய்' என உலா வரப்போகிறார். பெயர் மாற்றத்தோடு வெற்றிகளும் கூட வருமா? ★



# ஆளை விட்டால் போதும்!

தேனிசைத் தென்றல் தேவாவின் மகனான ஸ்ரீகாந் தேவாவும் இசையமைப்பில் கலக்கி வருகிறார். குறிப்பாகத் தமிழ்த் திரைப்படக் குத்துப்பாடல்களில் ஸ்ரீகாந்தேவாவின் கொடிதான் உயரப்பறக்கிறது. இசைத் துறையில் சிறந்துவிளங்கும் இவருக்கு ஒரு படத்தில் வில்லனாக நடிக்குமாறு அழைப்பு வந்தது. எனினும் 'ஆளை விட்டால் போதும்' என்ற ரீதியில் அதை நிராகரித்துவிட்டார் இவர். "நான் ஏற்கனவே சிவகாசி, வேதா போன்ற படங்களில் பாடல் காட்சிகளில் தோன்றியுள்ளேன். அதுபோல சிறு வேடங்கள் என்றால் நடிக்கத் தயார்" என்றும் அறிவித்து இருக்கிறார் ஸ்ரீகாந்தேவா.★

# பாலாவுக்கு 3 கோடி

படத்துக்குப் படம் உண்மையாகவே வித்தியாசத்தைக் காட்டுகின்ற இயக்குநராக அறியப்பட்டவர் பாலா. ராசி இல்லாத நடிகர்களாக முத்திரை குத்தப்பட்டிருந்த விக்ரம், சூர்யா போன்றோரை தமிழ்த்திரையுலகில் உச்ச நிலைக்குக்கொண்டு வந்தவர் இவர்.

அண்மையில் வெளிவந்து வசூலைக் குவித்துவரும் 'நான் கடவுள்' படம் பாலாவின் மதிப்பை இன்னும் உயர்த்திவிட்டது.

இதனால் பாலாவை வைத்துப் படமெடுப்பதற்குப் பல தயாரிப்பு நிறுவனங்கள் போட்டியிடத் தொடங்கிவிட்டன. அந்தப் போட்டியில் வெற்றி பெற்றவர் ரஜினியின் மகளான சௌந்தர்யா தான். 3 கோடி ரூபாவை முற்பணமாகக் கொடுத்து, பாலாவை ஒப்பந்தம் செய்துள்ளார் சௌந்தர்யா.★



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**Broiler for Sale**
*(Home Delivery Available)*
*Contact: 0773086721*



## வீடு விற்பனைக்கு

கொழும்பு-15 புளுமெண்டால் வீதியில் புதிதாக கட்டப்பட்ட மூன்று மாடிகள் கொண்ட வீடு, தளபாடங்கள், மின்சாரப் பாவனைப் பொருள்கள் அடங்கலாக (2½ பேர்ச் காணி) உடனடியாக விற்பனைக்குண்டு.

தொடர்பு கொள்ளவும்: 0774725885



## மணமகள் தேவை

சுவீடன் P.R. உடைய தற்போது நோர்வேயில் டிசைனிங் எஞ்சினியராகக் கடமையாற்றும் 1977 ஆண்டு, சுவாதி நட்சத்திரம், 4 பாதம் கொண்ட மணமகனுக்கு டாக்டர், எஞ்சினியர், B.Sc. அல்லது சயன்ஸ் படித்த நேசிங் மணமகள் தேவை.

தொடர்பு: 0776030072, 021 2240042



## திருமண சேவை

சுலபமான வாழ்க்கைத்துணை தெரிவுக்குச் சுய தெரிவு முறையே! சுயதெரிவு முறை பற்றிய வரன்முறையைத் தெரிந்திட திங்கள், புதன், வெள்ளி மாலை வேளைகளில் மூத்த புகழ்பூத்த - சுயதெரிவுமுறை முன்னோடி- தனிமனித நிறுவுநர் - சர்வதேச சகலருக்குமான திருமண ஆற்றுப்படுத்துநர் குரும்பசிட்டியூர், மாயெழு வேலமுதனுடன் தொடர்புகொள்க.

கொழும்பு நேரடித் தொலைபேசி:
23 .0488, 2360694, 4873929.



# ஓராண்டு நினைவஞ்சலி



செல்வம்
இராசேந்திரம் கருணாகரர்
(முகாமைத்துவ உதவியாளர், மாவட்ட புனர்வாழ்வுச் செயலகம், வவுனியா)

தோற்றம்: 18.05.1982 மறைவு: 05.03.2008

சீராளா வளர்மதியாய் ஒளி தருவாய் என்றிருந்தோம்
பேராளா விதியெனும் கிரகணமுனை விழுங்கியதோ
ஓராண்டாய் ஓலமிட்டுக் கண்ணீர் சொரிகின்றோம்
வாராத செல்வமதாய் வந்தவனே தேற்றிடுவாய்

07.03.2008 அன்று எமது அன்புச் செல்வனின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையில் பங்கு பற்றியவர்களுக்கும் கண்ணீர் அஞ்சலி செலுத்திய யாழ்.இந்துக் கல்லூரி 2001 உ/த விஞ்ஞானப் பிரிவு மாணவர்களுக்கும், பலவழிகளிலும் உதவிகள் புரிந்த வவுனியா மாவட்ட புனர்வாழ்வுச் செயலக உத்தியோகத்தர்களுக்கும் மற்றும் சகல திணைக்கள உத்தியோகத்தர்களுக்கும் எமது நன்றியை இந்த நினைவு தினத்தின் போது மீண்டும் தெரிவிக்கின்றோம்.

சுதுமலை தெற்கு, மானிப்பாய். -பெற்றோர்.


## தென்மராட்சியில் மற்றொரு கோபுரம்

யாழ்ப்பாணம்,பெப்.22

தென்மராட்சிப் பிரதேசத்திற்கு மற்றொரு தொலைத் தொடர்புக் கோபுரம் அமைக்கப்பட்டு வருகிறது.

'மொபிடல்' தொலைபேசி நிறுவனத்தினால் சாவகச்சேரி நகர சபை அலுவலகத்திற்கு அருகில் தொலைத் தொடர்புக் கோபுரம் அமைக்கப்பட்டு வருகிறது.

ஏற்கனவே சாவகச்சேரி நகர்ப் பகுதியில் 'டயலொக்' நிறுவனத்தினால் தொலைத்தொடர்புக் கோபுரம் அமைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (203-207)

## வலயமட்டப் போட்டிக்கு விண்ணப்பம் கோரல்

யாழ்ப்பாணம்,பெப்.22

தென்மராட்சி கல்வி வலயப் பாடசாலைகளின் மாணவர்களுக்கிடையிலான வலயமட்ட மெய்வன்மைப் போட்டிகளில் பங்கு பற்றும் வீர வீராங்கனைகளின் விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

விண்ணப்பங்களை அடுத்த மாதம் இரண்டாம் திகதி பி.ப. ஒரு மணிக்குப் பின்னர் வலயக் கல்வி அலுவலகத்தில் கையளிக்குமாறு வலயக் கல்விப் பணிப்பாளர் கு.பிறேமகாந்தன் அறிவித்துள்ளார். (203-201)


## டேடன்ஸ் ஆய்வுகூட சேவை

கொழும்பு டேடன்ஸில் செய்யப்படும் சகல விதமான இரத்த, சிறுநீர், உடற்கூற்றியல் மாதிரிகள் தினசரி ஏற்றுக்கொள்ளப்படும். இவற்றினை டேடன்ஸ் மருத்துவ ஆய்வுகூடத்தில் ஒப்படைக்கவும். அனுப்பப்படும் மாதிரிகளின் பெறுபேற்றறிக்கைகள் விரைவில் பெற்றுத் தரப்படும்.

514/1, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். (82924)

டேடன்ஸ் நிர்வாகம்
021 222 9727, 077 3068122



## ஏல விற்பனை

**மின்சாரப் பொருள்கள்**

மின்மோட்டர்கள் — மின் விசிறிகள்
குளிர் சாதனப் பெட்டி — மைக்கோன், இன்னும் பல

**அலுவலகப் பொருள்கள்**

கந்தோர் மேசைகள் (முதிரை)
கதிரைகள்
தட்டெழுத்து, றோணியோ இயந்திரங்கள்
சிகரெட், பற்றரி விற்பனைப் பெட்டிகள் (பிளாஸ்ரிக்)
இராக்கைகள் (இரும்பு, மரம்)
இரும்புப் பெட்டகங்கள்
சைக்கிள்
சோக்கேஸ் (கண்ணாடி, மரம்)
மேடைத் தராசுகள்
பாவித்த தகரப் பீப்பாக்கள்
வெற்றுப் போத்தல்கள் இன்னும் பல

இடம்: யாழ்ப்பாண ஐக்கிய வியாபார சங்கம்
மணிக்கூட்டு வீதி (யாழ்.பொலிஸ் அருகில்)
420, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

காலம்: 28.02.2009 சனிக்கிழமை, மு.ப. 10 மணிக்கு

பொருள்களை பார்வையிடும் நாள்கள்: 25ஆம், 26ஆம், 27ஆம் திகதிகளில் காலை 9 மணி முதல் பி.ப. 1 மணி வரை

குறிப்பு: ஏலத்தில் விற்பனையாகும் பொருள்கள், முற்றாக பணம் செலுத்தப்பட்டு, உடன் அப்புறப்படுத்தப்படல் வேண்டும்.

(82917) நிர்வாகம்.



## திருமண சேவை

உங்களின் திருமணங்கள் இன்னமும் நிறைவேறவில்லையென்று மனம் சோராதீர்கள் 47 வருடங்களாகத் திருமணங்களை நிறைவேற்றும் 'சர்வதேச புலவர் திருமண சேவையுடன்' தொடர்புகொண்டு உங்கள் திருமணங்களை நிறைவேற்றுங்கள். அலுவலக நேரம் காலை 9 மணி தொடக்கம் பிற்பகல் 1 மணிவரை,
பி.ப. 3 மணி தொடக்கம் 7 மணிவரை

மதுரகானம் 238, அரசடி வீதி, கந்தர் மடம், யாழ்ப்பாணம்
தொ.பே: 0713352215, 021 2227147
15A, 32 வது ஒழுங்கை வெள்ளவத்தை, கொழும்பு 06
தொ.பே: 0112500380

இயக்குனர்:
புலவர் செ.து.தெட்சணாமூர்த்தி



**Obtain A World Class UK Qualification In**

City & Guilds

# International Spoken English & International ESOL

இந்த இரண்டு பரீட்சைகளிலும் சித்தியடைந்தால் உலகம் முழுவதும் அங்கீகாரம் பெற்ற City & Guilds இன் Diploma வைப் பெறமுடியும்.

**The International ESOL Diploma Covers all four language skills; Reading, Writing, Listening and Speaking**

இந்தப் பரீட்சைகள் ஐந்துமட்டங்களில் (Five Levels) நடைபெறும்

**Levels of the Common European Framework (CEF) are established by the Council of Europe.**

* ACCESS LEVAL *(A2) equal to Cambridge Key English Test (KET)*
* ACHIEVER LEVEL *(B1) equal to Cambridge Preliminary English Test (PET)*
* COMMUNICATION LEVEL *(B2) equal to Cambridge First Certificate in English (FCE)*
* EXPERT LEVEL *(C1) equal to Cambridge Advanced Certificate in English (CPE)*
* MASTERY LEVEL *(C2) equal to Cambridge Proficiency in English (CPE)*

எல்லோருக்கும் ஏற்றதோர் பாடநெறி இரண்டு பரீட்சைகளையும் ஒரே நேரத்தில் எடுக்கவேண்டும் பரீட்சைகள் கொழும்பிலே நடைபெறும். பரீட்சைகளுக்கான ஒழுங்குகளை எமது நிறுவனத்தில் நேரிலே வந்து அறியமுடியும்.

## Course Schedule

| | Mon - Tue - Wed - Thu | Saturday & Sunday |
|---|---|---|
| Duration | 4 Months (150 hours) | 4 Months (150 hours) |
| Time | 10.30 a.m - 12.30 p.m | 11.00 a.m - 02.00 p.m |
| Commencement | 2nd March 2009 | 7th March 2009 |

புதிய வகுப்புக்கள் 02.03.2009 இல் ஆரம்பமாகின்றன.

# BRITISH COLLEGE OF ENGLISH

City & Guilds Impleme[illegible]

143, Adiyapatham Road, Thirunelvely. T.P: 060 221 6027



# BREAKING NEWS!

**STUDY IN UK | SPOT ADMISSION**




## THE UNIVERSITY OF PORTSMOUTH

University of Portsmouth

By Mrs. Catherine Cole
Deputy International Director
University of Portsmouth, UK
26th of February 2009 3 pm onwards
September 2009 Intake

**Over 30,000 Students, Part Time Jobs Guaranteed**

More than 140 Undergraduate and Postgraduate are Programmes are Offered

**Students who wish to pursue their higher education in the UK after their A/L's or Undergraduate's can apply immediately**

Students who successfully completed the **CIMA, AAT, B.C.S, ABE, NCC** & any Diploma grades are welcome to obtain exemption for top up Degrees.

- கடந்தவருடம் ஆக கூடுதலான UK Visaக்களை பெற்றுகொடுத்து சாதனை படைத்த நிறுவனம்.
- யாழ் மாணவர்களுக்கு விசேட பயண ஏற்பாடுகள் செய்து கொடுக்கப்படும்.
- யாழ் பல்கலைக்கழகத்தில் Undergraduate முடித்தவர்கள் MBA செய்ய அரிய வாய்ப்பு.

**Free** Entrance / Offer / Preparation

- Come and have a chat with them Directly at our office
- All undergraduates, postgraduates & Diplomas
- Minimum qualification GCE (A/L)

Enroll for Sep./Oct. 2009 intake soon. IELTS would be an additional advantage. Don't miss this golden opportunity!

For Appointment: 011 755 5511/12

**FREE** Advice, Consultation Guidance IELTS Lessons

**100% VISA SUCCESS FOR GENUINE STUDENT**

Head Office-
379-1/2, Galle Road, Colombo 6, Sri Lanka.

Branches-
56, The Gardens, West Harrow, Middlesex HA 1 4EY, UK

FLEX Graphic

**EXPO NET OVERSEAS CONSULTANTS**

Hotlines: 071 415 0995, 011 755 5511/12,13,14 www.expogroup.lk


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இயற்கை வைத்தியத்தில் நம்பிக்கை வைப்பதன்மூலமே அதன் அதியுச்சப் பயன்பாட்டைப் பெற ஏதுவாகும்

ஒவ்வொரு மண்ணுக்கும் மகத்துவம் உண்டு. இந்த மகத்துவத்திற்கு அணிகலனாக இருப்பவை கலையும் கலாசாரமும் ஆகும். ஆய கலைகள் அறுபத்து நான்குடன் மாண்புமிகு கலாசாரமும் சேர்ந்துள்ள இம்மண்ணின் மாட்சிமைக்குரிய சிறப்புக்கொண்டது சுதேச வைத்தியம் ஆகும்.

உண்பதற்கு உணவை விளைவித்துக் கொடுப்பவன் விவசாயி என்றால் அந்த உணவை மருந்தாக்கி ''முள்ளை முள்ளாலே எடுப்பதுபோல'' நோயைத் தீர்ப்பவன் சுதேச வைத்தியன். உணவு அளவுக்கு மிஞ்சும் போது, அமிர்தமென்றாலும் அது நஞ்சு. ஆனால் நஞ்சையே மருந்தாக்கும் அற்புதம் சுதேச வைத்தியத்தின் கைங்கரியம். இதிலிருந்து விவசாயத்திற்கும் சுதேச வைத்தியத்திற்குமுரிய நெருங்கிய தொடர்பு தெரிகிறதல்லவா! இன்னும் சொன்னால் விவசாயமும் சுதேச வைத்தியமும் ஒரு நாணயத்தின் இரண்டு பக்கங்கள்.

சுதேச வைத்தியம் கலைத்துறையினூடாக நீண்டு பயணிக்கும் தேவை இருக்கின்றது. ஒவ்வொரு பிரதேசத்திலும் வாழும் மக்களின் கலை கலாசாரத்துடன் பின்னிப்பிணைந்திருக்கும் தன்மை சுதேச வைத்தியத்திற்கு உண்டு. இலங்கையிலே சிங்கள மக்களினால் பாரம்பரியமாக பயன்படுத்தப்படும் மருத்துவம் ஆயுர்வேதமாக இருப்பதும், அது இந்தியாவில் வழக்கத்திலிருக்கும் ஆரிய மொழியின் ஆளுமைக்கூடாக இருந்ததையும் அறியக்கூடியதாக இருக்கின்றது. 'மொழி' சார்ந்த நிலையில் ஆயுர்வேத வைத்திய முறை சிறப்பாக சிங்கள மக்களினால் இன்றும் முன்னிலைப் படுத்தப்பட்டு, பயன்படுத்தப்பட்டு வருவதிலிருந்து, கலைத்துறைக்கும் சுதேச வைத்தியத்திற்குமான இணைப்பு சுட்டிக்காட்டப்படுகின்றது. ''சிங்கள மக்களது பாரம்பரியத்தில் சுதேச வைத்தியர்களை ''வெத மாத்தயா'' என விளித்து அவருக்குத் தனியான மதிப்பும் கொடுக்கப்படுகின்றது.

தமிழர் கலாசாரத்தில் திராவிட மொழி தழுவிய நிலையில் அதனைச் சித்த மருத்துவமாக முகவரியிடப்பட்டிருப்பதும் சித்தர்களின் வாக்குவன்மையையும் அவர்தம் ஞானஅறிவையும் உள்ளடக்கி சித்த வைத்தியக்கோட்பாடுகள் உருவாக்கப்பட்டிருக்கின்றன.

இவை தவிர ''யுனானி'' வைத்திய முறை முஸ்லிம் மக்களின் பாரம்பரியத்துடன் ஒன்றிப்போவதனை அவதானிக்கலாம். இவ்வாறாக மக்களின் கலை கலாசாரத்துடன் பின்னிப் பிணைந்திருக்கும் சுதேச மருத்துவத்துக்கு கலைத்துறை சார்ந்த ஈடுபாடும், இணைப்பும் அதிகமாகவே உள்ளது.

மேலும் முகாமைத்துவப்படுத்துதல் என்பது அனைத்து மருத்துவ முறைகளிலும் தேவையானதும், அவசியமானதுமான விடயமாகக் கருதப்பட்டாலும், பேராசிரியர் பொன். பாலசுந்தரம்பிள்ளை அவர்கள் குறிப்பிட்டது போன்று பரம்பரை வைத்தியர்களின் மருத்துவ ஆதிக்கத்தில் இருந்த காலத்தில் அவரே அந்த பிரதேசத்தை ஆள்பவராக, அதிகம் செல்வாக்குடையவராக இருந்திருக்கின்றார். இன்றும்கூட கிராமப்புறங்களில் இந்த நிலை இருப்பதனை அவதானிக்கலாம். ஒரு நோயாளியை முகாமைப் படுத்துவதிலிருந்து அந்த ஊரவர்களை முகாமைப்படுத்துவது வரை பரம்பரை வைத்தியர்களின் செயற்றிறன் இருந்திருக்கின்றது. இதிலிருந்து முகாமைத்துவத் துறைக்கும் சுதேச வைத்தியத்திற்குமான இணைப்பு வெளிப்படுகின்றதல்லவா!

விஞ்ஞானத்தின் அபரிமிதமான வளர்ச்சி நிலையில் சுதேச வைத்தியமும் உள்வாங்கப்படும் நிலை தற்போது தோன்றியுள்ளதனை அனைவரும் உணர்கின்றனர். தூய விஞ்ஞானத்தின் துணை கொண்டு பயன்படுத்தப்படும் மருந்துகளின் இரசாயன குணங்குறிகள், சேர்க்கைகளின் ஒத்த-ஒவ்வாமை தன்மைகள், பயன்படுத்தப்படும் உலோகங்களின் செயற்பாடு என்பன இதில் உள்ளடங் கலாகும். இந்நிலையில் தூய விஞ்ஞா னத்தின் இணைப்பு சுதேச வைத்தியத் தின் தேவையாகின்றது. வெறுமனே பரிந்துரைத்த மருந்துகளினை பயன்படுத்துவது என்பதிலிருந்து விலகி, அந்த மருந்துகளின் இயல்புகளை விஞ்ஞானத்தின் துணை கொண்டு அறிந்து அதனைச் சிறப்பாகப் பயன்படுத்துவதற்கான வாய்ப்பு இப்போது கிட்டியிருக்கிறது. சித்தர்கள் போதித்த மருத்துவமுறைகளின் அடிப்படைத் தத்துவங்களில் மாற்றத்தை ஏற்படுத்தாது அந்த மருத்துவ தன்மையில் முன்னேற்றத்தை ஏற்படுத்துவதற்கு விஞ்ஞானத்தின் துணைகொண்டு அனைத்துத் துறைகளாலும் முயற்சிக்க வேண்டும்.

## சுதேச வைத்தியமும் மேலைத்தேச வைத்தியமும் இணைந்து செயலாற்றும் காலம் கனியவேண்டும்

### நாடி பிடித்தல் - சுதேச வைத்தியத்தின் சிறப்பு

நாடி பிடித்து நோயின் தன்மையை இனங்கண்டு கொள்வது சுதேச வைத்தியத்தின் சிறப்பு. இருப்பினும், அண்மைக்காலங்களில் ஏற்படுகின்ற நோய்களுக்கு இவ்வாறான நாடி பிடித்து அதனை ''இது என'' கண்டு பிடிப்பதில் சுதேசவைத்தியர்களுக்கும் சிக்கல்கள் உண்டு. புதிது புதிதாக வருகின்ற நோய்களின் குணங்குறிகள் பற்றிய குறிப்புகள் குறிப்பாக சிக்குன் குனியா, எச்.ஐ.வி போன்றவற்றிற்கு சித்த தத்துவ முறைகளில் இருந்திருக்க வாய்ப்புக்கள் இல்லை. இருந்தாலும் எம்மால் நாடிபிடித்து இதனைக் கூட கண்டுபிடிக்க முடியும் என அடித்துக்கூறும் இக்கால ''சித்தர்களும்'' இருக்கிறார்கள். அப்படியிருந்தால் அது என்றுமே வரவேற்கத்தக்கது. சித்த வைத்திய கலாநிதியும் பாரம்பரிய வைத்திய விற்பன்னருமான உரோமகேஸ்வரன் அவர்களினது கூற்று இங்கே உற்றுநோக்கத்தக்கது. சித்தவைத்திய முறைகளில் கல்வி கற்பவர்களுக்கு சரியாக நாடிபிடித்துப் பார்க்கும் முறையை கற்பிக்கவேண்டும் என்றும், நாடி பிடித்து நோயினை இனங்கண்டு கொள்வதனை அனைவரும் திறன் (Skill) சார்ந்த ஆளுமையாக விருத்தி செய்யவேண்டும் எனவும், அவர் அடிக்கடி வலியுறுத்துவார். இக்கருத்திற்கு சித்த வைத்தியர்களிடம் எதிர்க்கருத்து இருக்க முடியாது. ஏனெனில் சித்த வைத்திய அடிப்படை தத்துவங்களின் தன்மை மாறாது கற்கும் நிலையில் நாடி பிடித்தல் என்பது முறையாக அனுபவத்தினூடாக கற்றுக்கொள்ளக்கூடியதாகும்.

### நோயை இனங்காணுதல்

ஆனால் விஞ்ஞான வளர்ச்சியின் படிக்கட்டுகளில் ஒவ்வொரு துறையும் ஏறிநிற்கவேண்டிய காலகட்டத்தில், இருக்கின்ற வளங்களைப் பயன்படுத்தி நோயினை சரியாக இனங்காணக் கூடியதாக (Diagnosis) இருந்தால் சுதேச வைத்தியத் துறையினால் இன்னும் சிறப்பாகப் பங்களிக்க முடியும்.

### சுதேச வைத்தியமும் மேலைத்தேய மருத்துவமும்

மேலைத்தேய மருத்துவத்தில் பயன்படுத்தப்படுகின்ற உடலின் இயக்கத்தை அளவிடக்கூடிய கருவிகளை அல்லது உபகரணங்களைப் பயன்படுத்தி நோயைச் சரியாக இனங்காணக்கூடியதாக இருந்தால், அந்த வசதிவாய்ப்பு கிடைக்கப்பெற்றால், சுதேசவைத்தியத்தினால் இன்னும் சிறப்பாக செயற்படமுடியும் என்ற பலரது கருத்துக்கு முக்கியத்துவம் கொடுக்க வேண்டியுள்ளது. இது சுதேச வைத்தியத்தின் சிறப்புத் தன்மைக்கு வழிசமைப்பதோடு, அதனது விஞ்ஞானபூர்வமான மேம்பாட்டிற்கும் உறுதுணையாயிருக்கும்.

இந்நிலையில் சுதேச வைத்தியத்திற்கும் மேலைத்தேய மருத்துவத்திற்குமான தொடர்பு உறுதிப்படுத்தப் படுகின்றது. மேலும் இரு வைத்திய முறைகளும் இணைந்து செயலாற்றும் காலம் கனிந்து வருகின்றதையும் அனுமானிக்கக் கூடியதாக இருக்கின்றது.

சுதேச மருத்துவ முறைமூலம் சிகிச்சை பெறும் நோயாளிக்கு உயிராபத்து ஏற்படும் சாத்தியக்கூறு தென்படுகையில் அவருக்கு மேலைத்தேய முறைமூலம் சிகிச்சை அளித்து காப்பாற்றப்படுவதும் மேலைத் தேய முறையினால் இயலாது என இனங்காணப்பட்ட நிலையில் சுதேச வைத்தியத்தினால் முழுவதுமாக குணமாக்கப்பட்ட சம்பவங்களும் எங்களது சமூகத் தில் நிறையவே உள்ளன. எந்த வைத்தியமுறையிலும் சரி, பிழை பார்ப்பதையோ அல்லது குறை கூறுவதையோ விடுத்து அவற்றினது பயன்பாட்டை எவ்வாறு மக்கள் நம்பகத்தன்மை யுடன் பெற்றுக்கொள்ளலாம் என்ற நிலை யில் சாதாரண ஒரு பொதுமகனாக இதனைப் பார்க்கக் கூடியதாயுள்ளது.

### சுதேச வைத்தியத்தில் நம்பிக்கை

சுதேச மருத்துவத்தில் சிங்கள மக்கள் கொண்டிருக்கும் முழுமையான நம்பிக்கைக்கு இணையாக தமிழ் பேசும் மக்களிடம் நம்பிக்கை இல்லை என்ற பொதுவான கருத்து உண்டு. இயற்கையை அனுசரித்து இயற்கை வைத்தியத்தில் வைக்கும் முழுமையான நம்பிக்கையின் மூலமே அதனது சிறப்பை - அதிஉச்சப் பயன்பாட்டை அனைவரும் பெறமுடியும்.

### சுதேச மருத்துவத்திற்கும் ஏனைய துறைகளுக்கும் இடையே பாலம் அமைத்திட வேண்டும்

மாறிவரும் சூழல் மாற்றங்களினாலும் மனிதனால் ஏற்படுத்தப்படும் இடர்பாடுகளினாலும் உலக சுகாதாரத்தில் பல பிரச்சினைகள் தோன்றி வரும் இக்காலகட்டத்தில், வேற்றுமைகளைத் தவிர்த்து அனைவரும் ஒன்றிணைந்து சுதேச மருத்துவத்தை மேம்படுத்த முன்வரவேண்டும். இது எங்கள் மருத்துவம். இயற்கையை அனுசரித்து இயற்கையை வசப்படுத்தி சமய நம்பிக்கையோடும் சித்தர்களின் ஆசியுடனும் செய்யப்படும் வைத்தியம். சித்தவைத்திய அடிப்படைத் தத்துவங்களிலோ அல்லது கோட்பாடுகளிலோ மாற்றமெதனையும் ஏற்படுத்தாது சித்த வைத்தியத்தின் பயனைச் சிறப்பாகப் பெறுவதற்கான அனைத்து வழிவகைகளையும் காணுவதற்கான நேரம் இது.

ஏனைய துறைகளுடனான இணைப்பு அவசியமானதாகும். குறிப்பாக மேலைத்தேய மருத்துவத்துடனான இணைப்பு இங்கே தேவைப்படுகின்றது. இரு மருத்துவதுறையும் இணைந்து சிறப்பாக இயங்கினால் எம்மில் இருக்கின்ற, இனிவரப்போகின்ற நோய்களுக்கு பரிகாரம் கண்டிடலாம். இரு மருத்துவத்துறைகளிலுமுள்ள நன்மை தீமைகளைக் கவனித்து சிறந்த வைத்திய சேவையை அனைவரும் பெற்றிடலாம். (வளரும்)



கலாநிதி கு.மிகுந்தன்
தலைவர், விவசாய உயிரியல்துறை,
விவசாயபீடம்,
யாழ்.பல்கலைக்கழகம்.

## ஆரோக்கியமான சமூகப் பாதைக்கு இட்டுச் செல்லும் விளையாட்டு நிகழ்வுகளில் பண்பாட்டைச் சீர்குலைக்கும் குத்தாட்டங்கள் தேவைதானா?

*நாக்கு முக்கா நாக்கு முக்கா.......*

மைதானத்தில் குத்தாட்டம் ஆரம்பமாகிறது. இது ஏதோ இந்தியத் தொலைக்காட்சி நிகழ்ச்சியின் வர்ணனையோ என நினைப்பீர்களாயின் ஏமாந்தது நீங்கள்தான். சூடு பிடித்திருக்கும் எங்கள் பாட்சாலைகளின் விளையாட்டுப் போட்டி ஒன்றின் இடைவேளை நிகழ்வுகள்தான் இந்தக் குத்தாட்டம்.

''ஆண்பிள்ளைகள் பெல்ற் கட்டக்கூடாது'' ''சரியான சீருடை அணியப்பட வேண்டும்'' என்றெல்லாம் ஆரோக்கியமான திட்டங்களை முன்வைக்கும் இப்பாடசாலைகளில் ஏன் இந்தத் தப்பாட்டம்?

இல்ல மெய்வல்லுநர் போட்டி நிகழ்வுகளில் இடைவேளை நிகழ்வு என்பது, கண்ணையும் கருத்தையும் கவருமாறு அமைக்கப்பட வேண்டியதாகும்.

குழு ஒருமைப்பாடு, ஒரு சீர்த்தன்மை, பண்பாட்டு வெளிப்படுத்துகை, இரசனை உணர்வு எனப் பல்வேறு அம்சங்களை உள்ளடக்கியதாக இந்நிகழ்வுகள் வடிவமைக்கப்படுகின்றன. ஆயிரக்கணக்கான ரூபாய்களைக் கொட்டித் தைத்த ஆடைகளின் அணிவகுப்பாக, கண்கவர் காட்சியாக, பாடசாலையின் இடாம்பீகத்தைப் பறைசாற்றுவதாக இதனைக் கருதிக்கொள்வோரும் உள்ளனர்.

**கோணல் லங்கள்**

எது எவ்வாறாயினும் - பாடசாலை சிறியதோ பெரியதோ விளையாட்டுப் போட்டியின்போது இடைவேளை நிகழ்வு தவிர்க்க முடியாத நிகழ்ச்சி ஆகிவிட்டது.

மிக அண்மைக்காலமாக எம்மவரிடம் செல்வாக்குப் பெற்றுள்ள செய்மதித் தொலைக்காட்சி அலைவரிசைப் பாவனையின் விளைவாக, ''மானாட மயிலாட.....'' போன்ற குத்தாட்ட நிகழ்வுகளும் இளையவர்களிடம் செல்வாக்குப் பெற்றுள்ளன. திரைப்படங்களின் பாடல் காட்சிகளும் இதை ஒத்ததாகவே வடிவமைக்கப்படுகின்றன. இந்த இரசனையைக் கட்டுப்படுத்தி அல்லது திசைமாற்றி இளையவர்களைப் பாதுகாக்க வேண்டிய பாடசாலைகள், இந்த இரசனைப் போக்குக்குக் களம் அமைத்துக் கொடுப்பதுதான் வேதனை தருகின்ற அம்சமாக இருக்கிறது.

நம்மண்ணின் மாண்பினை, பிரதேசக்கலை வடிவங்களை எடுத்துக் காட்ட வேண்டிய - பேணிப்பாதுகாக்க வேண்டிய பாரிய பொறுப்பு எம் எல்லோருக்கும் உரித்தானது. இதனை உணர்ந்து செயற்படும் நிலையில் விரல்விட்டு எண்ணக்கூடிய சில பாடசாலைகளாவது உள்ளன என்பதும் இங்கு சுட்டிக்காட்டப்பட வேண்டியதே.

பல சவால்களுக்கு முகங்கொடுக் கும் எம்சமூக விழுமியங்களை, நம்மை நாமே உணர்ந்து பாதுகாக்க வேண்டிய நிலையிலேயே இன்று நாம் இருக்கின்றோம். பாடசாலை இல்ல மெய்வல்லுநர் போட்டியில் கைக்கொள்ளும் நடை முறைகள் பிள்ளைகளின் உள்ளத்தில் பசுமரத்தாணிபோல இலகுவில் பதிந்துவிடும் தன்மை படைத்தவை.

எமது சூழமைவுக்கேற்றதாக, பண்பாட்டுத் தனித்துவங்களை வெளிக்காட்டும் வண்ணம் இடைவேளை உடற்பயிற்சி நிகழ்வுகளை அமைத்துக் கொள்வதே எமது சமூக வாழ்வுக்கும் வளத்துக்கும் ஆரோக்கியமானதாக அமையும். பாடசாலைகளில் நாள் தோறும் இடம் பெறும் காலை உடலுறுதிச் செயற்பாட்டிற்கென நம்மவர் இசையைப் பயன்படுத்தி ''சுக அப்பியாசம்'' என்ற பெயரில் இறுவட்டு ஒன்றை அண்மையில் வெளியிட்ட யாழ். கல்வி வலய உடற்கல்விப் பிரிவினரின் முன் மாதிரியான செயற்பாடும் இங்கு பாராட்டுக்குரியது. உள்ளத்து உணர்வு உந்துகையே இவை யாவற்றின் [illegible] மாக அமையும். இல்லையேல் சொற்கள் யாவும் தோற்றுவிடும். - ச.லலீசன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெக்கங் கெட்டவர்கள்...

*(07 ஆம் பக்கத் தொடர்ச்சி...)*

அவனுக்குப் பழைய நிகழ்ச்சிகள் ஒன்றன்பின் ஒன்றாய் நினைவுக்கு வந்தன.

'தவணை முடிய, 'அறுதி'க்கு வைச்ச காணியையும் வீட்டையும் விட்டு அண்ணனெண்டும் பாராமல் எழும்பச்சொன்ன மாமி யும், இந்த மாமாவும்.......'

'ஏந்தப் பெரிய சுரண்டல்....... நாலாயிரத்துக்கு வச்ச காணியும் வீடும்; இப்பயும் முப்பத்தையாயிரத்துக்குக் கூடப்பெறும்.'

'செபஸ்தியார் கோயிலடியில், ஏழைப் பறையர்களை ஏமாற்றிப் பறித்த காணித் துண்டுகள்..... குடியெழுப்பப்பட, சாக்கினால் பந்தல்போட்டு ஒழுங்கையில், குமர்ப் பிள்ளைகளோடும் இரவையும் பகலையும் கழித்த அவர்கள்.......'

'இப்பிடித்தான் இவங்க சொத்துச் சேக்கிறாங்க....'

'இந்தப் பணக்காறச் சாதியே.....'

அவனுக்கு ஆத்திரம் பொங்கி வந்தது.

''இந்தக் காசு, ஆருக்கு வேணும்.......?'' வெறுப்போடு சொன்னான்.

* * *

மூன்று மாதங்களிற்குப் பிறகு லீவில் ஊரிற்கு வந்திருந்தான்.

'பப்ளிக் லைபிறறி'க்குப் போய்விட்டு மத்தியானம் திரும்புகையில், முனிசிப்பாலிற்றிக் கட்டடத்தில் நின்றபடி எமிலியூஸ் கையைக்காட்ட, நின்றான்.

மாடியில் 'ஒவ்வீசில்' நின்றும் ,இறங்கி இவனுக்குக்கிட்ட வந்தவன்,

''மாஸ்ரர்..... நீர் வந்ததே எனக்குத் தெரியாது. உங்கட மாமா பத்து மணி போல, 'தம்பி வந்திருக்கு...... ஒருக்காக் கேட்டுச் சொல்லு தம்பி' எண்டு அந்தரப் பிடிக்குது, அப்பதான் எனக்கு நீர் வந்து நிக்கிறது தெரியும்...''

''காலமதான் வந்தனான்..... லைபிறறிக்கு வரயிக்க, வழியில எங்கயும் கண்டிருக்கும்......'' யேசுதாசன் சொன்னான்.

''ஐயோ மாஸ்ரர்......! அந்தாளோட பெரிய கரச்சல்..... காணுற நேரமெல்லாம் அரியண்டப் படுத்தினபடி...... கனக்கப் பேர் உம்மக் கலியாணங் கேட்டு ஓடித்திரியினமாம், அதான் தான் அவசரப்படுறேராம்...''

''....... எனக்குப் பெரிய கரச்சலாய்ப் போச்சு... வாற ஆத்திரத்துக்கு, அறம்புறமாய்ப் பேசிப் போடுவன்; பெரிய மனுசனாக் கிடக்கு.....''

திரும்பத் திரும்ப வற்புறுத்தப்பட்டதில் எழுந்த எரிச்சல் அவனது பேச்சில் மண்டிக் கிடந்தது.

''எமிலியூஸ்..... இனிமேல் கேட்டா ஒண்டும் சொல்லுறேரில்ல.... அவரோட, இல்லாட்டி தாய் தகப்பனோட கதையுங்களன் எண்டு ஒத்தையில முடிச்சுப் போடும்.''

எமிலியூசுடன் கதைத்துவிட்டு வருகையில், வீட்டுக்குப் போனதும் அக்காவிடம் இதுபற்றிச் சொல்ல வேணுமென நினைத்துக்கொண்டு வந்தான்.

அக்கா 'குசினி'க்குள் சமைத்தபடி இருந்தாள்; அம்மா 'சின்னக்கடை'க்குச் சென்றுவிட்டதும் வசதியாய்ப் போயிற்று.

எமிலியூஸ் சொன்னதையெல்லாம் சொல்லியவன் ''அவையள் இஞ்ச கலியாணங் கேட்டு வந்தவையளா.....?'' எனக் கேட்டான்.

''ரெண்டு மூண்டு மாதத்துக்கு முன்னம் வந்து கேட்டவயள். அம்மா எங்களுக்குப் புறியமில்லயெண்டு சொல்லி விட்டிற்றா.....''

''இஞ்ச வந்தவையளோ......! அப்ப பெரிய முசுப்பாத்தியாயி ருந்திருக்குமே.....?''

''ம்.....மாமியும் மாமாவும் வந்தினம். ஐயா வாசலில நிண்டவர் வந்தவையள உள்ள வரச்சொன்னேர். கதிரையில இருந்தபடி ஒராள்ற்ற முகத்தை ஒராள் பாத்தபடி இருந்தினம். ஐயா, வந்த விஷயத்தைச் சொல்லுங்களன் எண்டு கேட்டேர். பிறகுதான் 'கலியாணங் கேட்டு வந்தனாங்க'ளெண்டு மாமி சொன்னா.... ஐயா ஒண்டும் பறய இல்ல.....

அம்மாதான் சொன்னா...... 'அவனுக்கு இப்ப கலியாணங்கட்டுறதில விருப்பம் இல்ல'யெண்டு....'எங்கட காசுபணமெல்லாம் அண்ணன்ர பிள்ளைக்குப் போகட்டு மெண்டுதான் வந்தனாங்க' எண்டு மாமி சொன்னா. '....... ஐயோ நீங்க காசுக்காறர்.... இவ்வளவு நாளும் இருந்தது போல உங்களப் போல ஆக்களோட இருங்க...... நாங்க ஏழ பாழையள்......, எங்களோட இருந்த மனுசரோட இருக்கிறம்' எண்டு அம்மா சொன்னா.

மாமாவுக்கும் மாமிக்கும் முகம் தொங்கிப் போச்சு. கொஞ்சநேரம் ஒண்டும் பேசாம இருந்திற்று எழும்பிப் போயிற்றினம்.......''

அவனுக்குத் தன் அம்மாவின் மேல் வியப்புக் கலந்த திருப்தி எழும்பியது. 'மனிசி காசப் பெரிசா மதிக்கயில்ல, மனிசரத்தான் பாக்குது.....' என நினைத்துக்கொண்டவனின் மனதில் மாமியின் மேலும், மாமாவின் மீதும் வெறுப்புத்தான் பரவியது.

'சீ..... இவ்வளவு நாளும் எட்டியும் பாராதவங்க, இப்ப தங்களுக்குக் காரியம் ஆகவேணுமெண்ட உடன வந்திற்றினம்....., வெக்கம், ரோசம் இல்லாம.........

இந்தக் காசுக்காறருக்கு சுயநலந்தான் பெரிசு....... மானம் ரோசம் இல்லாதவங்க.......

தங்களப் போல, காசெண்ட உடன பல்லிளிச்சுப் போடுவமெண்டு நினைச்சிறாங்க போல.....' வெறுப்பும் ஆத்திரமும் மூள,

'என்னட்டக் கதைச்சிருக்க வேணும்; நல்லாக் குடுத்திருக்கலாம்' என எண்ணிக் கொண்டான்.

* * *

மத்தியானச் சாப்பாட்டிற்குப் பிறகு பஞ்சியில் நித்திரைகொண்டு எழும்பியவன் வெளியில எங்கயாவது போக வேண்டும்போலத் தோன்ற, வேட்டியை உடுத்தி சைக்கிளையும் எடுத்துக்கொண்டு வெளிக்கிட்டான்.

'வாடி' குலைந்து வெகுநேரமாகியதில் றோட்டில் நடமாட்டம் குறைந்திருந்தது.

காயப்போட்ட கருவாடுகளைக் கூடைகளில் பெண்கள் அடுக்கிக் கொண்டிருந்தார்கள்; சுருட்டுக் குடித்தபடி குந்தி இருந்த ஒரு மனிசி இவனைக் காட்டி மற்றப் 'பெண்டுகளோடு' எதையோ கதைத்தாள்.

பார்த்தும், ஏதும் அர்த்தம் கொள்ளாதவனாய்ச் சைக்கிளில் இவன்.

கருவாட்டுக் கொட்டில்களைக் கடந்து ஐஸ் பக்டரி மூலையில் திரும்புகையில், புகையிலைக் கிட்டங்கிக்குக்கிட்ட 'செல்வநாயகம் மாமா' நிற்பது போலிருந்தது. சைக்கிள்கிட்ட வருகையில் அவர்தானென நிச்சயப்படுத்திக்கொள்கையில் 'செல்வநாயகம் வலை வீசினா, ஒண்டுந் தப்பாது.....' என்று அவர் சொல்லிய வசனமும் நினைவில் தட்ட, உதட்டில் கேலிச்சிரிப்பும் அரும்பியது.

அவரும் இவனையே பார்த்தபடி, ''தம்பி..... ஒரு விஷயம்.....'' என நிற்கும்படி சைகை காட்டவும், வேணுமென்று அவரைக் கடந்தபடி சைக்கிளை நிற்பாட்டினான்.

சைக்கிளை நிற்பாட்டிய இடத்திற்கு 'வண்டி' குலுங்க சிறிய ஓட்டத்தோடு அவரும் வந்தார்.

அவன் சைக்கிளை விட்டு இறங்காமலே இருந்தான்.

''தம்பி..... எமிலியூஸ் எல்லாம் சொல்லியிருக்கும்..... உம்மட விருப்பத்தச் சொல்லுமன்......''

இழுத்து இழுத்துக் குழைவாய்க் கதைத்தவர் ஆவலாய், பதிலை எதிர்பார்த்தவாறு நின்றார்.

இவனது பார்வை அவர்மேல் பதிந்தது. கழுத்தைச் சுற்றித் தொங்கிய இரட்டைப் பட்டுச் சங்கிலி 'வண்டி'யின் மேல் வளைவாய் விழுந்து கிடந்தது. ஒவ்வொரு கையிலும் மூன்றுவிரல்களில் மோதிரங்கள் மின்னின. உப்புத் தண்ணீரில் கால்படாமலேயே 'வாடி'யிலும் வீட்டிலும் நின்றபடி சுரண்டிச் சேர்த்த காசில் கொழுத்திருந்த, ஒரு வகைமாதிரிச் சம்மாட்டி....'

'இவங்கள் என்ன மனிசர்....... இவ்வளவு நாளும் காசு கண்ண மறச்சிட்டுது, இப்ப பெரிய அந்தரப்படுறேர்......'

எண்ணங்கள் பரவுகையில் கோபமும்..., வெறுப்பும் எழுந்துவர ஒன்றும் பறையாமல் நின்றான்.

'தூண்டல் கயிற்றை' 'மரக்கலில்' போட்டுத் தூக்கியபடி வந்த தோமாசும் அருள்சீலனும் சிரித்தபடி கடந்து சென்றபோதும், பதிலுக்குச் சுமுகமாய் அவனால் சிரிக்கவும் முடியவில்லை.

திடீரென 'இஞ்சின்போட்' ஒன்று 'ஸ்ராட்' எடுத்து தண்ணீரைக் கிழித்துச் சத்தமிட்டுச் சென்றது.

கொஞ்சத் தூரத்தில் 'விக்ரர் புட்டி'யருகில் கடலில், ஒற்றைப் பருந்து பதிவாய் வட்டமிட்டுக் கொண்டிருந்தது.

அவனுடைய மௌனத்தைச் சம்மதமென அவர் நினைத்தார் போலும். அவர் மெது மெதுவாய் முன்னேறினார்.

''தம்பி..... என்ர படவு காசெல்லாம் ஏன் புறத்தியிக்குள்ள போவான்..... 'பிறான்சிஸ்கா'வும் உம்மட மச்சாள்தானே......''

'புறத்திப் பெடியனெண்டா என்ர பங்கப் பிரி, அப்பிடியெண்டெல்லாம் சொத்துக்குக் கரச்சல் குடுப்பானெண்ட கவலை போல...'

'வீட்டயும் சரிவராது எண்டாப்போல, என்னை வளைக்க வருகினம்......'.

'காசயும் பெட்டயையும் காட்டினா, ஒரு இளந்தாரிப் பெடியன் ஓமென்பான் தானே எண்டு நினைச்சிற்றாங்கள் போல....'

மனதுள் இந்த நினைவுகள் எழும்ப 'என்ர சுயமரியாதையையே அவமதிக்கிறாங்கள்........' என்ற உணர்வும் தோன்ற, அடிமனதிலிருந்து மெல்ல மெல்லப் பெருகிவந்த ஆத்திரம் உடலெங்கும் பரவ விறைப்பாய் அவரைப் பார்த்தான்.

அவனது அந்த மாறிய பார்வையை அவர், எதிர்பார்க்கவேயில்லை! திகைப்பாய் அவனைப் பார்த்தார்.

'பொழுது பட்டுக்' கொண்டிருந்த 'பண்ணை'க் கடற்பக்கச் செவ்வானத்தின் பின்னணியில் அவன், மேலும் அச்சமூட்டுபவனாய் அவருக்குத் தெரிந்தான்.

அவனுடைய ஆத்திரம் வெளிப்பாய்ந்தது.

''இஞ்சேரும் நாங்க விசரரில்ல...... பத்து வருசமா திரும்பியும் பாராதவங்களோட, காசெண்டதும் பல்லக் காட்டிறதுக்கு வேற ஆரயும் பாருங்க......

நாங்க மனிசரத்தான் பாக்கிறம்......

எங்களுக்கு மானம் ரோசம் இருக்கு; உங்களப்போல, வெக்கங்கெட்டனாங்களில்ல.....''

சோழகத்தின் வீச்சில், 'பாலக்கட்டின்' மேலால் எழும்பியடித்த அலைத்தண்ணீர் ரோட்டை நனைத்து, வழிந்தது.

*(நன்றி:தொலைவும் இருப்பும், ஏனைய கதைகளும் - சிறுகதைத் தொகுதி)*

## சொற்சிலம்பம் - போட்டி இல: 49

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | | | 5 | 6 |
| 7 | | | | | 8 | | |
| | | 9 | | 10 | | | |
| 11 | 12 | | 13 | | | | 14 |
| | 15 | 16 | | | 17 | 18 | |
| 19 | | | | 20 | | 21 | |
| 22 | | | 23 | | | | |
| | | 24 | | | | 25 | |

அனுப்புபவர் பெயர்:..........................................

விலாசம்:..........................................

..........................................

கையொப்பம்:..........................................

### மேலிருந்து கீழ்

1. பொருத்தமான.
2. திட்டு/ வசைபாடு/ கண்டி/ குற்றம் சுமத்து.
3. இளம் பெண்களிடம் இளைஞர்கள் செய்யும் குறும்பும் இதற்குள் அடங்கும்.
4. நிறுவுதல்.
5. குரு.
6. குழந்தை/ மழலை.
8. படைத்தல் செய்பவன்.
10. உறுதியான/ கட்டியான என்பதைக் குறிக்கும்.
12. பாலியல் பலாத்காரம் செய்பவனும் இதற்குள் அடக்கம்.
14. எங்கும் போட்டி இதற்குத்தான்.
16. கணவன் - மனைவி.
18. ஆகாயம்.
19. மிதியடி/செருப்பு.
20. தாட்சண்யம்.
23. சீலை.

### இடமிருந்து வலம்

1. ஒரே நேரத்தில் பத்து விடயங்களைக் கவனிக்கக் கூடியவனுக்கு இந்தப் பெயர்.
5. பெரியோர் சிறியோருக்கு வழங்குவது.
7. காதுக்குள் சேர்ந்து தொல்லை தரும் அழுக்கு.
8. பேய்.
9. மகன்.
11. பொருந்தாத/கூடாத
13. சுவடு.
15. வியாபாரம் தொடங்க இது வேண்டும்/ பாடசாலைப் பிள்ளைகள் இந்த மாணவனாக/ மாணவியாக வரவே விரும்புவர்.
17. கும்பம் வைக்கத் தேவைப்படும் முக்கிய பொருள்.
19. பகுதி.
21. பாரம்.
22. இன்ப மகிழ்வு மறைந்தால் இது தானே வரும்.
24. அடர்த்தி/ நெருக்கம்.
25. சாப்பிடு.

★ வாசகர்கள் மத்தியில் குறிப்பாக மாணவ மாணவியர் மத்தியில் பொது உளச்சார்பு மற்றும் மொழி அறிவைவளர்த்துவிடத் தூண்டுவதே இப்போட்டி நடத்தப்படுவதன் முக்கிய குறிக்கோள்.

★ ஒவ்வொரு போட்டியிலும் ஏராளமான வாசகர்கள் ஆர்வத்துடன் கலந்துகொள்வதுடன், அவர்களில் பெரும்பாலானோர் முற்றிலும் சரியான விடைகளை அனுப்பி வருவதால் பரிசுக்கும் பாராட்டுக்கும் உரிய அதிஷ்டசாலிகள் குலுக்கல் முறைமூலம் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர்.

★ சொற்சிலம்பம் போட்டி இலக்கம்: 47 இற்கானசரியான விடைகள் வருமாறு:

இடமிருந்து வலம்

(1)விநோதம் (4)கபோதி (7)சான்று (8)அவலம் (9)புதல்வர் (11)தாச்சி (12)கவி (14)அரசி (16)வதிவிடம் (18)ஏழு (19)யாம் (20)தாகம் (21)பாரதி (22)களிம்பு

மேலிருந்து கீழ்

(1) விசா (2) நோன்பு (3) தறுதலை (4) கவர்ச்சி (5)போல (6)திம்பு (8) அவதாரம் (10)அகவற்பா (13) விதி (14) அடம் (15) தழும்பு (17)வியாதி (18)ஏகம் (20)தானி

★ சொற்சிலம்பம் போட்டி தொடர்பான வாசகர்களது ஆலோசனைகளும் கருத்தில் எடுக்கப்படும்.

★ சொற்சிலம்பம் போட்டி இலக்கம்:47 இற்கான சரியான விடைகளை எழுதி அனுப்பியவர்களில் குலுக்கல்மூலம்தேர்ந்தெடுக்கப்பட்ட முதல் மூன்று அதிர்ஷ்டசாலிகளது பெயர் விவரங்கள் வருமாறு:

**1 ஆம் பரிசு**
*ச.வரதலிங்கம்,*
*கந்தையா வீதி,*
*கோவிற் குடியிருப்பு,*
*சாவகச்சேரி.*

**2 ஆம் பரிசு**
**ப.யூடித் றெக்ஷனா,**
*இல.33, கோயில் வீதி ஒழுங்கை,*
*சுண்டுக்குளி,*
*யாழ்ப்பாணம்.*

**3 ஆம் பரிசு**
**ஜே.கொலஸ்ரின்,**
*மடத்தடி, பலாலி வீதி,*
*உரும்பிராய்.*

**பரிசில் பெறுவோருக்கான பணம் காலக்கிரமத்தில் அவர்களது முகவரிக்கு காசோலையாகப் பதிவுத் தபாலில் அனுப்பி வைக்கப்படும்.**

## போட்டி விதிகள்

1. *வாசகர் எவரும் சொற்சிலம்பம் போட்டியில் கலந்து கொள்ளலாம்.*
2. *ஒருவர் எத்தனை கூப்பன்களையும் நிரப்பி அனுப்பலாம்*
3. *உதயனில் பிரசுரமாகும் கூப்பன்களே போட்டிக்கு ஏற்கப்படும்.*
4. *போட்டி தொடர்பாக ஆசிரியரின் தீர்ப்பே முடிவானதாகும்.*
5. *வெற்றி பெறும்முதல் மூன்று பேர்களுக்கு முறையே ரூபா 250/=, ரூபா 150/=, ரூபா 100/= பணப் பரிசில்கள் வழங்கப்படும்.*

*அத்துடன் பாராட்டுப்பெறும் ஐந்து அதிஷ்டசாலிகளது பெயர் விவரங்களும் உதயனில் பிரசுரிக்கப்படும்.*

6. *பூர்த்தி செய்யப்பட்ட கூப்பன்கள்,*

*சொற்சிலம்பம் போட்டி இல. 49*
*நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்) லிமிட்டெட்,*
*இலக்கம் 361,கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.*

*என்ற முகவரிக்கு எதிர்வரும் புதன்கிழமைக்கு அடுத்துவரும் புதன் கிழமைக்கு முன்னர் (04.03.2009) திகதிக்கு முன்னர் கிடைக்கத்தக்கதாக அனுப்பி வைக்கப்படவேண்டும். தபாலட்டையிலும் ஒட்டி அனுப்பிவைக் கலாம்.*

7. *சொற்சிலம்பம் போட்டி இல. 49 இல் வெற்றிபெறுவோர்களது விவரம் 08.03.2009 ஞாயிறு உதயனில் பிரசுரிக்கப்படும்.*

### பாராட்டுப் பெறுவோர்

(1)சி.இளங்கோராசன்,
சம்மட்டியோலை உடுவில் வீதி,
மானிப்பாய் வடக்கு,
மானிப்பாய்.

(2)செல்வி தேனுகா செல்வரட்ணம்,
ஏழு கோயில் வீதி,
ஏழாலை மத்தி, ஏழாலை.

(3)செல்வி தங்கலோஜினி அப்புத்துரை,
சங்குவேலி தெற்கு,
மானிப்பாய்.

(4)உமாசுதன் சசிகலா,
நாராயணன் வீதி, கோண்டாவில் கிழக்கு,
கோண்டாவில்.

(5) செல்வி ப.கோபிகா,
தரம் 9F, யா/வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை, யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முல்லை மக்களை மீட்கும் மேற்குலகத் திட்டம்

முல்லைத்தீவில் கட்டவிழும் மனிதப் பேரவலம் குறித்தும், அங்கு தினசரி நூற்றுக் கணக்கில் தமிழ் மக்கள் கொத்துக் கொத்தாகக் கொலையுண்டு, காயமுற்று அந்தரிப்பது பற்றியும் சர்வதேச ஊடகங்கள் அதீத மௌனம், காக்கின்றன. அங்கொன்றும் இங்கொன்றுமாக மேலோட்டமான செய்திகள் வெளியானா லும் கூட, ஒட்டு



மொத்தமாகப் பார்க்கை யில், உலக சமுதாயத்தையே உலுப்ப வேண் டிய இந்த மனிதப் பேரழிவுக் கொடூரம் சத்தம், சந்தடியின்றி - தங்கு தடையின்றி - தொடர்கின்றது என்பதுதான் உண்மை; யதார்த்தம்.

ஆனாலும் சர்வதேசத்தின் கருத்து நிலைப்பாட்டைத் தீர்மானிக்கும் வல்லாதிக்க சக்திகளின் கண்களில் இந்தக் கோரம் - கொடூரம் - படவேயில்லை என்று கூறுவது முற்றிலும் தவறு.

உலகின் எங்கோ ஒரு மூலையில் காட்டுப் பாதையில் வேகமாகச் சென்று கொண்டிருக்கும் ஒரு மோட்டார் சைக்கிள் ஓட்டியின் கையில் உள்ள மணிக்கூடு காட்டுகின்ற நேரத்தை, பல்லாயிரம் மைல்களுக்கு அப்பால் ஏதோ ஒரு தேசத்தின் தலைநகரில் இருந்தபடி நோட்டம் விடக் கூடிய நவீன தொழில்நுட்ப வசதிகளைக் கொண்ட வல்லாதிக்க சக்திகளுக்கு முல்லைத்தீவில் அரங்கேறும் கொடூரத்தை அப்பட்டமாகப் படம் பிடித்துக் கொள்வதும் அறிவதும் அப்படி ஒன்றும் கஷ்டமான காரியமே அல்ல.

வேண்டுமானால், கொழும்பிலோ, யாழ்ப்பாணத்திலோ இருந்து கொண்டு



தனது பத்திரிகைக்குச் செய்தியை வடிவமைக்கும் ஓர் ஊடகவியலாளனுக்கு - தமிழ்ப் பத்திரிகையாளனுக்கு - முல்லைத் தீவில் கொத்துக் கொத்தாக அப்பாவித் தமிழ் மக்கள் கொல்லப்படுவதற்குக் காரணமான ஆட்லறிகளை, பல்குழல் ஏவுகணைகளை, விமானக்குண்டு வீச்சுக்களை நடத்தும் சூத்திரதாரிகள் யார் என்பதை வெளிப்படையாகக் குறிப்பிட்டு அம்பலப்படுத்துவது இயலாத காரியமாக இருக்கலாம். அல்லது அந்த உண்மையை அப்படி வெளிப்படையாகக் குறிப்பிடப் போனால் விசாரணைகள், கேள்விகள் என்று விபரீதங்களை அவன் எதிர்நோக்க நேரிடலாம்.

ஆனால், அத்தகைய ஊடகவியலாளர்களின் எழுத்துகளுக்கு அவசரகாலச் சட்ட விதிகளின் கீழ் தடை வைத்துவிட்டாலும் -

அல்லது மேற்குலக வல்லாதிக்கப் பிடி யின் நலனை முன்னிறுத்திச் செயற்படும் சர்வதேச ஊடகங்களும் வலையமைப்புகளும் இந்தக் கோரக் கொடூரத்தைப் பற்றிய செய்திகளைப் புறக்கணித்து, உதாசீனம் செய்து, அக்கொடூரங்களின் சூத்திரதாரிகள் பற்றிய உண்மைகளை மூடிமறைத்தாலும் கூட -

இந்தக் கொடூரங்கள் பற்றிய உண்மைகள், களநிகழ்வுகள், யதார்த்தப் புறநிலை என்பன சர்வதேச சமூகத்தின் கருத்து நிலைப்பாட்டை உருவாக்குகின்ற சக்திகளாக அமையும் வல்லாதிக்க நாடுகளுக்குத் தெரியாமல்




போய்விடுவதில்லை. அங்குலம் அங்குலமாக அரங்கேறும் கொடூரங்கள் பற்றிய விவரங்களை அவை நன்கு அறிந்து கொண்டேயிருக்கின்றன.

'பயங்கரவாதத்திற்கு எதிரான போர்' என்ற பெயரில் இந்த யுத்தம் முன்னெடுக் கப்படுவதாலும் -

அரசு அல்லாத ஓர் அமைப்பான (Non State Factor) விடுதலைப் புலிகள் இயக்கத்துக்கு எதிராக இலங்கை அரசு (State Factor) முன்னெடுக்கும் யுத்தம் இது என்ற பின்புலத்தில், ஒரு நாட்டுடன் மற்றைய நாடு (State to State) தொடர்பு படும் விவகாரமாக இது மேற்குலகு உட்பட்ட நாடுகளில் கருதப்படுவதாலும் -

'தேசங்களின் இறைமை' பற்றிய சர்ச்சை இவ்விவகாரங்களில் சிக்குண்டு கிடப்பதாலும் -

இந்த மனிதப் பேரவல நிலைமை குறித்து அமுக்கி வாசிக்கின்ற - அல்லது பக்கச் சார்பான - அதுவும் இலங்கை அரசுக் குச் சார்பான - கருத்து நிலைப்பாட்டை வெளிப்படுத்தும் போக்கில் சர்வதேச சமூ கம் இவ்விடயத்தை அணுகி வருகின்றது.

முல்லைத்தீவில் தினசரி பல நூறு பேர் கொல்லப்படுவதையும், படுகாயப்படுவதை யும் கவனத்தில் எடுத்து அதற்குக் காரண மான தாக்குதல் தரப்பைக் கண்டிக்க மறுக் கும் சர்வதேச சக்திகள், அங்குள்ள மக்களைப் புலிகள் மனிதக் கேடயங் களாகச் சிறைவைத்துத் தடுத்திருப்பதனா லேயே அங்கு இந்த விபரீதப் பேரவல [illegible] ஏற்பட்டிருப்பதாக [illegible] சுமத்துகின்றன.

இப்படிப் புலிகள் மீது தாங்கள் சுமத்தும் குற்றச்சாட்டு உண்மையானதா, நீதியானதா என்பதைக் கூட ஆராய்ந்து பார்க்க முயலாமல் -

ஒரு புறம் பேரிழப்புக்குக் காரணமான தாக்குதல்களை நடத்தும் தரப்பின் போக்கை நியாயப்படுத்திக் கொண்டு -

மறுபுறம் ஒருதலைப்பட்சமாகப் புலிகள் மீது குற்றம் சுமத்துவதில் இந்தத் தரப்புகள் தீவிரமாகவும் உறுதியாகவும் உள்ளன.

அமெரிக்கா, ஜப்பான், நோர்வே, ஐரோப்பிய ஒன்றியம் உள்ளிட்ட இணைத் தலைமைகளாகட்டும், அயல் வல்லாதிக்க சக்தியான இந்தியாவாகட்டும், இன்றைய நிலையில் ஒரு கருத்து நிலைப்பாட்டில் ஒன்றுபட்டு ஒரே கோணத்தில் சிந்தித்து

**- சிவராம் -**

நிற்கின்றன.

விடுதலைப் புலிகளின் காலம் நெருங்கிவிட்டது என்பதுதான் அது. நாள் கணக்கோடு - அல்லது வாரக் கணக்கோடு - புலிகள் அமைப்பின் கதை முடிந்து விடுவது உறுதி என அவை திடமாக நம்புகின்றன.

எனவே, இலங்கை அரசுப் படைகளின் தீவிர நெருக்குவாரத்தில் சிக்கி அழியப் போகின்ற புலிகள் அமைப்புக் குறித்து அலட்டிக் கொள்ளாமல் புலிகளின் கட்டுப் பாட்டில் எஞ்சியுள்ள குறுகிய பிரதேசத்தில் சிக்கியிருக்கின்ற தமிழ் மக்களை விடுவிப்போம் என்ற முயற்சியில் கொழும்பில் உள்ள மேற்குலக நாடுகளின் மூத்த இராஜதந்திரி கள் சிலர் ஒன்று சேர்ந்து ஒரு திட்டம் தயாரித்திருக்கின்றார்கள் எனத் தெரியவரு கின்றது.

இலங்கை அரசுத் தலைமையுடன் சுமார் ஒரு வார காலம் பலசுற்றுப் பேச்சுக்களை - பலத்த சிரத்தை எடுத்து - மேற்கொண்டதன் விளைவாக இந்தத் திட்டத்தைத் தங்களால் உருவாக்க முடிந் தது என்று பெருமூச்சுவிடும் அந்த ராஜதந் திர வட்டாரங்கள், அத்திட்டத் துக்கு புலிகளின் ஒத்துழைப்பைத் தேடிப் பெற ஆலாய்ப்பறக்கின்றன எனவும் தெரிகின்றது.

இத்திட்டத்தின் படி - விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டில் உள்ள முல்லைத்தீவுப் பிரதேசத்துக்குள் செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவின் விசேட அணிகள் சென்று தங்கி, அங்கிருந்து அரசுக் கட்டுப்பாட்டுப் பகுதிகளுக்கு வரவிரும்பு வோரின் பெயர், விவரங்களைப் பதிந்து பட்டியல் தயாரித்து அவர்களை கடல் மார்க்க மாகவோ, வேறு வழியாகவோ அரசுக் கட்டுப் பாட்டுப் பகுதிகளுக்குக் கூட்டிவரும்.

அப்படி வருபவர்களில் புலிகளின் முன்னாள் உறுப்பினர்கள், அவர்களின் [illegible]கள், புலிகள் இயக்கத் [illegible]றி அதைத் துறந்தவர்கள் போன்றோரா கூட இருக்கலாம். ஆனால், அவர்களுக்கு எதிராகச் சட்டவிரோத நடவடிக்கைகளோ, காணாமற்போகச் செய்யப்படுதல் மற்றும் சட்டத்துக்கு முரணான முறையில் கொல்லப்படுதல் போன்ற விபரீதங்களோ இடம் பெறாமல் இருப்பதை செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவும், மேற்குலகமும் உறுதிப்படுத்தும் என்ற உறுதிமொழி வழங்கப்படும்.

இதுதான், கொழும்பில் உள்ள மேற்குலக இராஜதந்திரிகள் ஒன்று சேர்ந்து


கோடன் பிரவுணி

வகுத்திருக்கும் திட்டம். இதற்கு இலங்கை அரசுத் தலைமையின் இணக்கத்தையும் தாங்கள் பெற்றிருக்கின்றனர் என அந்த இராஜதந்திரி கள் கூறுகின்றனர்.

இத்திட்டம் குறித்து புலிகளின் தலைமைக்குத் தெரியப்படுத்தி அவர்களின் இணக்கத்தையோ, பதிலையோ விரைந்து பெற்றுக் கொள்வதற்காகப் பல்வேறு தொடர்பாடல் தரப்புகள் மூலம் தீவிர முயற்சி எடுக்கின்றனர் அந்த இராஜதந்திரிகள் என்றும் தெரிகின்றது.

இத்திட்டத்தைப் புலிகள் கவனத்தில் எடுப்பார்களா? பரிசீலிப்பார்களா? - என்பவையெல்லாம் வேறு விடயங்கள்.

ஆனால், அத்திட்டமே தன்பங்குக்குப் பல ஓட்டைகளைக் கொண்டுள்ளது என்பதுதான் பெரும் துரதிஷ்டம்.

ஏற்கனவே இலங்கை அரசிடம் பயங்கரவாதத் தடுப்புச் சட்டம், அவசர காலச் சட்ட விதிகள் என்ற கொடூர சட்ட ஏற்பாடுகள் கைவசம் உள்ளன.

புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிகளில் இருந்து, இப்படி மேற்குலக இராஜதந்திரிகளின் ஏற்பாட்டுத் திட்டத்துக்கு அமைய வெளியே வரும் தமிழ் மக்களுக்கு எதிராக இத்தகைய கொடூர விதிகளை சட்டத்தின் பெயரால் கொழும்பு ஏவிவிட்டு - சட்ட ரீதியான ஏற்பாடு என்ற பெயரில் - அவர்களை வேறு காவல்களுக்கு மாற்றி, ஆயுள் தண்டனை போன்ற கொடூரங் களையும், நீண்டகால சிறை வைப்புச் சித்திரவதைகளையும் ஏவிவிட்டால், அத்தகைய மீறல்களை இந்த மேற்குலக வட்டாரங்களால் தடுக்கமுடியுமா என்பது பெரிய கேள்வி.

அது மட்டுமல்ல, புலிகளின் பகுதிகளில் இருந்து இந்தத் திட்ட ஏற்பாட்டிற்கு அமைய வெளியே வரும் மக்களின் எதிர்காலம் குறித்து - உயிர்பாதுகாப்பு உறுதியைத் தவிர வேறு எதுவுமே - இத்திட்ட ஏற்பாட்டாளர்களிடம் இல்லை.

அத்தோடு, இத்தகைய திட்டம் ஒன்றை பிரேரிக்க முற்படும் இந்த இராஜதந்திரிகள், ஏற்கனவே புலிகளின் பிரதேசத்திலிருந்து வெளியே வந்து அரசுப் படைகளினால் பல்வேறு மையங்களில் - 'நலன்புரி நிலையங்கள்' என்று அமைக்கப்படும் இடங்களில் - சிதறடிக்கப்பட்டு, பேரவலத்தைத் தொடர்ந்து எதிர்கொண்டு நிற்கும் சுமார் முப்பதாயிரம் தமிழர்களின் உயிர்ப்பாது காப்பு மற்றும் எதிர்காலம் குறித்து ஏதே னும் ஆக்கபூர்வமான நடவடிக்கைகளை எடுத்து வெளிப்படுத்திக் காட்டியிருக்கின் றார்களா என்றால் இல்லை என்பதே பதில்.

அப்படிச் செய்து, முன்னுதாரணம் காட்டி, தாங்கள் அளிக்கும் உறுதி மொழியின் வலுக்குறித்து மேற்படி மேற்குலக இராஜதந்திரிகள் நிரூபணம் செய்வார்களா யின் இத்தகைய உத்தேச திட்டம் குறித்து பரிசீலிப்பதில் ஏதேனும் அர்த்தம் இருக்கக் கூடும்.

அப்படி ஏதும் செய்யாமல், புலிகளோடு இருக்கும் பொதுமக்களை அவர்களிடமிருந்து - அவர்களின் பிரதேசத்திலிருந்து - தந்திரோபாயமாகப் பிரித்தெடுத்து, புலிகளைத் தனிமையில் சிக்க வைத்து, புலிகளையும் அழித்து, அந்த மக்களையும் நட்டாற்றில் விட்டு பேரவலப்பட வைப்பதுதான் மேற்படி மேற்குலக இராஜதந்திரிகள் குழுவின் குள்ளநரித் திட்டம் என்றால் அந்தப் பருப்பு இங்கு இலகுவாக அவியாது என்றுதான் கருதவேண்டி உள்ளது. *

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*(Continued from Page 05)*

5. Results of G.C.E. (A/L) Examination 2007

| | | | |
|---|---|---|---|
| Index No. | | District | |
| Z score | | Contact Telephone No. | |

Subjects offered & Grades (indicate grade in cage appearing against the respective subject).

| | | | |
|---|---|---|---|
| Higher Mathematics | | Mathematics/Combined Mathematics | |
| Physics | | Chemistry | |
| Accounting | | Business Statistics | |
| Economics | | Business Studies | |
| Biology | | Geography | |
| Logic & Scientific Method | | Latin | |
| Sanskrit | | Music (Oriental, Carnatic, Western) | |

6. G.C.E. (O/L) Examination

| Results for | | Grade | Year |
|---|---|---|---|
| | Mathematics | | |
| | English | | |

7. Courses of Study applied for University Admission (in the order of preference indicated in the application submitted to the University Grants Commission):

1.…………………… 2.…………………… 3.……………………

4.…………………… 5.…………………… 6.……………………

8. Preferred Examination Centre (Please use √ symbol)

| | |
|---|---|
| Colombo | |
| Mihintale | |
| Kandy | |
| Vavuniya | |
| Jaffna | |

9. Documents to be attach d (Please indicate the documents attached with the application form by using (√ ) symbol in the relevant boxes below).

1. Cash paying-in-slip
2. Certified copy of G.C.E. (A/L) 2008 Examination results
3. Certified copy of G.C.E. (O/L) Examination results
4. Certified copy of National ID card or postal ID Card
5. Affidavit in support of change in names appearing in different documents / certificate, if any.

I certify that the above particulars submitted by me are true and accurate.

……………………

Signature of Applicant (C/557225) Date:……………………

# சைவ சமய அறிவுப் பரீட்சை இன்று

யாழ்ப்பாணம், பெப்.22

வண்ணை- சாந்தையர்மடம் ஸ்ரீ கற்பக விநாயகர் கோயில் சைவசமய அபிவிருத்திக்கழகம் நடத்தும் சைவசமய அறிவுப் பரீட்சை இன்று ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணி முதல் நடைபெறும்.

இப்பரீட்சைக்கென யாழ்.இந்துக் கல்லூரி, கோப்பாய் நாவலர் தமிழ் வித்தியாலயம், யாழ்.இந்து ஆரம்பப்பாடசாலை, இராமநாதன் கல்லூரி, புத்தூர் சோமஸ்கந்தக் கல்லூரி, காரைநகர் கலாநிதி ஆ. தியாகராஜா மத்திய மகா வித்தியாலயம், தெல்லிப்பழை யூனியன் கல்லூரி, சங்கானை சிவப்பிரகாச மகாவித்தியாலம், வட்டு. இந்துக்கல்லூரி, அச்சுவேலி புனித தெரேசாள் மகளிர் கல்லூரி, நயினாதீவு ஸ்ரீ கணேசா கனிஷ்ட மகாவித்தியாலயம், இணுவில் இந்துக் கல்லூரி, தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி, நயினாதீவு மகா வித்தியாலயம், சாவகச்சேரி மகளிர் கல்லூரி ஆகிய 15 பரீட்சை நிலையங்கள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன.

தரம் 3 தொடக்கம் தரம் 13 வரையில் நடைபெறும் இப்பரீட்சைக்கு யாழ்.மாவட்டத்திலிருந்து 3,300 பரீட்சார்த்திகள் தோற்றவுள்ளனர். இவர்களுக்கான அனுமதி அட்டைகள் யாவும் பரீட்சார்த்திகள் கல்வி கற்கும் பாடசாலைகளுக்கும், தனிப்பட்ட பரீட்சார்த்திகளுக்கு தபால் மூலமும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன என சைவசமய அபிவிருத்திக் கழக பரீட்சைச் செயலர் சு.சிறீகாந்தன் அறிவித்துள்ளார். (202-9)

# மரம் நடுகைத் திட்டம்

கோப்பாய்.பெப்.22

தேசிய மர நடுகைத் திட்டத்தின் கீழ் வலி.கிழக்க பிரதேச செயலர் பிரிவில் 'சிஸ்ஏ' அமைப்பினால் மர நடுகைத் திட்டம் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

இதன்கீழ் கிராம அபிவிருத்திச் சங்கம், மகளிர் கிராம அபிவிருத்திச் சங்கம் ஆகியவற்றின் மூலம் இப் பிரதேசத்தின் பல்வேறு பொது இடங்களில் பயன்தரு மரக் கன்றுகள் பல நாட்டப்பட்டு பராமரிக்கப்பட்டு வருவது குறிப்பிடத்தக்கது. (202-72)

# சொற்பொழிவு

வடமராட்சி வல்லிபுர ஆழ்வார் ஆலயத்தின் வடக்கு வீதியில் அமைந்துள்ள பெரியாழ்வார் ஆச்சிரமத்தில் பிரதி ஞாயிற்றுக்கிழமை தோறும் நடைபெற்று வரும் வாராந்த நிகழ்வில் இன்று ஞாயிற்றுக்கிழமை "வல்லிபுரம்" என்னும் தலைப்பில் சொற்பொழிவு இடம்பெறவுள்ளது.

இந்தச் சொற்பொழிவை மணற்காடு றோமன் கத்தோலிக்க தமிழ்க் கலவன் பாடசாலையின் ஆசிரியர் பி. பாலமுரளி நிகழ்த்தவுள்ளார்.(202-78)


# வாழும் கலைப் பயிற்சி

**ART EXCEL பயிற்சி**
*(8முதல் 14 வயதுடைய குழந்தைகளுக்கு)*

**YES பயிற்சி**
**(Youth Empowering Seminar)**
*(14 முதல் 18 வயதுடையவர்களுக்கு)*



(பிராணாயாமம், பாஸ்கிரிகா, சுதர்ஸன கிரியா எனும் சிறப்பு மூச்சுப் பயிற்சி, மிக இலகு யோகாசானம் உள்ளடக்கியது)

- எதிர்கால முன்னேற்றத்திற்கு பயத்தையும் கூச்சத்தையும் போக்கிட
- தெளிந்த மனம் பெற்றிட குழந்தைகளின் திறமைகளை வெளிக்கொணர
- தன்சக்தி அறிந்து ஆன்மீக வழியில் செவ்வனே பணிசெய்ய நோய்களில் இருந்து விடுபட

இடம் : கம்பன் கோட்டம் நல்லூர்
காலம் : 22.02.2009 பி.ப. 3.30 மணிக்கு அறிமுகஉரை
நேரம் : Yes - 23.02.2009 காலை 9.30
Artexcel - பி.ப. 2 மணி - பி.ப. 3.30

குறிப்பு : ஏற்கனவே பயிற்சி எடுத்தவர்களுக்கு இன்று காலை 8 மணிக்கு சுதர்சன கிரியா நடைபெறும்.

(82319) 077 2269804, 077 [illegible]






அன்பு கொண்ட அன்னையுன்னைத் தொழுகின்றோம்
அவனிதன் உருகக் கதறுகின்றோம்
துணையவன் பிரியா வாழ்வு தன்னில் ஒரு கணமே!
துயர் தன்னைத் தந்து தொலைதூரம் சென்றதேனோ?
சிந்தைகள் பல விதைத்து விட்டீர்
சிந்தையிலே நீயிருந்து சிறப்புடனே வாழ வைத்தீர்!
சுற்றமெல்லாம் சொந்தமென்று வாழ்ந்தீரோ!
இன்று
அன்னை என்ற சொந்தமிழந்து தவிக்கின்றோமே
மாதம்மொன்றோ ஜென்மமோ சென்றாலும்
மனதினிலே உன் நினைவுகள் நீங்கா!

23.01.2009 அன்று சிவபதமெய்திய எமது அன்புத் தாயின் இறுதிச் சடங்கில் கலந்து கொண்ட உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் எமது உளம் கனிந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம். அன்னாரின் வீட்டுக்கிருத்திய நிகழ்வுகள் இன்று (22.02.2009) ஞாயிற்றுக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெறும். அத்தருணத்தில் தாங்களும் கலந்து ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் பங்குகொள்ளும் வண்ணம் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

**பேரம்பலம் குடும்பத்தினர்**

T.C.லேன்,
மானிப்பாய்.

தொடர்புகளுக்கு: ஜெயராஜசிங்கம் -00441922722584
திரு. திருமதி தெய்வேந்திரம் -00492871487550
திரு.திருமதி துரைரட்ணம் -0041412600483


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Cipla Citihealth
# (சிப்லா - சிற்றி ஹெல்த்)
# Caring For Life
# (உயிரைப் பாதுகாத்தல்)



## மருந்து விற்பனை சந்தையில் வெற்றிடங்கள்

(Vacancies in Pharmaceutical Marketing)

சிப்லா-சிற்றி ஹெல்த் என்பது இலங்கையில் மருந்துப் பொருள்கள் விற்பனை சந்தையில் பிரபலமான பெயராக விளங்கத் தொடங்கியுள்ளது. தரமான மருந்துகளை இயலக்கூடிய விலைகளில் வழங்குபவர்களாக எமது நிறுவனம் முன்னிலையில் வைத்துக் கணிக்கப்படுகின்றது.

வடக்கில் சந்தைப்படுத்தல் செயற்பாடுகள் விஸ்தரிக்கப்பட்டுள்ளதையடுத்து வடமாகாணத்தில் பணிபுரிவதற்காக பின்வரும் பதவிகளுக்கு தகுதியானவர்களை நாம் எதிர்பார்க்கின்றோம்.

**1. மருத்துவ பிரதிநிதிகள்** (Medical Delegates)

பிரபலமான மருந்து விற்பனை நிறுவனத்தில் இதேவிதமான பதவியில் குறைந்தது ஒருவருட அனுபவமுள்ளவர்கள் விண்ணப்பம் செய்யலாம்.

விஞ்ஞானத்துறையில் கல்வி அறிவுள்ள 30 வயதுக்குட்பட்டவர்களுக்கு முன்னுரிமை கொடுக்கப்படும். தெரிவுசெய்யப்படும் விண்ணப்பதாரி கொழும்பிலுள்ள பிரதம காரியாலயத்தில் ஆரம்ப நிலைப் பயிற்சியின் பின்னர் மனிதருக்கான மற்றும் விலங்குகளுக்கான மருந்துகள் விற்பனை மேம்படுத்தும் துறையில் ஈடுபடுத்தப்படுவர்.

**2. பயிலுநர் மருத்துவ பிரதிநிதி** (Trainee Medical Delegates)

விஞ்ஞான பின்னணியுடனான உயர்தர வகுப்பு தகுதியுடையவர்கள் உயிரியல் மற்றும் இரசாயனவியல் விரும்பத்தக்கது-விண்ணப்பம் செய்யலாம். மேலும் அவர்கள் வடமாகாணத்தில் நிரந்தரமாக வசிப்பவர்களாக இருத்தல் வேண்டும்.

**3. மருந்துகள் மற்றும் விலங்கு மருந்துகள் விற்பனை பிரதிநிதிகள்**

(Pharma & Veterinary Sales Representatives)

மருந்துகள் விற்பனையில் குறைந்தது ஒருவருட அனுபவமும் மருந்து சில்லறை வியாபாரிகள் மற்றும் ஆஸ்பத்திரிகளுடன் நெருங்கிய தொடர்பும் உள்ளவர்கள் க.பொ.த.சாதாரண தர தகுதியும் கணிதத்தில் திறமைச் சித்தியும் பெற்றவர்கள் விண்ணப்பிக்கலாம். 30 வயதுக்குட்பட்டவர்கள் விரும்பத்தக்கது.

The Director
*Citihealth Imports (Pvt) Ltd*
29/3, Kirimandala Mawatha,
Nawala,
Rajagiriya

என்ற முகவரிக்கு citi@citihealth.lk என்ற முகவரிக்கு விண்ணப்பங்களை மின்னஞ்சல் மூலம் அல்லது 011- 4412055 என்ற முகவரிக்குத் தொலைநகல் அனுப்பலாம் அல்லது இந்த விளம்பரம் வெளியாகி 2 வாரங்களுக்குள் தபாலிலும் விண்ணப்பிக்கலாம்.

# வட பிராந்தியத்தில் அதிகாரம் பெற்ற விநியோகிப்பாளர்களுக்கான வெற்றிடங்கள்
## (VACANCIES FOR AUTHORIZED DISTRIBUTORS IN NORTHERN REGION)







சிற்றி ஹெல்த் இம்போற்ஸ் (தனியார்) வரைவுள்ள நிறுவனமாகிய நாம் மனிதருக்கும் விலங்குகளுக்குமான மருத்துவப் பொருள்கள், நோய்த் தடுப்பு மருந்துகள் மற்றும் மருத்துவக் கருவிகளை இறக்குமதி செய்வதில் முன்னணி வகிப்பவர்களாவோம். எமது நிறுவனம் நாடு முழுவதுக்கும் விநியோகத்துக்கான விரிவான வலைப் பின்னலைக் கொண்டுள்ளது.

இந்தியா, பங்களாதேஷ் மற்றும் பாகிஸ்தான் ஆகிய நாடுகளிலுள்ள பின்வரும் பிரதான நிறுவனங்களுடன் தொடர்புகளைக் கொண்டுள்ளோம் என்பதை பெருமையுடன் அறியத்தருகின்றோம்.

1. சிப்லா நிறுவனம் இந்தியா
2. சீரம் இன்ஸ்டிட்யூட் ஒப் இந்தியா லிமிட்- இந்தியா
3. இந்துஸ்தான் சிறிஞ்சஸ் மெடிக்கல் டிவைசஸ் லிமிட் இந்தியா
4. வெங்கடேஸ்வரா ஹச்சரிஸ் லிமிட் இந்தியா

மேலும் வட மாகாணத்தில் எமது விநியோகத்தை விஸ்தரிப்பதற்கு பின்வரும் தேவைகளை பூர்த்திசெய்யக்கூடிய விநியோகஸ்தர்களை எதிர்பார்க்கின்றோம்.

1. வடமாகாணத்தின் எல்லா மாவட்டங்களிலும் மருந்துப்பொருள்களை சந்தைப்படுத்துவதில் குறைந்தது 2 வருட அனுபவம்.
2. தடுப்பு மருந்துகளை வைத்துப் பேணுவதற்கான குளிர்சாதனங்களுடனான களஞ்சிய வசதி
3. வீதிகளில் பயணம் செய்யும் தகுதியுடையதும் அலுமினியச் சட்டங்களைக் கொண்டதுமான வாகன வசதி.
4. வங்கி மூலமான உத்தரவாதம் வழங்கக்கூடிய தகுதி

**விருப்பமுள்ளவர்கள்**

Director
*Citihealth Imports (Pvt) Ltd*
29/3, Kirimandala Mawatha,
Nawala
Rajagiriya

என்ற முகவரிக்கு இந்த விளம்பரம் வெளிவந்த 10 நாள்களுக்குள் citi@citihealth.lk GBÓ முகவரிக்கு மின்னஞ்சல் செய்யவும். அல்லது 011- 4412055 என்ற இலக்கத்திற்கு தொலைநகல் செய்யவும். அல்லது தபாலில் விண்ணப்பம் செய்யவும்.

POONAWALLA GROUP

Cipla
Caring for life

A VH Group Company

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவில்வலும்



தோற்றம் 03.05.1938

மறைவு 23.01.2009

### அமரர் துரையப்பா பரமகுருநாதன்

கடந்த 23.01.2009 வெள்ளிக்கிழமை அன்று சிவபதம் அடைந்த எமது குடும்ப விளக்கு துரையப்பா பரமகுருநாதன் அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் இன்று (22.02.2009) ஞாயிற்றுக்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும். அத்தருணம் தாங்கள் அனைவரும் அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து இடம்பெறும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

மேலும் அன்னாரின் இறுதிக்கிரியைகளில் கலந்துகொண்டு பல வழிகளிலும் உதவி புரிந்தோருக்கும் அனுதாபச்செய்தி அனுப்பியோருக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

நினைவுடன்:
அ.டர்ச்சனா (பேர்த்தி).
சில்லாலை தெற்கு,
பண்டத்தரிப்பு.

(82931)

## மரண அறிவித்தல்

### கிறிஸ்து இராயப்பு (ஓய்வுபெற்ற ஆசிரியர்)




பலாலியைப் பிறப்பிடமாகவும் போயிட்டி சிந்திப்பந்தலை வசிப்பிடமாகவும் கொண்ட கிறிஸ்து இராயப்பு (ஓய்வுபெற்ற ஆசிரியர்) 20.02.2009 வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கலித்து - ஆனாசி தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்ற செல்லையா ஞானப்புவின் மருமகனும் காலஞ்சென்ற சந்தலூசியா (செல்வம்)வின் அன்புக் கணவரும் மல்லிகா, இராஜகுமார் (கிறிஸ்), இராசாகுமாரி, சுகுமாரி, விஜயசிறி (கனடா) ஆகியோரின் பாசமிகு தந்தையும் வரதன், புஷ்பா, காலஞ்சென்ற ரயிற்றஸ், துரைரட்ணம், ஜெயசிங்கம் ஆகியோரின் பாசமிகு மாமனும் சுஜீவ் (டோகா), றஜீவ் (டோகா), ஜெகஜீவ் (டோகா), வேஜின், அஜீவ், சுஜீவா (கொழும்பு), கபிலஸ், லக்சிகா, புறூட்டஸ், வேறட், கீர்த்திகா, சுசந்திகா, வியாட், வர்ணன் (கொழும்பு), விப்லன், யபிதா, தர்ஷா (கனடா), கரிஸ் (கனடா), றொக்சன் (கனடா) ஆகியோரின் பாசமிகு பேரனுமாவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை பின்னர் அறிவிக்கப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

போயிட்டி,
இளவாலை.
(சி/557228)
தகவல்:
பிள்ளைகள்,
மருமக்கள்.

## மரண அறிவித்தல்



விண்ணகப் பிறப்பெய்திய

### செல்லப்பு ஜோசப் மனுவேல்பிள்ளை (தம்பிமாமா)

திருமுழுக்கினால் நித்திய வாழ்விற்கு உரிமை பெற்ற இவர் 20.02.2009 அன்று இறைசன்னிதானம் அடைந்தார்.

அன்னாரின் உடலம் அவரது இல்லத்தில் இறுதி அஞ்சலிக்காக வைக்கப்பட்டுள்ளது. 25.02.2009 அன்று மு.ப. 10 மணிக்கு அச்சுவேலி தூய சூசை மாமுனிவர் ஆலயத்தில் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு நல்லடக்கம் நிறைவேற்றப்படும். *(மாற்றம் இருப்பின் அறியத்தருவோம்)*

சங்கானை வீதி,
அச்சுவேலி.
077 6102566
தகவல்:
திருமதி செல்வத்தம்பு நீரா
அருட்தந்தை அல்போட் ஜோ.அருள்ராஜா CMF

"மன உறுதியோடு நற்செயல் புரிந்து மாட்சி, மாண்பு, அழியாமை ஆகியவற்றை நாடுவோருக்கு இறைவன் நிலை வாழ்வை வழங்குவார்" உரோமர் 2:7)

## ஐங்கரன் திருமண சேவை

எம்மிடம் அமெரிக்கா Citizen 38, 32 வயது, U.K. Citizen 39, 37 வயது, கொலண்ட் Citizen 30 வயது, ஜேர்மன் Citizen 38 வயது, பிரான்ஸ் Citizen 27 வயது, கனடா Citizen 40 வயது மணமகன்மார் உள்ளனர். இவர்கள் விரைவில் கொழும்பு வரவுள்ளனர். 24 மணி நேர தொலை பேசி வசதி உண்டு.
லண்டன் தொடர்பு: 00447535384166, 00447508295863
Fax No. 0044 2086810707, 0044 2086720873

## காணி விற்பனைக்கு

திருநெல்வேலி வடக்கு, கலாசாலை வீதியில் முத்துத்தம்பி மகா வித்தியாலயத்திற்கு முன்பாக 3 பரப்புக் காணி விற்பனைக்குண்டு.
தொடர்பு கொள்ள வேண்டிய
தொ.பே. இல.:071 8561428

## தவறிவிட்டது

விருத்தாசலம் அச்சுதன் என்பவரது தே.அ.அ. (843242421V) C.C.I.D சாரதி அனுமதிப்பத்திரம், வங்கி கிரடிற் காட் என்பன போஸ்டன் ஆஸ்பத்திரி வீதிக்கும் கேகோஸ் வீதிக்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தந்துதவவும். சன்மானம் வழங்கப்படும்.
தொடர்பு: சுந்தசாமி கோவிலடி
பொலிகண்டி, வல்வெட்டித்துறை.
தொ.பே: 0777073529, 060 221 6081

## விற்பனைப் பிரதிநிதிகள் தேவை

பிரபல நிறுவனத்தின் விற்பனைப் பொருள்களை யாழ்.குடாநாடெங்கும் விநியோகிப்பதற்கு மோட்டார்சைக்கிள் ஓடக்கூடிய விற்பனைப் பிரதிநிதிகள் தேவை. 27.02.2009 இற்கு முன் விண்ணப்பிக்கவும்.
தொடர்பு: விளம்பர இல.3175
மே/பா உதயன்

## தவறிவிட்டது

நாவற்கட்டை, கோப்பாய் வடக்கு என்னும் முகவரியைச் சேர்ந்த பாலகுரு விமலேந்திரன் என்பவரது மோட்டார் சைக்கிள் பாஸ் இலக்கம் (NPGY 9693) திருநெல்வேலி சந்தைப் பகுதியில் 21.02.2009 காலை சனிக்கிழமை தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து குருபிரிண்டேர்ஸ், 39/2, ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி என்னும் முகவரியில் ஒப்படைத்துதவவும்.
T.P.:0777 917542

## விற்பனைக்கு

NP.HE XXXX இலக்கமுடைய நிசான் சணி (NISSAN SUNNY) என்னும் பெற்றோல் கார் உடன் விற்பனைக்குண்டு
தொடர்பு - இல.29, மான் பாடசாலை வீதி, உடுவில்.
T.P:No. 077 3126452

## விற்பனைக்கு

மூன்று (8" X 8") கண்ணாடி றாக்கைகள் விற்பனைக்கு உண்டு.
சகானா மல்ரி ஸ்டோர்
முதலி கோவில் வீதி, தாவடி சிறுக்கு, கொக்குவில்.
T.P: 021 4590192

## கார் விற்பனைக்கு

17XXXX தொடரிலக்கமுடைய மிற்சுபிசி GALANT (Executive Model) கார் விற்பனைக்கு உண்டு.
தொடர்பு: U.S. கேயின்
874, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
பார்வையிடும் நேரம்:- ஞாயிறு, திங்கள் முற்பகல் 10தொடக்கம் பி.ப.4மணி வரை
T.P.: 060 2216134, 077 9361443

## PANDA express

சர்வதேச தபால் பொதிகள் கூரியர்சேவை

UNIVERSAL COURIER

CD & DVD

யாழ்நகரிலிருந்து இலங்கையின் எப்பாகத்திற்கும் பொதிகள் ஆவணங்கள் பாதுகாப்பாகவும் விரைவாகவும் மிககுறைந்த கட்டணத்தில் அனுப்பிவைக்கப்படும்.
நீங்கள் குறிப்பிடும் முகவரியில் ஒப்படைக்கப்படும்

No 167, Kasthuriyar Road,
Jaffna. Phone: 0212228250

## கண்ணீர் அஞ்சலி

எமது கல்லூரி அதிபர்
திருமதி
ஆ.சிவஞானசுந்தரம்
அவர்களின் பெரிய தந்தை

### செல்லப்பா அப்பாத்துரை

அவர்கள் காலமாகிவிட்டார்.
அன்னாரின்
ஆத்மா சாந்தி அடைய
பிரார்த்திக்கின்றோம்.

ஆசிரியர் கழகம்,
விடுதி மாணவர்கள்.
யா/இராமநாதன் கல்லூரி
(82955)

## உபநயன பிரம்மோபதேச அழைப்பு

அன்புடையீர்,

நிகழும் சர்வதாரி வருடம் மாசி மாதம் 10 ஆம் நாள் (22.02.2009) ஞாயிற்றுக்கிழமை இடப லக்கினமும் உத்தராட நட்சத்திரமும் திரயோதசி திதியும் அமிர்தசித்த யோகமும் கூடிய மு.ப.11.21 முதல் 1.12 மணி வரையுள்ள சுபமுகூர்த்தவேளையில்

சிவஸ்ரீ.ப.சண்முகசுந்தர குருக்கள் பிரம்மஸ்ரீ பொ.இராமச்சந்திர சர்மா
பத்மாவதி அம்மா குகனேஸ்வரி அம்மா

தம்பதிகளினது பௌத்திரனும், எமது புத்திரனுமாகிய

சிரஞ்சீவி
**க.கஜபரசர்மா** அவர்களுக்கு

சௌள உபநயன பிரம்மோபதேசம் செய்ய, துர்க்கையம்பாள் துணையுடனும் பெரியோர்கள் நல்லாசியுடனும் எமது இல்லத்தில் நடத்துவதற்கு நிச்சயித்திருப்பதால் தாங்கள் தங்கள் குடும்ப சமேதராய் வருகை தந்து புத்திரனை ஆசீர்வதிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

பிரம்மோபதேச குரு
**சிவஸ்ரீ தாணு மகாதேவக் குருக்கள்**
(காயத்திரிபீடம், இணுவில்)

தகவல்:
பிரம்மஸ்ரீ பொ.இராமச்சந்திர சர்மா
குகனேஸ்வரி அம்மா
தம்மனை, அளவெட்டி மேற்கு,அளவெட்டி.

தங்கள் நல்வரவை நாடும்:
பிரம்மஸ்ரீ ச.கமலக்கண்ணா சர்மா,
ரஞ்சனாதேவி தம்பதிகள்.
தொ.பே: 077 6537848

## சேவை நலன் பாராட்டு



### செ.நகுலேஸ்வரன்

(சிரேஷ்ட பாதுகாப்புப் பரிசோதகர்,
யாழ்.பல்கலைக்கழகம்)

யாழ்.பல்கலைக்கழகப் பாதுகாப்புத் திணைக்களத்தில் இருபத்தியேட்டு ஆண்டுகள் பாதுகாப்புப் பரிசோதகராக மிகவும் சிறப்புடனும், ஆளுமையுடனும் கடமையாற்றி இன்று மணிவிழாக் காணும் சிரேஷ்ட பாதுகாப்புப் பரிசோதகர் எம் மதிப்பிற்குரிய பெருந்தகை

### செல்லத்துரை நகுலேஸ்வரன்

அவர்களின் பெருமைமிக்க சேவையினைப் பாராட்டுவதோடு இனிவரும் காலங்களில் சீரும் சிறப்புடனும் இன்னும் பல்லாண்டு காலம்வாழப் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

வாழ்த்துபவர்கள்:
பாதுகாப்புத் திணைக்களம், யாழ்.பல்கலைக்கழகம்.
பாதுகாப்பு உத்தியோகத்தர்கள்.

## நன்றி நவிலல்

மலர்வு 02 ★ 12 ★ 1937



உதிர்வு 16 ★ 01 ★ 2009

### திருமதி தவமணி பூவேந்திரன்

சுன்னாகத்தைப் பிறப்பிடமாகவும், 'குகவாசா' வதிரி, கரவெட்டியை வதிவிடமாகவும், கொழும்பில் வசித்துக்கொண்டிருந்த வருமான எமது அன்பு குடும்பத் தலைவியின் பிரிவின்போது எம் துயர் துடைக்க உதவிய அன்பு உள்ளங்களுக்கும், மரணச் சடங்கில் கலந்துகொண்டவர்களுக்கும், வெளிநாடுகளிலிருந்தும், உள் நாட்டில் இருந்தும் தொலைபேசிமூலம் எமது துயரை பகிர்ந்து கொண்டவர்களுக்கும் மற்றும் பல்வேறு வகைகளில் உதவி ஒத்தாசைகள் புரிந்த உறவினர்கள், நண்பர்கள், சமயத்தலைவர்கள், மதகுருமார்கள் அனைவருக்கும் எமது நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

அத்துடன் 15.02.2009 அன்று கொழும்பிலும், சுன்னாகத்திலும் நடைபெற்ற அன்னாரின் 31ஆம் நாள் சபிண்டீகரண கிரியையிலும் மதியபோசனத்திலும் கலந்துகொண்ட அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

குடும்பத்தினர்.
(சி/557229)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
தொலைபேசி 222 3837, 222 9933 தொலைநகல்.: 222 9944

## இலங்கை விடயத்தில் தலையிடும் கடப்பாடு பிரிட்டனுக்கு உள்ளது

வன்னியில் - குறிப்பாக முல்லைத்தீவில் - அப்பாவித் தமிழ் சிவிலியன்களுக்கு எதிராகக் கட்டவிழும் பேரவலக் கொடூரங்கள் மனிதநேய சிந்தனை கொண்ட அனைவரினதும் மனச்சாட்சியை உலுப்பவே செய்கின்றன.

இவ்விவகாரத்தில் சர்வதேச அரசியல் உறவு நிலை கருதி பல நாடுகளின் அரசுகள் அதீத மௌனம் காத்தாலும், உண்மை நிலைமையக் கண்டறிவதிலும், நாடுகளுக்கிடையிலான சர்வதேச உறவு நிலை பாதிக்கப்படாமல், சத்தம் சந்தடியின்றி, ஏதேனும் ஆக்கபூர்வமான நடவடிக்கை எடுப்பதிலும் பல நாடுகளும் அரசுகளும் ஆர்வம்காட்டி வருகின்றன என்பது உண்மையே.

இலங்கையில் ஏற்பட்டுள்ள மனிதப் பேரவல நிலைமை குறித்துக் கண்டறியும் நோக்குடன் விசேட தூதுவர் ஒருவரை நியமிக்கும் ஐக்கிய இராச்சியத்தின் உத்தேசத் திட்டமும் இந்த நோக்கத்தை அடிப்படையாகக் கொண்டதே.

ஆனால் அத்தகைய விசேட தூதுவரை நியமிக்கும் பிரிட்டனின் எத்தனம், அந்நாட்டுக்கு எதிராகக் கொழும்பின் உணர்வலைகளைச் சூடாகக் கிளப்பிவிட்டிருக்கின்றது.

இலங்கைத்தீவு இன்னும் பிரிட்டனின் காலனிக்கு உட்பட்டதல்ல என்பதை இலங்கையின் இராஜதந்திரி ஒருவர் பிரிட்டனுக்குச் சுட்டிக்காட்ட விழைந்திருக்கின்றார். இது எங்கள் அரசு. உங்கள் நியாயாதிக்கத்துக்கும் ஆளுகைக்கும் உட்பட்ட காலனி அல்ல இது. அப்படிக் காலனியாக இருந்த காலம் மலையேறிவிட்டது. சுதந்திர - சுயாதீன இறைமையுள்ள - இலங்கை மீது உங்கள் ஆதிக்கத்தைத் திணிக்கமுற்படாதீர்கள். அப்படி ஆதிக்கம் செலுத்தும் காலம் முடிந்துவிட்டது - என்று இக்கருத்து மூலம் பிரிட்டனுக்குப் பாடம் போதிக்க முயற்சித்திருக்கின்றார் அந்த இராஜதந்திரி.

அவர் குறிப்பிடுவது உண்மையாக இருக்கலாம். அதில் நியாயமும் இருக்கலாம்.

ஆனால் இலங்கையில் இன்று மிக வேகமாக வெடித்திருக்கும் போரும், அதனால் ஏற்பட்டிருக்கும் மனிதப் பேரவலமும் அறுபத்தியொரு ஆண்டுகளுக்கு முன்னர் இலங்கைத் தீவை விட்டு அகன்ற பிரிட்டிஷ் காலனித்துவ ஆட்சி இங்கு விட்டுச்சென்ற பிரச்சினையின் - பிணக்கின் - விளைவும் பெறுபேறும்தான் என்பது மறுக்கப்பாலதல்ல; மறக்கப்பாலதல்ல.

இத்தகைய மனிதப் பேரவலம் இத்தீவில் ஏற்படுவதற்கான விதையை ஊன்றிய குற்றத்தை இழைத்தவர்களே பிரிட்டிஷ் காலனித்துவ ஆட்சியாளர்கள்தான் என்பது வரலாற்று உண்மை. அந்த விஷ விதை இன்று பெரும் விருட்சமாக விஸ்வரூபம் எடுத்து, உலகத்தின் மனச்சாட்சியையே உலுப்பக்கூடிய கோரமாகவும் கொடூரமாகவும் வடிவெடுத்திருக்கையில், அப்பிரச்சினைக்குச் சுமுகத் தீர்வு ஒன்றைப் பெறவைக்கும் நோக்கில் பிரிட்டிஷ் அரசு விசேட தூதுவர் ஒருவரை நியமிக்க முற்பட்டிருப்பதில் எந்த வகையில் தப்பானது?

பதினாறாம் நூற்றாண்டின் முற்பகுதியில் மேற்குலக காலனித்துவ ஆட்சிகள் இலங்கைத் தீவுக்குள் காலடி எடுத்துவைத்து, இந்தத் தீவை ஆக்கிரமிக்க முற்பட்ட சமயம், இங்கு இரு தேசங்களதும், இரு தேசியங்களும் தனித்தனி மொழி, இனத்துவம், நீண்ட - தொடர்ச்சியாக - தாயகம், பண்பாடு, வாழ்க்கை முறை, வழக்காறுகள் என்று பிரத்தியேகச் சிறப்புகளுடன் வெவ்வேறு அரசு முறைகளின் கீழ் நிலை பெற்றிருந்தமையைக் கண்டனர்.

அத்தகைய அந்நியரின் ஆக்கிரமிப்பு ஆட்சி போர்த்துக்கீசர், ஒல்லாந்தர் என்று கடைசியாகப் பிரிட்டிஷ் வெள்ளையர்களிடம் கைமாறிய பின்னரும் கூட - 19ஆம் நூற்றாண்டின் முதல் 32 ஆண்டுகள் கழியும் வரை கூட - இத்தீவில் தமிழர் தேசம், சிங்களவர் தேசம் என்ற இரு கட்டமைப்புகளும் தொடர்ந்து பேணப்பட்டே வந்தன.

ஆனால் இலங்கைத் தீவை ஆக்கிரமித்திருந்த பிரிட்டிஷ் சாம்ராச்சியம், தனது நிர்வாக வசதிக்காக 1833இல் இந்த இரண்டு தேசங்களையும் நிர்வாக ரீதியாக ஒன்றாக்கியது. அந்தப் பிணைக்கப்பட்ட ஆட்சி தொடர்கையில் 1948இல் பிரிட்டிஷாரின் காலனித்துவ ஆட்சி இலங்கைத் தீவில் முடிவுக்கு வந்தது.

தமது நிர்வாக வசதிக்காகத் தமிழர் தேசத்தையும், சிங்களவர் தேசத்தையும் ஒன்றாக்கிய பிரிட்டிஷ் ஆட்சியாளர்கள், தீவை விட்டு வெளியேறுகையில் எண்ணிக்கையில் சிறுபான்மையினரான தமிழர்களின் தேச இறைமையை, எண்ணிக்கையில் பெரும்பான்மையினரான சிங்களவர்களின் பிடியில் விட்டுச் சென்றனர். அதாவது பதினாறாம் நூற்றாண்டில் அந்நிய காலனித்துவத்திடம் கைமாறிய தமிழர் தேசத்தின் ஆட்சியுரிமையை - அல்லது இறைமையை - 1948இல் பிரிட்டிஷாரிடம் இருந்து தம்வசம் பெற்றுக்கொண்டனர் சிங்களவர்கள்.

அந்தப் பிரச்சினையின் தொடர்ச்சியே இன்று மோசமான உள்நாட்டு யுத்தமாகவும், இனப்பிரச்சினையாகவும் வெடித்து மனிதப் பேரவலக் கொடூரமாக வடிவெடுத்திருக்கின்றது.

இலங்கையின் அந்த இராஜதந்திரி குறிப்பிடுகின்றமை போல, இலங்கை இன்று பிரிட்டனின் காலனித்துவத்தின்கீழ் இல்லை என்பது உண்மைதான். ஆனால், இலங்கை பிரிட்டிஷ் காலனித்துவத்தின் கீழ் இருந்த போது, பிரிட்டன் விதைத்த பிரச்சினையின் விளைவுதான் இங்கு இப்போது இப்படி கோர வடிவு எடுத்துள்ளது. அதனால், இவ்விடயம் குறித்து ஆராயவும், தலையிடவும், இப்பிரச்சினைக்குத் தீர்வுகாண உதவவும் பிரிட்டனுக்குப் பொறுப்பும் தகைமையும் - அதையும் தாண்டிக் கடமையும் - உள்ளது என்பதை யாரும் மறுக்கமுடியாது.

பிரிட்டனின் காலனித்துவ நாடாக இலங்கை விளங்கிய காலத்தில் உருவெடுத்த - தோற்றம் பெற்ற - அல்லது விதைக்கப்பெற்ற - பிரச்சினை இப்போது பூதாகர வடிவெடுத்துள்ள நிலையில், இலங்கை இப்போது தனது காலனித்துவ நாடல்ல என்ற காரணத்தைக் காட்டி இந்தப் பிரச்சினையில் இருந்து பிரிட்டன் ஒதுங்கிவிட முடியாது. கொழும்பு நிர்வாகமும் பிரிட்டனை ஒதுக்கிவிட முடியாது.

பிரிட்டனின் உத்தேசப் பங்களிப்பு முயற்சியை விமர்சிக்க முயலும் இலங்கையின் இராஜதந்திரிகள் இதைப் புரிந்துகொள்வது முக்கியம்.

### மனித உரிமைக் கண்காணிப்பகம் பகிரங்க வேண்டுகோள்

# மக்கள் செறிந்துள்ள பகுதிகள் மீது ஷெல் தாக்குதலை நிறுத்த வலியுறுத்து

## பாதுகாப்பாக வெளியேற புலிகள் அனுமதிக்க வேண்டும்

கொழும்பு, பெப்.22

"வன்னியில் பொதுமக்கள் செறிவாகத் தங்கியிருக்கும் பகுதிகள் மீது ஷெல் தாக்குதல் நடத்துவதை இராணுவம் உடனடியாக நிறுத்த வேண்டும். அத்துடன் அங்குள்ள பொதுமக்கள் பாதுகாப்பாக வெளியேறுவதற்கு விடுதலைப்புலிகள் அனுமதியளிக்கவேண்டும்."

- இவ்வாறு இரு தரப்பினரிடமும் பகிரங்க வேண்டுகோள் ஒன்றை விடுத்திருக்கிறது சர்வதேச மனித உரிமைகள் கண்காணிப்பகம்.

வன்னியில் கடந்த ஒருமாத காலப் பகுதியில் 2 ஆயிரம் பேர் கொல்லப்பட்டுள்ளனர். மேலும் 5 ஆயிரம் பேர் வரை காயமடைந்துள்ளனர் என்ற அதிர்ச்சிதரும் புள்ளி விவரமொன்றையும் சர்வதேச மனிதஉரிமைக் கண்காணிப்பகம் நேற்று வெளியிட்டது.

நியூயோர்க்கைத் தளமாகக் கொண்டியங்கும் சர்வதேச மனித உரிமைகள் கண்காணிப்பகம் நேற்று வெளியிட்டுள்ள 45 பக்க அறிக்கையிலேயே இது குறித்து தெரிவிக்கப்பட்டுள்ளது.

**அரச கட்டுப்பாட்டுப் பகுதிக்கு சென்றவர்கள் காணமாற்போயுள்ளனர்.**

வன்னியில் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப்பகுதியிலிருந்து வரும் மக்கள் அரசினால் நலன்புரிக் கிராமங்கள் என அழைக்கப்படும், இராணுவத்தின் கட்டுப்பாட்டில் இயங்கும் முகாம்களில் பலவந்தமாகத் தடுத்து வைக்கப்படுகின்றனர் என வும் கடும் விசாரணைகளுக்கு உட் படுத்தப்படுகின்றனர் எனவும் மனித உரிமைக் கண்காணிப்பகம் தெரிவித்துள்ளது.

மேலும் அரச கட்டுப்பாட்டுப் பகுதியை நோக்கி வந்தவர்களில் சோதனை மற்றும் விசாரணைகளுக்காகத் தடுத்து வைக்கப்பட்டவர்கள் காணாமற் போயுள்ளனர் என்றும் அது குறிப் பிட்டுள்ளது.

பொதுமக்கள் மீதான இந்த யுத்தம் நிறுத்தப்பட வேண்டும் என சர்வதேச மனிதஉரிமைக் கண்காணிப்பகத்தின் சட்ட, கொள்கை இயக்குநர் ஜேம்ஸ் ரொஸ் வேண்டுகோள் விடுத்துள்ளார். இலங்கை இராணுவத்தினர் வைத்திய சாலைகள் மீது ஷெல் தாக்குதலை மேற்கொள்கின்றனர். பாதுகாப்பு வலயங்கள் மீது தாக்குதலை மேற்கொண்டு பொதுமக்களைப் படுகொலை செய் கின்றனர் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

மேலும் விடுதலைப்புலிகள் தமது பகுதிகளிலிருந்து பொதுமக்களை வெளியேற அனுமதிப்பதில்லை. பொதுமக்களை, சிறுவர்களைப் படையணிகளில் சேர்க்கின்றனர். கட்டாய வேலைகளில் ஈடுபடுத் துகின்றனர் என்றும் கண்காணிப்பகம் குற்றம்சாட்டியுள்ளது.

அந்த அறிக்கையில் மேலும் சில முக்கிய பகுதிகள் வருமாறு:-

விடுதலைப் புலிகள் முல்லைத் தீவில் மேலும் பின்வாங்கியுள்ளதைத் தொடர்ந்து பொதுமக்களின் உயிரிழப்புகள் பாரியளவில் அதிகரித்துள்ளன.

மோதல் நடைபெறும் பகுதிகளுக்கு ஊடகவியலாளர்களும் மனித உரிமை அமைப்புகளும் செல்வதை அரசு தடைசெய்துள்ளதால் பொதுமக்களுக்கு ஏற்பட்ட உயிரிழப்புகள் குறித்து முழுமையான தகவல்களைப் பெற முடியாதுள்ளது.

எனினும் மோதல் நடைபெறும் பகுதிகளில் உள்ள சுயாதீன கண்காணிப்பாளர்களை அடிப்படையாக வைத்து ஒரு மதிப்பீட்டுக்கு வரலாம்.

ஜனவரி 20முதல் பெப்ரவரி 13வரையான மூன்று வார காலப்பகுதியில் 1,123 பேர் உயிரிழந்துள்ளனர் என்றும் 4,027 பேர் காயமடைந்துள்ளனர் என்றும் சுயாதீன கண்காணிப்பாளர்களின் மதிப்பீடுகள் தெரிவிக்கின்றன.

எனினும், புதிய தகவல்கள், இந்தக் காலப்பகுதியில் 2000 பேர் கொல்லப்பட்டிருக்கலாம் என்கின்றன.

ஜனவரி முதலாம் திகதி முதல் 26 ஆம் திகதிவரை புதுக்குடியிருப்பு மருத்துவமனையில் 573 பேர் மோதல் காரணமாக ஏற்பட்ட காயங்களுடன் சேர்க்கப்பட்டமையையும் இவர்களில் 75 பேர் உயிரிழந்தமையையும் எம்மால் உறுதிசெய்ய முடிகிறது.

மேலும் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிகளிலிருந்து வரும் அனைவரும் எவ்வித பாகு பாடுமின்றி இடைக்கால தங்கு முகாம்களில் தங்க வைக்கப்படுகின்றனர்.

அரசு இதனை நலன்புரி நிலையங்கள், நலன்புரி கிராமங்கள் என அழைக்கின்றது.

**நலன்புரி நிலையங்கள் முழுக்க முழுக்க இராணுவத்தின் பொறுப்பில் முகாம்கள் சர்வதேச தராதரத்துடன்**

காணப்பட வேண்டும் என்ற சர்வதேச சமூகத்தின் கோரிக்கையை இலங்கை அதிகாரிகள் புறக்கணித்துள்ளனர்.

இந்த முகாம்கள் முட்கம்பி வேலிகளால் அடைக்கப்பட்டுள்ளன. துப்பாக்கி நிலைகள் காணப்படுகின்றன. முகாமுக்கு உள்ளேயும் வெளியேயும் பெருமளவு இராணுவ பிரசன்னத்தைக் காண முடிகின்றது.

இந்த முகாம்களில் சீருடை அணியாத இராணுவ புலனாய்வுப் பிரிவினர் உள்ளனர் எனப் பலர் மனித உரிமைக் கண்காணிப்பகத்துக்குத் தெரிவித்துள்ளனர். பல முகாம்களில் துணை இராணுவப் படையினர் காணப்பட்டனர் என ஐக்கிய நாடுகளின் அதிகாரியொருவர் தெரிவித்துள்ளார்.

குறிப்பாக அரசுக்கு சார்பான புளொட் அமைப்பின் உறுப்பினர்கள் அங்கு காணப்படுகின்றனர் என அவர்கள் உறுதி செய்துள்ளனர்.

உத்தியோகபூர்வமாக அரச அதிகாரிகளே முகாம்களை நிர்வகித்தாலும் இராணுவமே முழுமையான பொறுப்பை ஏற்றுள்ளது.

அந்த முகாம்களுக்குள் எவரும் செல்வதில்லை, உள்ளே இருப்பவர்கள் வெளியில் வருவதில்லை என மனிதாபிமானப் பணியாளர்கள் தெரிவிக்கின்றனர்..

குறிப்பிட்ட முகாம்களில் இரவில் புலனாய்வுப் பிரிவினர் விசாரணைகளை மேற்கொள்கின்றனர்.

விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிகளிலிருந்து வருபவர்கள் பல தடவைகள் சோதனையிடப் படுகின்றனர்.

அரசுக்கு இவர்களை சோதனை செய்வதற்கான நியாயமான காரணங்கள் உள்ள அதேவேளை இந்த நடவடிக்கைகள் வெளிப்படையானதாகவும் சர்வதேச தராதரத்துடனும் இடம் பெறவேண்டும்.

எனினும் இதுவரை இந்த விடயத்தில் சர்வதேச தராதரங்கள் பின்பற்றப் படவில்லை. இவ்வாறான சோதனை நடவடிக்கையின்' பின்னர் தடுத்து வைக்கப்பட்ட பலருக்கு என்ன நடைபெற்றது என்பது தெரியாது. இவர்கள் பலவந்தமாகக் காணாமற் போகச் செய்யப்பட்டிருக்கலாம் அல்லது படுகொலை செய்யப்பட்டிருக்கலாம் என்ற அச்சம் காணப் படுகின்றது.

# சிவராத்திரி நிகழ்வுகள்

சுழிபுரம்,பெப்.22

சித்தன்கேணி ஸ்ரீ சிதம்பரேஸ்வரர் ஆலயத்தில் சிவராத்திரி தினத்தையொட்டி நாளை இரவு விசேட வழிபாடுகள் நடைபெறவுள்ளன.

(202-28)

* * *

சுழிபுரம்,பெப்.22

பண்ணாகம் விசவத்தனை முருகமூர்த்தி கோயி லில் சிவராத்திரியையொட்டி நான்கு சாமம் அபிஷேகம், பூசை ஆகியவை நடைபெறவுள்ளன.

(202-28)

* * *

சங்கானை,பெப்.22

சங்கானையில் அமைந்துள்ள மாவடி ஞானவைரவர் ஆலயம், சிங்கப்பூர் வைரவர் ஆலயம் மற்றும் அரசு ஆல் வைரவ ஆலயங்களில் சிவராத்திரி விழா நடைபெறவுள்ளது.

நாளை திங்கட்கிழமை பிற்பகல் 5மணிமுதல் இரவு 9மணிவரை திருமுறையோதுதல், பஜனை போன்ற நிகழ்வுகள் இடம்பெறவுள்ளன.

(202-29)

### நாளை

| | |
|---|---|
| மாசி 11 | 23.02.2009 |
| | திங்கட்கிழமை |
| திதி: | சதுர்த்தசி |
| | முழுவதும் |
| நட்சத்திரம்: | திருவோணம் |
| | மாலை 06.31 |
| மகாசிவராத்திரி விரதம் | |
| சுபநேரம்: | 12.30 - 02.00 |
| ராகுகாலம்: | 08.00 - 09.30 |

நல்லூர்,பெப்.22

நெடுந்தீவு கிழக்கு அருள்மிகு ஆலமாவனப் பிள்ளையார் கோவிலில் மகா சிவராத்திரியை முன்னிட்டு நாளை திங்கட்கிழமை விசேட பூசைகள் நடைபெறும்.

(202-111)

* * *

யாழ்.வண்ணை மணிக்கூட்டு வீதி அரசடி விநாயகர் ஆலயச் சிவராத்திரி விழா நாளை திங்கட்கிழமை பிற்பகல் 4.30 மணிதொடக்கம் நடைபெறவுள்ளது. (202)

* * *

கட்டப்பிராய் முத்துமாரி அம்மன் ஆலயத்தில் சிவராத் திரி விழா நாளை திங்கட்கிழமை நடைபெறவுள்ளது.

ஆலயப் பரிபாலன சபைத் தலைவர் தி.ரவீந்திர நாதன் தலைமையில் நடைபெறும் இந்த விழாவில் ஆசியுரையை பிரம்மஸ்ரீ வ.நகுலேஸ்வரக் குருக்கள் நிகழ்த்தவுள்ளார்.

இந்த ஆலயத்தில் நான்கு சாமப் பூசைகள் நடைபெறவுள்ளன. அத்துடன் யாழ்ப்பாண நாட்டார் வழக்கியற் கழகம் வழங்கும் 'சத்தியவான் சாவித்திரி' நாடகமும் நடைபெறவுள்ளது.

(204)

* * *

யாழ்ப்பாணம்,பெப்.22

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் எழுந்தருளியிருக்கும் ஸ்ரீ சாமுண்டிகா தேவி சமேத சிவஞான வைரவர் ஆலயத் தில் சிவராத்திரி தினமான நாளை மாலை 6 மணிக்குச் சிவராத்திரி விசேட பூசை வழிபாடுகள் நடைபெறவுள்ளன. (202-78)

* * *

யாழ்ப்பாணம்,பெப்.22

காரைநகர் ஈழத்துச் சிதம்பரத்தில் சிவ ராத்திரியையொட்டி விசேட நிகழ்வுகள் நாளை திங்கட்கிழமை காலை தொடக்கம் இடம்பெறும்.

காரைநகர் மணிவாசகர் சபையின் ஏற்பாட்டில் காலை 7 மணி தொடக்கம் திருவாசகமுற்றோதலும் மாலை முதல் சமயச் சொற்பொழிவுகளும் காரைநகர் பிரதேச பாடசாலை மாணவர்களின் கலைநிகழ்வுகளும் தேவார பாராயணம் என்பனவும் நடைபெறும்.

அன்றைய தினம் நான்கு சாமங்களும் விஷேட அபிஷேக ஆராதனைகளும் பூசை வழிபாடுகளும் இடம் பெற்று மறுநாள் காலை 6 மணிக்கு வசந்தமண்டபப் பூசையை அடுத்து சுவாமி தீர்த்தமாடுவதற்காக ஈழத் துச் சிதம்பர புனித தீர்த்தக் கரைக்கு எழுந்தருளுவார்.

அங்கு சுவாமி தீர்த்தமாடியதை அடுத்து பக்தர்கள் தீர்த்தமாடுவதற்கும் பிதிர்கடன் நிறைவேற்றுவதற்குமான ஏற்பாடுகள் மேற்கொள்ளப் பட்டுள்ளன. (202-250)

* * *

யாழ்ப்பாணம்,பெப்.22

ஸ்ரீ தான்தோன்றீஸ்வரி மனோன்மணி அறநெறிப் பாடசாலை மாண வர்களினால் சிவராத்திரி விழா நாளை திங்கட்கிழமை நாரந்தனை ஸ்ரீதான் தோன்றீஸ்வரி மனோன்மணி ஆலயத்தில் நடைபெறவுள்ளது.

அன்றைய தினம் வன்னிப் பகுதியில் ஏற்பட்டுள்ள யுத்தசூழ்நிலை மாற்றமடைந்து அங்குள்ள மக்களுக்குச் சுபீட்சமான வாழ்வு கிடைக்க நாம பஜனை வழிபாடும் நடைபெறும்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## சமாதானப் பேச்சு....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தாக்குதல்களும் பதில் தாக்குதல்களும் தொடர்ந்து இடம்பெற்றுக் கொண்டே இருக்கும் என்று அவர் கூறினார்.

இலங்கைத் தமிழ் மக்கள் மோதல்களில் கொல்லப்படுவதையிட்டு இந்தியா கரிசனையாக இருக்கிறது. இதன் காரணமாக மக்களின் இயல்பு வாழ்வு சீர்குலைந்துள்ளது.

அப்பாவி மக்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்துமாறு இலங்கையை இந்தியா கேட்டுள்ளது என்றும் அவர் கூறினார்.

கொழும்பு மற்றும் கட்டுநாயக்கா மீது விடுதலைப்புலிகளின் வான்தாக்குதல் இடம்பெற்றதற்குப் பின்னர் பிரணாப் முகர்ஜி இந்தக் கருத்தை வெளியிட்டுள்ளார் என செய்தி ஏஜென்சி ஒன்று குறிப்பிட்டுத் தெரிவித்தது.

## கப்பல் சேவை....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அரச அதிபர் கூறியுள்ளார்.

இன்று 22ஆம் திகதியும், எதிர்வரும் 26ஆம்திகதியும், மார்ச் 2ஆம், 7ஆம், 11ஆம், 15ஆம் திகதிகளிலும் கப்பல் சேவை நடைபெறும் என்று என அறிவிக்கப்பட்டுள் ளது.

எனினும் குறுகிய கால அறிவித்தலில் கப்பல் சேவைகளில் மாற்றம் ஏற்படலாம், எனவே பயணிகள் தாம் செல்ல வுள்ள இரு தினங்களுக்கு முன்னரே செயலகத்தில் பதிவுகளை மேற்கொள்ள முடி யும் என்றும் அரச அதிபர் கூறியுள்ளார். (அ-1)

## வவுனியா நலன்புரி....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

புனர்வாழ்வுக்காக ஐ.நா. பத்து மில்லியன் டொலர் உதவி வழங்கும்.

அரச நிறுவனங்களுக்கும் தொண்டு நிறுவனங்களுக்கும் இடையே வவுனியா வில் நிறைய ஒத்துழைப்பைக் கண் டேன். அகதிகளுக்கு வசதிகள் வழங்கப் படுகின்றன.

சுற்றிவர இலங்கைப் படையினரும் அதி காரிகளும் இருப்பதால் அகதிகள் எவரும் அச்சத்தில் என்னோடு தனியாகப் பேச முன்வரவில்லை.

இருப்பினும் அகதிகளுக்குள்ள பிரச்சினைகளை உதவிப் பணிப்பாளர்கள் எனக்கு எடுத்துக் கூறினர். குறிப்பாக ஆயுதப்படையினர் எந்நேரமும் இருப்பது அச்சுறுத்தலாக உள்ளதென்றும், சுதந்திரமாக நடமாட தடையுள்ளது என்றும் அதைவிட புலிகள் உள்ளார்களா என்று முகாமிலுள்ளவர்களிடையே நடக்கும் விசாரணைகள், சோதனைகள் வெளிப் படையாக இல்லை என்றும் அகதி களிடையே கவலையும் அச்சமும் உள்ளதாகத் தெரிய வந்துள்ளது.

ஜனாதிபதி ராஜபக்ஷ அவர்களைச் சந்தித்தபோது இந்த விடயங்களை அவரின் கவனத்துக்கு கொண்டு வந்தேன் - என்றார். (அ)

## மக்கள் வாழும் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மேற்கண்டவாறு தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு வலியுறுத்தியுள்ளது.

இலங்கைக்கு விஜயம் மேற்கொண் டுள்ள ஐ.நாவின் மனிதாபிமான விவகா ரங்களுக்கான பிரதிச் செயலாளர் நாயகம் ஜோன் ஹோம்ஸுடன் நேற்று நடத்திய சந்திப்பிலேயே மேற்கண்டவாறு கூட்ட மைப்பினர் வலியுறுத்தினர்.

இந்தச் சந்திப்பில் ஹோம்ஸுடன் ஐ.நாவின் இலங்கை வதிவிடப் பிரதிநிதி நீல் புஹுனேயும் கலந்து கொண்டார்.

கூட்டமைப்பின் சார்பில் இரா.சம்பந் தன், மாவை சேனாதிராஜா, சிவசக்தி ஆனந்தன் ஆகியோர் பங்குபற்றினர்

**உணவு,மருந்து விநியோகிக்கப்படவில்லை**

ஒரு மணி நேரம் இடம்பெற்ற இச் சந் திப்பில் கூட்டமைப்பினர் எடுத்துரைத்த முக்கிய விடயங்கள் வருமாறு:-

* எமக்குக் கிடைத்த தகவலின் பிரகாரம் வன்னியில் 330,000 பேர் வசித்து வரு கின்றார்கள். அவர்களுக்கு கடந்த மாதம் 29 ஆம் திகதிக்குப் பின்னர் உணவுப்பொருள்களோ, மருந்துப்பொருள்களோ அனுப்பப்படவில்லை. சத்திரசிகிச்சைக்கும் தேவையான மருந்துகளோ, அவர்களுக்கு ஏற்படும் காயங்களுக்குத் தேவையான மருந்துகளோ அனுப்பப்படவில்லை.

அந்த மக்களை பட்டினிபோட்டும் மருத்துவ வசதி இன்றியும் கொல்ல அரசு திட்ட மிட்டுச் செயற்படுகின்றது. பட்டினி போட்டு சாகடிக்கும் அரசின் திட்டம் அம்பலமான வேளை- தாங்கள் இலங்கைக்கு விஜயம் மேற்கொண்ட வேளை சாட்டுக்கு (பெயருக்கு) சொற்ப பொருள் களை அரசு கப்பல் மூலம் அனுப்பி உள்ளது.

* ஒரு வாரத்துக்கு 800 மெற்றிக்தொன் உணவுப் பொருள்கள் தேவையாக இருக்கும்போது 80 மெற்றிக் தொன் பொருள்களை மட்டுமே அனுப்பி சர்வதேசத்தை ஏமாற்றியுள்ளது அரசு.

**பாதுகாப்பு வலயங்கள் மீது அரசு தாக்குதல்**

பாதுகாப்பு வலயமென்று அரசு பிரகடனம் செய்த பகுதிகள் மீதும் படையினர் தாக்குதல்களை நடத்தி மக்களை கொல் கிறார்கள். கடந்த ஒரு மாத இடைவெளி யில் 2000 பொதுமக்கள் கொல்லப்பட்டுள் ளனர்; 4500 பேர் காயங்களுக்கு உள்ளாக் கப்பட்டுள்ளனர்.

* அங்குள்ள மக்களை அங்கேயே பாதுகாப்பாக தங்க வைப்பதற்கு அரசுக்கு விருப்பம் இல்லை. அந்த மக்களை வேறு பகுதிகளுக்கு இடம்பெயரவைத்து அவர் களை நிரந்தர அகதிகளாக்க அரசு திட்ட மிட்டுள்ளது.

கடந்த காலங்களில் - 20 வருடங்களுக்கு முன்னர் - யாழ்ப்பாணத்தில் மக் களை இடம்பெயரவைத்து அவர்களை நிரந்தர அகதிகளாக்கி அவர்களின் பிர தேசங்களை இராணுவம் அபகரித்து விட்டது. அங்கு அதிஉயர் பாதுகாப்பு வலயங்களை உருவாக்கியுள்ளது அரசு.

* அதேபோன்ற பாணியில் - இன்று வன்னியில் உள்ள மக்களை வேறு இடங்களுக்கு இடம்பெயர செய்து மக் களை நிரந்தரமாக அகதியாக்கி விட்டு அந்தப் பிரதேசங்களை இராணுவ மயப்படுத்த அரசு முனைப்புடன் செயற் படுகின்றது.

**ஐ.நா. முகாமைத்துவத்தின் கீழ் நலன் புரி நிலையங்கள்**

இந்நிலையைப் புரிந்துகொண்டு ஐ.நாவின் முகாமைத்துவத்துடன் அதன் மேற்பார்வையில் மக்களை தங்கவைக்கும் பாதுகாப்பு வலயங்கள் மக்கள் வாழும் பகுதியிலேயே உருவாக்கப்பட வேண்டும். அப்போதுதான் மக்கள் நிம்மதியுடன் நம்பிக்கையுடன் வாழும் சூழல் உருவாகும்- என்று கூட்டமைப்புத் தெரிவித்தது.

அகதிகளாக்கப்பட்டு வேறு இடங்களுக்கு அழைத்துச் செல்லப்படும் மக்கள் 3 முதல் 5 வருடங்கள் வரை மீளத் திரும்பமுடியாத நிலை காணப்படுவதால் உடன் ஐ.நா.தலையிட வேண்டும் என்றும் கூட்டமைப்பு வலியுறுத்தியது.

இந்த விடயங்கள் குறித்து அரசுத் தலைமையுடன் கலந்துரையாடி நடவ டிக்கை எடுப் பதாக ஐ.நா. அதிகாரி கூட்டமைப் பினரிடம் உறுதி யளித்தார். (அ-1)

## பாதுகாப்பு வலயம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தெரிவித்தமை வருமாறு:

சிறிலங்கா அரசாங்கத்தால் அறிவிக்கப்பட்ட 'மக்கள் பாதுகாப்பு வலய' பகுதியில் உள்ள முள்ளிவாய்க்கால்- பொக்கணை- மாத்தளன் பகுதிகளில் ஷெல் தாக்குதல்களில் 19 மக்களும், இரணைப்பாலை- ஆனந்தபுரம் உள்ளிட்ட பகுதிகளில் 13 பேரும் கொல்லப்பட்டுள்ளதுடன் 98 பேர் காயமடைந்துள்ளனர்.

கொல்லப்பட்டவர்களில் அக்கராயன் பலநோக்கு கூட்டுறவுச் சங்க களஞ்சிய முகாமையாளரான 3 பிள்ளைகளின் தந்தை கணபதிப்பிள்ளை பரமானந்தம் என்பவரும் அடங்குகின்றார்.

மருத்துவமனையில் அடையாளம் காணப்படாத நிலையில் பல சடலங்கள் உள்ளன. அடையாளம் காணப்பட்ட சிலரின் விவரங்கள் கிடைக்கப்பெற்றுள்ளன.

கிறேசியன் கியுர்தன் (வயது 08), செல்வரட்ணம் நிதுர்சிகா (வயது 11), கிருபாகரன் மல்லிகா (வயது 47), சதாசிவம் ஆறுமுகநாதன், சத்தியாப்பிள்ளை கிரேசியன் (வயது 32), கந்தையா லட்சுமி (வயது 70), நல்லநாதன் மாதவி (வயது 34), கிருபாகரன் (வயது 47) ஆகியோரின் சடலங்கள் மருத்துவமனையில் அடையாளம் காணப்பட்டுள்ளன.

மக்கள் பாதுகாப்பு வலய' பகுதியான வலைஞர் மடத்தில் மட்டும் நேற்று முன்தினம் இரவு படையினர் நடத்திய எறிகணைத் தாக்குதலில் 12 பேர் படுகொலை செய்யப்பட்டுள்ளதுடன் 72 பேர் காயமடைந்துள்ளனர்.

காயமடைந்தோரில் பின்வருவோரின் விவரங்கள் கிடைத்தன:

சிறீஸ்கந்தராசா சதீஸ்குமார் (வயது 26), இராஜசேகரம் சித்திவிநாயகம் (வயது 68), பரணிரூபசிங்கம் பாலநடேசன் (வயது 72), கணபதிப்பிள்ளை சோமசுந்தரம் (வயது 51), சிவராசா சுகிர்தன் (வயது 36), சிவலோகநாதன் கீர்த்தனா (வயது 10), பொன்னம்பலம் சச்சிதானந்தன் (வயது 59), குமணன் குமனசாந்தி (வயது 32), புசலவன் புஸ்பராணி (வயது 28), கந்தையா சுபாகரன் (வயது 40), நடராஜா யோகமலர் (வயது 59), இராசையா யோகேஸ்வரி (வயது 17), கருணாநிதி யோகேஸ்வரி (வயது 32), இரத்தினசிங்கம் கருணநிதி (வயது 32), பாலசிங்கம் பாலகுமார் (வயது 37), றொபேர்ட் சேமேஸ்வரி, சுப்பிரமணியம் லட்சுமி (வயது 60), சரவணமுத்து பரமேஸ்வரி (வயது 47), குணலிங்கம் இன்பத்தேவன் (வயது 23), சந்திரசேரம் சந்திரா (வயது 50), கலைச்செல்வன் நிசாந்தினி (வயது 24), நடேசன் பிரதீபா (வயது 24), சௌதாமணி (வயது 55), நடேசன் ராஜேஸ்வரி (வயது 65), புஸ்பரசா தனுஜன் (வயது 14), வடிவேல் கதிர்காமநாதன் (வயது 60), புஸ்பராசா அருள்தாஸ் (வயது 13), கதிர்வேல் தேவதாசன் (வயது 27), நடேசப்பிள்ளை சிவகுமார் (வயது 34), நடேசப்பிள்ளை யோககுமார் (வயது 32), சின்னையா (வயது 50), கோபால் செல்வநாயகி (வயது 32), கோபால் பூபதி (வயது 67), ராஜன் வள்ளியம்மா (வயது 57), சின்னையா சூரியகுமார் (வயது 38), செல்வராசா வசீகரன் (வயது 34), சின்னையா இரத்தினம் (வயது 50), பாக்கியநாதன், றஞ்சன் வரதராசா (வயது 29), வரதராசா விமலாதேவி (வயது 29), நந்தகோபால் சரஸ்வதி (வயது 46), ஜெயரட்ணம் கலைமகள் (வயது 04), கார்த்திகேசு சிவலிங்கம் (வயது 57), செல்லம் துரைராசா (வயது 45), சோமபாலன் மகேந்திரம் (வயது 23), மகேந்திரன் யுவராணி (வயது 22), பொன்னம்பலம் பத்மநாதன் (வயது 36), பத்மநாதன் சுதர்சன் (வயது 12), ஆரோக்கியநாதன் அருளப்பு (வயது 67), கிருஸ்ணன் பத்மபூசனி (வயது 35), இரத்தினசிங்கம் வசந்தராசா (வயது 27), கிருஸ்ணன் ஜெசீரன், பத்மநாதன் செல்வமதி (வயது 26), ஜெகநாதன் கஜேந்தினி, ஜெசீரன் பத்மலோஜினி (வயது 24), வைரவநாதன் மாரியம்மா (வயது 48), செல்வரத்தினம் மகாலட்சுமி, சிவலிங்கம் சிந்து (வயது 05), சிவலிங்கம் ஜெலதா (வயது30), விஜயபாலன் கரன்திவியா (வயது 07), ஜோசப் மோகன் ரோகினி (வயது 36), ஞானசீலன் நிவேதனா (வயது 18), கிருகாபரன் மல்லிகா (வயது 47), சிதம்பரநாதன் லதுசிகா (வயது 13), சிவஞானம் மயூரன் (வயது 20), சதாசிவம் நவமணி (வயது 45), யோகேஸ் உசாநந்தினி (வயது 34), பொன்னுத்துரை வரதராணி, விநாசித்தம்பி ஜெகதீஸ்வரன் (வயது 45), க.வெற்றி (வயது 42), முருகையா யோகேஸ் (வயது 37), சிறீஸ்கந்தராசா சதீஸ்குமார் (வயது 26), தாமோதரம்பிள்ளை ரவிகரன் (வயது 35), சுப்பையா பொன்னையா (வயது 52) ஆகி யோரின் விவரங்கள் கிடைத்துள்ளன.

அதேவேளை, மாத்தளன் பகுதியில் நேற்று சனிக்கிழமை முற்பகல் 11 மணி யவில் சிறிலங்கா படையினர் நடத்திய ஷெல் தாக்குதலில் சிறுவர்கள் இருவர் உடல் கருகிய நிலையில் படுகொலை செய்யப் பட்டுள்ளதுடன் ஒருவர் காயமடைந்துள்ளார். (அ-சி)

## விடுதலைப்புலிகள்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அவற்றைத் தாக்கி விட்டனர் - என்றும் அவர் கூறியதாகத் தெரி விக்கப்பட்டுள்ளது.

தமது விமான ஓட்டிகள் விமானப் படைத்தளங்கள் மீது தற்கொலைத் தாக்குதல்கள் மேற்கொள்ளும் இலக்குடனேயே சென்றனர் என்றும் அவை வெற்றிகரமாக அமைந்தன என்றும் விடுதலைப் புலிகள் அறிவித்துள்ளனர்.

இரு வாரங்களுக்கு முன்னர் விடு தலைப் புலிகளின் விமான ஓடுபாதைகளை தாம் கைப்பற்றி விட்டனர் என்று அரசாங்கப் படையினர் அறிவித்திருந்தனர். அதன் பின்னர் விடுதலைப் புலிகள் அதிரடியாக மேற்கொண்ட தாக்குதல்கள் அரசுக்குப் பெரும் அதிர்ச்சியையும் தர்மசங்கடமான நிலையையும் ஏற்படுத்தியுள்ளதாக அவதானிகள் தெரிவித்துள்ளனர் என்று ஏ.பி.செய்தி நிறுவனம் குறிப்பிட்டுள்ளது.

## மக்களை பயங்கர....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இன்னமும் தொடர்ந்து நாளாந்தம் வடக்கின் ஒடுங்கிய பகுதிகளுக்குள் கொல்லப்பட்டுக்கொண்டிருக்கின்றார்கள்; காயமடைகின்றார்கள். அதுவே நிதர்சனம் என்று நான் அஞ்சுகின்றேன்-

ஆகவே ''இறுதி இரத்தக் களரியை'' நிறுத்த வேண்டும். நீங்கள் அதனை விரும்பிச் செய்ய வேண்டும். இல்லையேல் மக்களும் இந்த நாடும் படு பயங்கர மான நிலைக்குத் தள்ளப்படும்- ஒடுங்கிய பகுதிக்குள் அகப்பட்டுள்ள பொதுமக்களின் நிலை குறித்து ஐக்கிய நாடுகள் சபை அச்சம் கொண்டுள்ளது- என்றும் அவர் கூறினார். (அ)


வரலாறு
A/L
2010, 2011
உங்கள் ஆசிரியர்
K.சுதன்
ஆரம்பம்: 22.02.2009 (ஞாயிறு)
2010-சனி, ஞாயிறு-4p.m.
2011-சனி, ஞாயிறு-6p.m.
ஐடியல் அக்கடமி
அந்தோனியார் கோவிலடி, மானிப்பாய்.



Take an easy step towards your Management Degree

IDM JAFFNA

MBA
BBA
HND in Business Management
HNC in Business Management
DIBM

Batch Commencements
Batch 01: 27th feb 2009
Batch 02: 28th feb 2009



For Whom:-
A/L Commerce Students & senior and middle level executives in public and private sector organizations dealing with Business

Degree Awarding
➢London Metropolitan University –UK
➢York St John University – UK
➢PRIFYSGOL CYMRU University of Wales - UK
➢University of Worcester - UK
➢Wolverhampton University -UK

216, Navalar Road, Jaffna.
Tel.No : 021 2229901



கருத்தரங்கு-1
பொருளியல் - திரு. சண்
காலம்: 23.02.2009 திங்கள்
1.30 p.m. - 4.30 p.m.
வெளிமாணவர்களும் பங்கு பற்றலாம். விவரங்கள், அனுமதிகள் அலுவலகத்தில்.



உயர் கல்விக்கான
HNDA, HNDM, NDBS
Management Accounting (M.A.)
Advanced Financial Reporting(AFR)
Cost Accounting(CA)
Financial Management(FM)
என்.சதீஸ் B.B.A. (Fm.Spl)
AAT, NCAT, External Degree போன்ற வற்றுக்கான கணக்கியல் (Accounting) வகுப்புகளும் நடைபெறுகின்றன.
Medium: Tamil & English
NCA கல்வி நிலையம், இணுவில்
தொ.பே.: 0774691658







## ஆத்ம சாந்திப் பிரார்த்தனை



கனகசபாபதிக்குருக்கள் இரகுநாதக்குருக்கள் | இரகுநாதக்குருக்கள் கேசவசர்மன்

கடந்த 09.02.2009 இறைபதம் எய்திய கனகசபாபதிக்குருக்கள் இரகுநாதக்குருக்களாகிய இவர் காலஞ்சென்ற கனகசபாபதிக்குருக்கள் அழகம்மா அவர்களின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான நாராயண ஐயர் லோகாம்பாளின் அன்பு மருமகனும் ருக்மணி பாமாவின் அன்புக் கணவரும் நாகபூஷணி, கமலாதேவி, காந்தி, கிருஷ்ணநாதசர்மா ஆகியோரின் சகோதரனும் கேசவசர்மன், வாசவசர்மன், தனுஷா, அனுஷா ஆகியோரின் அன்புத் தந்தையும் ஆகிய இவரதும் மற்றும் 10.02.2009 அன்று இறைபதம் எய்திய இ.கேசவசர்மன் ஆகிய இவர் தர்ஷிகாவின் அன்புக் கணவரும் அர்ச்சனாவின் அன்புத் தந்தையுமாகிய இவரதும் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

தகவல்:
இ.வாசவசர்மன், சோ.நாகபூஷணி
குடும்பத்தினர்.
நல்லூர்.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 22.02.2009 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.